
# அனர்த்த முகாமைத்துவம் ஒரு அனுபவ அணுகுமுறை



ச. அருளானந்தம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனர்த்த முகாமைத்துவம் ஒரு அனுபவ அணுகுமுறை

ச. அருளானந்தம்

அனுசரனை

ofERR (CEYLON)

ஒபர் (சிலோன்)
திருகோணமலை

christian aid

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூற்பட்டியல் விபரம்


| | | |
|---|---|---|
| நூல் | : | அனர்த்த முகாமைத்துவம்<br>ஒரு அனுபவ அணுகுமுறை |
| விடயம் | : | அனர்த்த முகாமைத்துவம் |
| ஆசிரியர் | : | ச.அருளானந்தம். |
| உரிமை | : | ஆசிரியருக்கு |
| வெளியீடு | : | அருள் வெளியீடு.<br>37/7, மத்திய வீதி, உவர்மலை,<br>திருகோணமலை. |
| தொ. பே. இல | : | 026 - 2221507 |
| முதற்பதிப்பு | : | 08-09-2008 |
| அச்சகம் | : | நிஷான் பிரின்டர்ஸ் |
| கிடைக்குமிடம் | : | லங்கா புத்தகசாலை |
| விலை | : | |
| ISBN | : | 978-955-98211-9-9 |


## சமர்ப்பணம்

சகல அனர்த்தங்களுக்கும் உள்ளாகி அல்லல் பட்டவர்களுக்கும், அவற்றுள் சிக்கி அள்ளுண்டு உயிர் நீத்தவர்களுக்கும் அவற்றால் அனாதைகள் ஆனவர்களுக்கும் இந்நூல் சமர்ப்பணம்.

ஆ - ர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உள்ளே...

பகுதி ஒன்று.

- அனர்த்தம் ஒரு அறிமுகம்

பகுதி இரண்டு

- அனர்த்த முகாமைத்துவம்

பகுதி மூன்று.

- பாடசாலைப் பாதுகாப்பு

பகுதி நான்கு.

- ஓபர்(சிலோன்) நிறுவனத்தின் அணுகுமுறை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை



உலக நாடுகள் இன்று ஏதோ ஒரு வகையில் இடர்பாடுகளில் சிக்கித் தவிக்கின்றன. ஒரு நிகழ்வு அல்லது விபத்து ஏற்பட்டு அதனால் விளையும் துயரினில் இருந்து விடுபடத் துடிக்கின்றன. இயற்கையின் பேரிடர்களான புவிநடுக்கம், எரிமலைச் செயற்பாடு, வெள்ளம், இடிமின்னல், புயல்கள். வரட்சி போன்றன உலக நாடுகளைத் தாக்கி அனர்த்தங்களை உருவாக்குகின்றன. இயற்கையினால் ஏற்படும் அனர்த்தங்கள் மட்டுமல்ல. மனிதனாலும் அனர்த்தங்கள் ஏற்படுகின்றன. அபிவிருத்தி என்ற போர்வையில் உற்பத்திகளைப் பெருக்கும் நோக்கோடு முன்னெடுக்கப்படும் அனைத்து முயற்சிகளும் அனர்த்தங்களுக்கு அடித்தளமிடுகின்றன. யுத்தம் நாடுகளை உலுக்கிப் பேரனர்தங்களை உருவாக்கி வருகின்றன.

அனர்த்தம் அபிவிருத்தி நடவடிக்கைகளில் பாரதூரமான அச்சுறுத்தல்களைப் புகுத்துகிறது. மரணங்களை விளைவிக்கிறது. குடிப்பெயர்வுகளை ஏற்படுத்துகிறது. பௌதீக, சூழல் பொருளாதார சேதங்களையும் இழப்புக்களையும் உருவாக்கிறது. உள்ளத்தையும் உடலையும் உடமைகளையும் தாக்கவல்லது. சமூக உறுதிப்பாட்டினையும், அருந்தலாக உள்ள வளங்களையும் அழிக்கிறது. அவசர தேவைகளுக்கு வளங்களைப் பயன்படுத்த முடியாமல் ஒரு சவாலாக அமைகிறது. அனர்த்தங்களைச் சமாளிப்பதற்காக உலகப் பொருளாதாரத்தில் ஒரு வருடச் செலவீனம் 880 பில்லியன் அமெரிக்க டொலர்கள் செலவளிக்கப்படுகிறது எனக் கணக்கிடப்பட்டுள்ளது.

இவை அனைத்தையும் கவனத்திற் கொண்டு ஒபர்(சிலோன்) நிறுவனம் அனர்த்த முகாமைத்துவக் கோட்பாட்டினைப் புரிந்து கொண்டு தனது செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்கின்றது. அனர்த்த முகாமைத்துவத்தின் ஊடாக அதனை எதிர்கொண்டு வாழும் வலுவுள்ள சமூகத்தை உருவாக்குவதன் மூலம், மக்களைப் பயனுள்ள செயற்திறன் மிக்க பங்காளிகளாக்குவதே ஒபர் (சிலோன்) நிறுவனத்தின் குறிக்கோளாகும். இதனைப் புரிந்து கொண்டு அனர்த்த முகாமைத்துவ அலகின் ஆலோசகர் திரு.ச.அருளானந்தம் இந்த நூலை எழுதியுள்ளார். இந்நூல் நான்கு பகுதிகளைக் கொண்டுள்ளது. முதலாவது பகுதி அனர்த்தங்களைப் பற்றியது. அனர்த்தம், அதனால் ஏற்படும் விபரீதங்கள், பாதிப்புற்ற பிரதேசங்கள் பற்றிய அறிவைத் தருகிறது. இரண்டாம் பகுதி அனர்த்த முகாமைத்துவம் பற்றியது. மூன்றாவது பாடசாலைச் சமூகம் சார்ந்தது. நான்காவது ஒபர் (சிலோன்) பற்றிய சிறுகுறிப்பாகும். இவை யாவும் நல்ல பயனுடையதாக அமைந்துள்ளன. இந்த நூலை எழுதுவதற்கு உறுதுணையாகப் பல அறிஞர் பெருமக்களது நூல்களையும், பாடப்புத்தகங்களையும, இணைய தளங்களையும் பயன்படுத்தியுள்ளார். இந்நூல் பல பயனுள்ள விடயங்களைக் கொண்டுள்ளது. அனைவருக்கும் பொருத்தமானது. படித்துப் பயன்பெற எனது வாழ்த்துக்கள்.

செல்வி.எஸ்.சூரியகுமாரி.
தலைவி
ஒபர்(சிலோன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனது உரை

இன்று அனர்த்தம் பற்றிப் பலவாறு பேசப்படுகிறது. பட்டறிவின் நிமித்தமாக உயிர்களையும், உடமைகளையும் அழிவிலிருந்து பாதுகாக்கும் நடவடிக்கைகளில் பல்நாட்டு அரசுகளும் கரிசனை காட்டுகின்றன. அனர்த்தம் உலகம் தோன்றிய காலத்திலிருந்தே தொடங்கி விட்டது. நாம் வாழும் சூழல் நமக்கு உதவிகளை வழங்கிப் பாதுகாக்கிறது. ஆனால் நாம் இயற்கைச் சூழலை மதிப்பதில்லை. அதனைப் போற்றுவதில்லை. மாசுபடுத்துகிறோம். இயற்கை மாசுபடுத்தப்படுகிறது. இயற்கை சமனற்ற நிலையை அடைகிறது. அதனால் அனர்த்தங்கள் தோன்றுகின்றன. அவை தவிர்க்க முடியாதவை. அவற்றை நம்மால் தடுக்கமுடியாது. ஆனால் அவதானமாக தயார்நிலையில் இருந்தால் அழிவிலிருந்து நம்மைக் காப்பாற்றிக் கொள்ளலாம். அழிவுகளைக் குறைத்துக் கொள்ளலாம்.

தயார்நிலை என்பதென்ன?

முன்கூட்டியே உணவு தயாரித்திருந்தால்தான் நாம் உரிய நேரத்துக்கு உண்ணலாம். உரிய பொருட்கள் இருந்தால்தானே உணவைத் தயாரிக்கலாம். என்னென்ன பொருட்கள் தேவை என்பதனை அறிந்திருந்தால்தானே அவற்றை வாங்கி வைக்கலாம். இப்படியே அடுக்கிக் கொண்டு போகலாம். கிராமப்புறங்களில் தங்களது வேலைகளைச் செய்து கொள்வதற்குத் தேவையான பொருட்களைத் தேடி வைத்திருப்பதைக் காணலாம். காலத்தை அறிந்து வைத்து அதற்கேற்ப அவர்கள் செயற்படுவார்கள். ஆடிமழை பெய்ததும் தேடிஉழவு செய்வார்கள். விதைப்புக்கு வேண்டிய பொருட்களைத் தேடிக்கொள்வார்கள். ஆயத்தநிலையில் இருப்பார்கள். படிப்படியாக வேலைகளை முடித்து மழை பெய்யத் தொடங்கியதும் தயார்நிலையிலிருந்து விதைப்பார்கள். இவ்வாறு எதனையும் திட்டமிட்டுச் செயற்படுத்துவதற்கு ஆயத்தமாக இருப்பதனையே தயார்நிலை எனலாம். அனர்த்தங்களின்போதும் பாதிப்புக்குள்ளானவர்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்வதற்கு எப்போதும் நாம் நம்மை ஆயத்த நிலையில் வைத்துக் கொள்வதனையே அனர்த்தத் தயார்நிலை என்கின்றோம்.

நம் நாட்டுக்கல்வித் திட்டத்தில் அனர்த்தங்கள் பற்றிய விழிப்புணர்வுச் சிந்தனைகள் புகுத்தப்பட்டுள்ளன. 2004 டிசம்பர் மாதம் சுனாமி என்ற பெயரில் அழிவினை ஏற்படுத்திய கடற்கோள் அனர்த்த முகாமைத்துவக் கல்விக்கு அடித்தளமிட்டுள்ளது. அரசு பல மட்டங்களிலும் அனர்த்த முகாமைத்துவக் கட்டமைப்புக்களைச் செயற்படுத்தி வருகிறது. அமைச்சு மட்டத்தில் இருந்து கிராமிய அடித்தளம் வரைக்கும் இந்தக் கட்டமைப்புச் செல்வதை அவதானிக்கலாம். மாணவர்களின் அறிவினைத் தூண்டவும் தயார்நிலைக்கு இட்டுச் செல்லவும் ஆரம்ப வகுப்பிலிருந்தே தொடங்குவதற்கேற்ற ஆயத்தங்கள் தொடங்கப் பட்டுள்ளன. மூன்றாம் வகுப்பில் பாதுகாப்பும் கரிசனையும் எனத் தொடங்கி க.பொ.த(சா த) வகுப்பில் அனர்தங்களை விரிவாகத் தந்து எவ்வாறு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழிவுகளைக் குறைத்துக் கொள்ளலாம் என்ற வழிமுறைகளும் விளக்கப்பட்டுள்ளது. பள்ளிக்கூடங்கள் தொட்டு பல்கலைக்கழகங்கள் வரை பாடத்திட்டத்தில் இடம்பிடித்துள்ள அனர்த்த முகாமைத்துவம் நமது மக்களுக்கு இன்றியமையாதது. ஒவ்வொரு தனிமனிதனுக்கும் அனர்த்த முகாமைத்துவச் சிந்தனை சென்றடையவேண்டும். எப்போதும் தயார்நிலையில் இருக்க வேண்டும். துரதிஸ்டவசமாக நமது நாடு வித்தியாசமான அனர்த்தத்தின் பிடியில் சிக்கி நாளை என்ன நடக்குமோ? என்ற நிலையில் உள்ளது.

இன்றைய மனிதன் மானிடத்தை அழிப்பதில் உன்னிப்பாக இருக்கிறான். விஞ்ஞானப் புதுமைகளை அழிவுக்காகவே பயன்படுத்துகிறான். இன்று நாம் வாழும் உலகம் அனர்த்தம் நிறைந்ததாக மாறிவிட்டது. அனர்த்தங்கள் நம்மைத் தொடர்ந்து துரத்தி வருகின்றன. அவற்றில் இருந்து நம்மை நாம் காப்பாற்றிக் கொள்வதோடு, நாம் வாழும் சூழலையும், நம்மோடு சேர்ந்து வாழும் அயலவரையும் காப்பாற்றும் முயற்சியில் ஈடுபடவேண்டும். அனர்த்தங்கள் எவ்வாறு தோன்றுகின்றன? எப்போது எவ்விடத்தில் தோன்றுகின்றன?. அதனால் ஏற்படும் தாக்கங்கள் எப்படிப் பட்டவை. அதற்காக நாம் என்ன செய்ய வேண்டும்? என்பவற்றை அறிந்து கொள்ளவேண்டும். நாம் பயிற்சிகளைப் பெற்று தயார்நிலையில் இருக்க வேண்டும்.

இந்த நூலில் பலவற்றை உள்ளடக்கியுள்ளேன். அனர்த்தங்கள் பற்றிய விபரங்கள், சுனாமித் தாக்கத்தரவுகள், அனர்த்தங்களுக்கு உள்ளான நாடுகள் போன்றவற்றை இந்நூல் கொண்டுள்ளது. தேடல்களுக்கு இந்நூல் பயனுடையதாக அமையும் என எதிர்பார்க்கின்றேன். இந்த நூலை எழுதுவதற்குத் தூண்டுகோலாக இருந்த ஒபர் (சிலோன்) நிறுவனத்தின் தலைவி செல்வி எஸ். சூரியகுமாரி அவர்கள் பெருநன்றிக்கு உரியவர்கள். அவர்தான் இந்த நல்முயற்சியினை மேற்கொள்ளுமாறு வற்புறுத்தினார். என்னை 'கிறிஸ்ரியன்எயிட்ஸ்' ஊடாக இந்தியாவுக்கு அனுப்பி அனுபவங்களைப் பெறவும் பகிர்ந்து கொள்ளவும் நல்லதொரு வாய்ப்பினை ஏற்படுத்தித் தந்தவர். அவருக்கு எனது மனமார்ந்த நன்றி. என்னை பற்றிப் பின்னட்டையில் எழுதியுள்ள ஒபர் (சிலோன்) நிறுவனத்தின் நிர்வாக அலுவலர் திரு. த. பாலகங்காதரன் அவர்களுக்கும் அட்டைப்படம் வடிவமைக்க உதவிய செல்வி ப. மேரிசாந்தி, எஸ். ராஜினி, திரு. D. R. மைக்கல், அத்துடன் இந்நூலை எழுதத் திட்டமிட்டுதவிய திட்ட அலுவலர் செல்வி எம். சிவகௌரி, மாவட்ட திட்ட முகாமையாளர் திரு. என். நிசாந்தன் அவர்களுக்கும் அழகுற அச்சிட்ட நிசான் பிரின்டர்ஸ் அலுவலர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகள். தரவுகளுக்காகப் பலவகையான நூல்களையும், சஞ்சிகைகளையும் வலைப்பின்னல்களையும் பயன்படுத்தியுள்ளேன். அவற்றுக்குரியவர்கள் நன்றிக்குரியவர்கள்.

ச.அருளானந்தம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதற் பகுதி

## அனர்த்தம் ஒரு அறிமுகம்

**இவை நமது சிந்தனைக்கு!**

அது மிகப்பின்தங்கிய கிராமம். போரினாலும் சுனாமியினாலும் பாதிக்கப்பட்ட மக்கள் வாழும் இடம். எமது நிறுவனம் அந்தக் கிராமத்தில் சமூகசேவையில் ஈடுபட்டுள்ளது. அன்றும் அப்படித்தான். சேவைகளை முடித்துவிட்டுப் புறப்படும் நேரம். மழை கொட்டிக்கொண்டிருந்தது. எங்கள் வேலைகளை முடித்துக் கொண்டோம். வாகனத்தில் ஏறியதும் வாகனம் புறப்பட்டது. பாதை குன்றும் குழியுமாக மழைநீரால் மூழ்கியுள்ளது. மழைநீரை வாரியடித்த வண்ணம் வாகனம் சென்றுகொண்டிருந்தது. பாதிவழியில் இரண்டு பெண்கள் வாகனத்தை இடைமறித்தார்கள். பதட்டத்தோடு நின்றார்கள். வேறு வழியில்லை. வாகனம் நின்றது. ஒரு பெண்ணின் கையில் குழந்தை. மற்றப்பெண் குழந்தையின் தாய். அவள் ஓலமிட்டவாறு 'என் குழந்தையைக் காப்பாற்றுங்கள்' எனக்கதறினாள். வாகனக் கதவு திறபட்டதும் இருவரும் ஏறிக்கொண்டனர். கொட்டும் மழையில் தொப்பமாக நனைந்திருந்தனர். குழந்தைக்குக் காய்ச்சல் வந்திருக்கிறது. கவனமின்றி இருந்து விட்டனர். காய்ச்சல் முற்றி வலிப்பு ஏற்பட்டுவிட்டது. கைகால்கள் உதறத் தொடங்கிவிட்டன. அதன்பின்தான் உணர்ந்துள்ளார்கள். கதறியழுதார்கள்.

அரைமணித்தியாலத்துக்கு முன் அவர்கள் சந்தோசமாக இருந்தார்கள். குழந்தையின் சுகவீனம் அவர்களது சந்தோசத்தைத் தொலைத்து விட்டது. மனமுடைந்து பெரிதும் வருந்தினார்கள். அவர்கள் அழுகை பார்ப்போரை உருகச்செய்தது. மழைத்தூறலில் குழந்தை நனைந்திருந்தது. அது குழந்தையின் சூட்டைத் தணிக்க உதவியாயிற்று. முதலுதவி கொடுத்து உதவினோம். பக்கத்து மருத்துவ மனையில் மருத்துவர்கள் இல்லை. 48 கிமீ. தூரத்தில் ஆதார மருத்துவமனை இருந்தது. வாகனம் விரைந்து சென்றது. தாயின் முகத்தில் துயரத்தின் எல்லை தெரிந்தது. ஒருவாறு மருத்துவ மனையில் சேர்த்தோம். குழந்தைக்கு உடல்நிலை தேறிவிட்டது.

குழந்தைக்கு ஏன் இந்தநிலை ஏற்பட்டது? குழந்தையைச் சரியாகக் கவனித்திருந்தால் இந்நிலை ஏற்பட்டிருக்குமா?
வாகனம் உரிய நேரத்துக்குக் கிடைத்திராவிட்டால் என்ன நடந்திருக்கும்.?
ஏன் குழந்தையை அந்தத் தாய் கவனிக்கவில்லை.?
பெருமழை என்று தெரிந்தும் ஏன் பக்கத்து வீட்டுப்பெண் குழந்தையைத் தூக்கிக் கொண்டு ஓடிவந்தார்.?
தாய் தன்மடியில் ஏன் குழந்தையை வைத்திருக்கவில்லை?

இதனையிட்டுச் சிந்தியுங்கள். தாளில் எழுதிப்பாருங்கள். விவாதியுங்கள். (சற்று விவாதிப்போம்.)

நாம் இயற்கையைச் சற்று எண்ணிப் பார்ப்போமா?

கறையானும் தேனிக்களும் ஏன் உணவைச் சேகரித்து வைக்கின்றன?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒவ்வாத காலங்களில் இடர்களில் சிக்காது உண்டு வாழ்வதற்காக. அல்லவா?

மரஞ்செடி கொடிகளைப் பாருங்கள். கிழங்கு வகைகளைப் பாருங்கள். அவையும் அவ்வாறுதான். இடரான அல்லது வாழமுடியாத ஒவ்வாத காலங்களில் துயரில் இருந்து தம்மைக் காப்பாற்றிக் கொள்வதற்காகத்தான். முன்னாயத்தத் தயார் நிலையினைத் தேடிக் கொள்கின்றன.

விலங்குகளின் உடலமைப்பைப் பாருங்கள்.
பறவைகளின் உடலமைப்பைப் பாருங்கள்.
ஒரு மிருகத்தைத் தூக்கித் தண்ணீருள் போடுங்கள். அதன் தலை நீரின்மேல் தெரியும். உடல் மிதக்கும். அவ்வாறான உடலமைப்பை இறைவன் கொடுத்துள்ளான்.
ஒரு பறவையைத் தூக்கித் தண்ணீருள் போடுங்கள். ஓடம்போல் மிதக்கும். தலை நீரின்மேல் தெரியும். உடலை இறகுகள் நீரிலிருந்தும் குளிரில் இருந்தும் காப்பாற்றும்.
ஒரு மனிதனைத் தூக்கித் தண்ணீருள் போடுங்கள். நடப்பதை எண்ணிப் பாருங்கள்.
உடலமைப்பின் தன்மையைப் புரிந்து கொள்ளுங்கள். இயற்கையின் தாக்கத்துக்கு அமைவாகத் தாக்க விளைவுகளில் இருந்து தம்மைக் காப்பாற்றிக் கொள்வதற்கேற்ற வகையில் இயற்கையின் கொடை அமைந்துள்ளது. இறைவன் மனிதனுக்குச் சிந்திக்கும் ஆற்றலைக் கொடுத்துள்ளான். இவற்றைப் பற்றிச் சற்றுச் சிந்திப்போம்.
இயற்கையின் படைப்பின் சூட்சுமம் அல்லது தத்துவம் வியக்கத்தக்கது. இதற்கு அல்லது இந்த ஆற்றலுக்கு யார் பொறுப்பு?. பொறுப்பாயிருக்கும் சக்தியை இறைவன், கடவுள் என்று அழைப்பார்கள். எது எப்படி இருப்பினும் இந்த உலகத்தில் ஆறறிவு படைத்த மனிதனால்தான் அனர்த்தங்கள் அதிகரிக்கின்றன. மனித மூளை விசித்திரமானது. அந்த மூளையின் செயற்பாடுகளைக் கட்டுக்கோப்பில் ஒழுங்குபடுத்தி சீரிய வழியில் செயற்படுத்தினால் உலகத்தில் நன்மைகள் விளையும். அதற்கு மனிதன் முயற்சிக்க வேண்டும். தன்னை உணர்ந்து ஆன்மீக வழிகளில் கவனம் செலுத்த வேண்டும்.

ஆதியில் மனிதன் நாடோடியாகத்தான் திரிந்தான். வேட்டையாடி வாழ்ந்தான். பின் விலங்குகளை வளர்க்கத் தொடங்கினான். விவசாயம் செய்யக் கற்றுக்கொண்டான். நிரந்தரமாகக் குடியிப்புக்கள் தோன்றின. அனுபவமும் அறிவும் துணையாகியன. இயற்கை அனர்த்தங்களைத் தவிர வேறு அனர்த்தங்களை மனிதன் சந்திக்கவில்லை. சிந்தனை விரிந்தது. இருண்ட மூளையில் ஒளி பரந்து விரிந்தது. மனித இனம் பெருகியது. நாடுகாண் படலம் தொடங்கி வல்லரசுகள் உருவாகின. நவநாகரீகம் நடமாடத் தொடங்கியது. சுயநலம் மனித மனங்களில் புகுந்து கொண்டது. நாசவேலைகளும் தொடர்ந்து எல்லாவிதமான துன்பங்களும், துயரங்களும் சூழ்ந்து கொண்டன. மனிதன் நிர்க்கதிநிலைக்குத் தள்ளப்பட்டான். பிறரது உதவி இல்லாது வாழமுடியாத துர்ப்பாக்கியமான சூழல் உருவாகியது. .இயற்கையின் சமநிலைத் தன்மை நிலைகுலைந்து போனது. அதனால் இடர்களை அனுபவிக்கின்றோம். நமது இயலுமைத் தன்மை வலுவிழந்து போயிற்று. இயலுமைத் தன்மை வலுவிழந்தால் வாழமுடியுமா? வெளியிலிருந்து பிறரது உதவியை நாடவேண்டியுள்ளது. இலகுவில் பாதிப்புக்களில் சிக்கிவிடுகிறோம்.

ஒன்றுக்குமே வழியில்லாத நிலையினைத் தோற்றுவித்த காரணி என்ன? சகல வசதிகளோடும், வலுவாகச் சமாளிக்கக் கூடிய நிலையில் ஒருக்கால் இருந்தோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் ஏதோ ஒரு சங்கடமான சூழ்நிலையால் சகலதையும் இழந்து நிர்க்கதியாக நிற்கிறோம். இவ்வகையான பேரிடர்களை அனர்த்தம் என்பார்கள். 'அர்த்தம்' என்பது பொருளுள்ள நிலை. அனர்த்தம் என்பது பொருளற்ற நிலை. அதாவது நமது இருப்புக்கு அர்த்தமே இல்லை என்பதாகும்.

அனர்த்தங்கள் என்றால் என்ன?
அதனால் ஏற்படும் விளைவுகள் என்ன?
அனர்த்தங்கள் எப்படித் தோன்றுகின்றன?
எவ்வாறு தோன்றுகின்றன?
எங்கே.. எவ்விடத்தில் தோன்றுகின்றன?
எப்போது தோன்றுகின்றன?
அனர்த்தங்கள் தோன்றுவதற்குரிய காரணங்கள் என்ன?
அதனால் ஏற்படும் விளைவுகள் என்ன?
அவற்றில் இருந்து தப்ப முடியுமா?

என்ற வினாக்களுக்கு விடை தேடவேண்டும். கண்டு கேட்டு அவற்றிலிருந்து தப்பித்துக் கொள்ளும் வழிகளை அறிந்து அனுபவசாலிகளின் துணையோடு பயிற்சியில் ஈடுபடவேண்டும். நம்மை எப்போதும் தயார்நிலையில் வைத்துக் கொள்ள வேண்டும். இடர்களை நமது ஆற்றலினால் குறைத்துக் கொள்ள வேண்டும். இவ்வகையான செயற்பாடுகளைத்தான் இடர்முகாமைத்துவம் என்றும் இடர்குறைத்தல் என்றும் அழைப்பார்கள். ( DMP , CBDRM ) இன்று உலக நாடுகள் இம்முயற்சியில் ஈடுபட்டு அனர்த்தங்களில் இருந்தும், அதனது தாக்கத்தில் இருந்தும் வரும் விளைவுகளைக் குறைத்துக் கொள்ள அல்லது தப்பிக்கொள்ளும் வழிவகைகளில் கட்டமைப்புக்களை உருவாக்கி உழைக்கின்றன.

## அனர்த்தம் என்றால் என்ன?

பேராபத்தும் இயலாமையும் சேர்ந்து உருவாக்குவதே அனர்த்தம் ஆகும். இடர், இடைஞ்சல், இடையூறு, ஆபத்து, ஆகியவற்றால் ஏற்படும் ஒரு விளைவு அல்லது நிர்க்கதியான அவல நிலைதான் அனர்த்தம் ஆகும். அனர்த்தம் அவலநிலைக்குத் தள்ளி பெருந் துயரத்தைத் தருவது. நமது இயல்புநிலை சீர்குலைந்து அன்றாட கட்டமைப்பு வாழ்க்கையைக் கையாளும் திறனற்ற நிலைக்குள் தள்ளிவிடுகிறது. இலகுவாகப் பாதிப்புக்குள்ளாகி வெளியுதவிகளில் தங்கியிருக்கும் சூழ்நிலையை உருவாக்குகிறது. இதனை இவ்வாறு பேரிடர் + இயலாமை = 'அனர்த்தம்' எனக் காட்டலாம். பேரிடரும் இயலாமையும் சேர்ந்ததுதான் அனர்த்தமாகும். பொதுவாக ஒரு பேரிடர் அல்லது இடையூறு அழிவை அல்லது அவலத்தைக் கொடுக்கும். அந்த அவலம் அனர்த்தத்தை விளைவிக்கும். அனர்த்தங்கள் அவலத்தைத் தருவன. நெருக்கடி நிலைகளை உருவாக்குவன. பாரிய குடிப்பெயர்வை ஏற்படுத்துகின்றன. பேரிடரைத் தந்து சவாலாக மாறுகின்றன.

எந்த ஒரு நெருக்கடி நிலையும் பாரிய குடிப்பெயர்வை ஏற்படுத்துவதை அவதானிக்கலாம். மக்கள் பெரும் சிக்கல்களுக்குள் தவிக்கின்றார்கள். அதிகமாகப் பாதிக்கப் படுபவர்கள் பெண்களும் குழந்தைகளும்தான் என்று ஆய்வுகள் கூறுகின்றன. இலங்கையில் 2004 டிசம்பரில் நடந்த சுனாமியின் போது உயிரிழந்தவர்களில் 36% வீதமானவர்கள் பெண்களும், குழந்தைகளும் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. சுனாமியினால் யாவற்றையும் இழந்த மக்கள் நிர்க்கதியான நிலையில் முகாம்களில் முடக்கப்பட்டனர். அகதி நிலைக்குத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தள்ளப்பட்டனர். அவர்கள் எதிர்நோக்கும் ஆபத்திலிருந்து விடுபட சிரமப்படுகிறார்கள். போரினால் உயிர்தப்பினால் போதும் என்று ஒதுங்குகிறார்கள். நெருக்கடி நிலையில் சிக்கித் தவிக்கிறார்கள். நெருக்கடி நிலை சரியாக முகாமைத்துவம் செய்யப்படாவிட்டால் அது தொடர்ந்து அழிவுகளை ஏற்படுத்தும். பெரிய அனர்த்தமாக மாறிவிடும்.

ஆகவே இச் செயலனைத்தினதும் விளைவே அனர்த்தம் எனக் கூறலாம். தாக்கம் உள்ளத்தையோ, உடலையோ, அல்லது உடமைகளையோ பாதித்திருக்கலாம். அதனால் ஏற்படுகின்ற அவல நிலைதான் அனர்த்தம் ஆகும். அனர்த்தத்துக்கு ஏதோ காரணம் பின்னணியில் இருக்கும். அந்தக் காரணத்துக்கேற்ப அனர்த்தமும் கனதியாக இருக்கும்.

### விலங்குகள் முன்கூட்டியே அறிகின்றனவா?

இயற்கைப் பேரழிவுகள் ஏற்படவிருப்பதை விலங்குகள் முன்கூட்டியே அறிந்து கொள்கின்றன என விஞ்ஞானிகள் கருதுகின்றனர். உதாரணமாக இலங்கையின் மட்டக்களப்பு வாவியில் சுனாமி தோன்றுவதற்கு இரண்டு மூன்று கிழமைகளுக்கு முன் பல்வகை நிறங்களில், சிறிதும் பெரிதுமாக கடற்பாம்புகள் ஏராளமாக நிறைந்து காணப்பட்டதாகப் பத்திரிகைகள் தெரிவித்தன. அப்பொழுது அதிசயமாகப் பார்த்த மக்கள் பேரழிவின் எதிர்வு கூறலாக எடுத்துக்கொள்ளவில்லை.

வழமையாக அனர்த்தங்கள் அழிவுகளையும் உயிர் இழப்புகளையும் ஏற்படுத்துகின்ற திடீர் நிகழ்வுகளாக காணப்படுகின்றன. இவ்வாறான இயற்கை அனர்த்தங்களைக் கடவுள் வழங்கும் தண்டனை என்றும் கூறுவார்கள். அபாயம், ஆபத்து, இடர், அனர்த்தம் என்ற சொற்பயன்பாடுகளைச் சரியாகப் புரிந்து கொள்ள வேண்டும். அபாயம் அல்லது ஆபத்து என்பது வாழ்க்கை, வாழ்வாதாரம், பழக்கவழக்கம் போன்றவற்றிற்கு ஊறு விளைவிக்கும் தன்மை கொண்டன எனப் பொருள்படும். கடுமையான அல்லது வேகமான காற்று, வெள்ளப் பெருக்கு, மண்சரிவு, வரட்சி. பூகம்பம் போன்றன இயற்கை ஆபத்துக்களாகும். இயற்கை ஆபத்துக்களைத் தடுக்க முடியாது. அதன் விளைவாக அழிவுகள் தோன்றுகின்றன. பெரிய இடர்களைத் தருகின்றன. இவை அனர்த்தங்களாக மாறுகின்றன. அப்படியாயின் ஒரு இடர் பேராபத்தை உருவாக்கி அதன் தாக்க விளைவாக பெருமழிவை ஏற்படுத்தலை அனர்த்தம் (Disaster, Hazard) என வரையறை செய்யலாம். அனர்த்தங்களால் ஏற்படும் விபரீதங்கள் அழிவுகளையும், பெருந்துயரங்களைக் கொடுப்பன.

அனர்த்தம் அபிவிருத்தி நடவடிக்கைகளில் பாரதூரமான அச்சுறுத்தல்களைப் புகுத்துகிறது. • மரணங்களை விளைவிக்கிறது. பௌதீக, சூழல் பொருளாதார சேதங்களையும் இழப்புக்களையும் உருவாக்கிறது. உள்ளத்தையும் உடலையும் உடமைகளையும் தாக்கவல்லது. • சமூக உறுதிப்பாட்டினையும், அருந்தலாக உள்ள வளங்களையும் அழிக்கிறது. அவசர தேவைகளுக்கு வளங்களைப் பயன்படுத்த முடியாமல் ஒரு சவாலாக அமைகிறது. அனர்த்தங்களைச் சமாளிப்பதற்காக உலகப் பொருளாதாரத்தில் ஒரு வருடச் செலவீனம் 880 பில்லியன் அமெரிக்க டொலர்கள் செலவளிக்கப்படுகிறது எனக் கணக்கிடப்பட்டுள்ளது. அனர்த்தம் பல வழிகளில் தோன்றலாம். அவை சடுதியாகவோ அல்லது மெதுவாகத் தோன்றலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அனர்த்த வகைகள்

அனர்த்தங்களை இரு பெரும் பிரிவுகளாக வகைப் படுத்தலாம்.

1) இயற்கை அனர்த்தம்.

2) செயற்கை அனர்த்தம்.(மனிதனால் ஏற்படுத்தப்படுபவை)

### இயற்கை அனர்த்தம்

இயற்கை அனர்த்தங்கள் தானாகவே ஏற்படுகின்றன. ஏன் அல்லது எதற்காக அவை தோன்றுகின்றன? இவை புரியாத புதிராகவே உள்ளன. அவை புவிக் கோளவகத்தின் உள்ளே அல்லது வெளியே தோன்றுகின்றன. புவிநடுக்கம் அல்லது புவியதிர்ச்சி, எரிமலைச் செயற்பாடுகள், புவியினுள் உருவாகி வெளியில் தாக்கத்தை உண்டாக்குகின்றன. புவியின் வெளியில் வளிமண்டலத்தில் உருவாகி தாக்கத்தைத் தருவனவாக, வெள்ளம், மண்ணரிப்பு, வரட்சி, புயல், இடிமின்னல், சுனாமி, HIV/AIDS, தொற்றுநோய்கள் போன்றன உள்ளன. இவை யாவற்றையும் இயற்கை அனர்த்தங்களில் அடக்கலாம்.

### செயற்கை அனர்த்தம்

மனிதனால் உருவாக்கப்படும் அனர்த்தங்களை இவற்றுள் அடக்கலாம். இதற்கு உதாரணமாக அபிவிருத்தி நடவடிக்கைகள், யுத்தம் போன்றவற்றைக் கூறலாம். இன்று குடித்தொகைப் பெருக்கத்தால் தேவைகள் அதிகரித்துச் செல்கின்றன. அத்தேவைகளை ஈடு செய்வதற்காக நவீன தொழில் நுட்பப்பயன்பாடு அதிகரித்துச் செல்வதை அவதானிக்கலாம். காடுகள் அழிக்கப்படுகின்றன. வீதிகளும். புதிய கட்டிடங்களும் அமைக்கப்படுகின்றன. உற்பத்தியைப் பெருக்க வேண்டிய தேவை ஏற்படுகின்றது. இயற்கை தனது இயல்பு நிலையிலிருந்து மாறுபடுகின்றது. சமநிலை குலைவதால் சூழலில் தாக்கம் உருவாகிறது. இச்செயற்பாடுகள் அனர்த்தங்கள் ஏற்பட வித்திடுகின்றன. இவை செயற்கை அனர்த்தங்களாகும்.


## எவை அனர்த்தங்கள்?

மனிதன் தனக்கு அவலத்தைத் தரும் செயற்பாடுகளைத்தான் கவனத்தில் கொள்வான். மனிதர்கள் வாழாத பிரதேசங்களில் என்ன நடந்தாலும் அதனையிட்டு மனிதன் அலட்டிக் கொள்வதில்லை. உதாரணமாக துருவப் பகுதிகளில் அல்லது சமுத்திரப் பரப்புக்களில் எவை நடந்தாலும் அவை மனிதநடவடிக்கைகளைப் பாதிக்காதவரை அவற்றைக் கவனத்தில் எடுத்துக் கொள்வதில்லை. அவற்றைப் பற்றி அதிகம் சிந்திப்பதுமில்லை. அழிவினை ஏற்படுத்தும் அனர்த்தங்களைப் பற்றி அறிந்திருத்தல் பேருதவியாக இருக்கும். அப்படி அறிவதால் அந்த அனர்த்தங்களினால் ஏற்படும் அவலங்களையும், அவற்றை எப்படிச் சமாளிக்கலாம் என்பதையிட்டும் திட்டமிடலாம். எதிர்காலத்தில் இப்படியான சந்தர்ப்பங்களில் என்ன செய்யலாம்? எவ்வாறு அவலங்களைக் குறைக்கலாம் எனத் தீர்மானிக்கலாம். அதனால் புவிக்கோளத்தில் நடந்தேறிய அனர்த்தங்களைத் தொட்டுக் காட்டுவது பொருத்தமாக இருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயற்கை அனர்த்தங்கள் புவிக்கோளவகத்தின் உள்ளும், வளி மண்டலத்திலும் தோன்றுகின்றன. புவிக் கோளவகத்தினுள் ஏற்படும் அனர்த்தங்களைக் கண்களால் காணமுடியாது. ஆனால் அவற்றின் தாக்கங்களை புவியின் வெளியில் காணமுடியும். வளிமண்டலத்தில் ஏற்படும் தாக்கங்களைக் கண்டுணர முடியும்.



பல்வகை அனர்த்தங்களை படத்தில் காணலாம்

இவ்வகையான இயற்கையாகத் தோன்றும் அனர்த்தங்கள் பலவகைப் பட்டன. அவை :


- புவிநடுக்கம், அல்லது நிலநடுக்கம்,
- எரிமலைச்செயற்பாடுகள்,
- சுனாமி.
- வெள்ளம்,
- வரட்சி,
- தொற்று நோய்கள். போன்றனவற்றைக் கூறலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புவிநடுக்கம்

கோளவகத்தினுள் பாறைக்குழம்பு கொதிநிலையில் குழம்பிக் கொந்தளித்த வண்ணம் உள்ளது. பாறைக்குழம்பு அசைந்து புரண்டு கொண்டிருப்பதாக விஞ்ஞானிகளின் ஆய்வுகள் கூறுகின்றன. பாறைக்குழம்பின் அசைவுகளினால் மின்காந்த அலைகள் பிறக்கின்றன. அவை விசைகளை உருவாக்கின்றன. அவ்விசைகள் புவியோட்டைத் தாக்குவன. புவியோடு தடித்த பாறைகளைக் கொண்டிருந்தாலும், பாறைகள் ஒரே தன்மையாக, சீராகப் பரந்திருப்பதில்லை. சில இடங்களில் தடித்தும், சில இடங்களில் மெலிதாகவும் இருக்கிறது. நீங்கள் நாம் விளையாடும் காற்பந்தை அவதானித்திருப்பீர்கள். பந்தின் உள்ளே காற்றை நிறைத்து வைக்கக்கூடிய றப்பர் உறை இருக்கும். அந்த உறையை மூடி பல தோற்துண்டுகளை இணைத்துப் பொருத்திய கவசத்தோல் இருக்கும். அந்தக் கவசத்தோலை நன்கு அவதானியுங்கள். தோல்துண்டுகள் பொருத்தப் பட்டிருக்கும். பொருத்துக்கள் மெலிதாக இருக்கும். கவசத்தோல் தடிப்பாக இருக்கும். இவ்வாறுதான் நமது புவியோடும் உள்ளது.




புவி பாறைப் படைகளாலான கவசத் தகடுகளைக் கொண்டுள்ளது. இவற்றைப் புவியியல் அறிஞர்கள் புவியோட்டுக் கவசத் தகடுகள் என அழைப்பார்கள். இவ்வகைக் கவசத்தகடுகள் 06 உள்ளன. இவை பிரதானமானவை. அத்துடன் 12 துணைக்கவசத் தகடுகள் உண்டென்றும் ஆய்வாளர்கள் கருதுவார்கள். இக்கவசத் தகடுகள் பெரும்பாறைப் படைகளால் ஆனவை. இவை ஒன்றோடு ஒன்று பொருத்தப்பட்டுள்ளன. பொருத்துக்கள் மென் பாறைப் படைகளைக் கொண்டிருக்கும். புவியின் உட்புறம் பாறைக்குழம்பு திரவ நிலையில் உள்ளது. கொதிநிலையில் உள்ள பாறைக்குழம்பில் புவியோடு மிதந்து கொண்டிருக்கும். கொதிநிலையில் உள்ள பாறைக் குழம்பு அசைந்து புரண்டவண்ணம் இருக்கும். இச்செயல் மின்காந்த விசைகளைத் தோற்றுவிக்கின்றன. இவ்விசைகள் கிடையாகவும், குத்தாகவும் செயற்படுவன. மின்காந்த விசைகள் புவியோட்டைத் தாக்கித் தகர்க்கும் வல்லமையுடையன.

அவை மேற்பரப்பிலிருந்து சுமார் 700 கிலோ மீற்றர் ஆழத்தினுள் இருக்கும் இறுகிய உறுதியான பாறைத்திணிவுகளில் தாக்கும். தாக்கும் இடத்தைக் குவியம் எனக் கூறுவார்கள். அதன் விளைவாக குவியத்திலிருந்து புவியோட்டில் அதிர்வலைகள் உருவாகிப் பரவும். பரவும் அதிர்வலைகளின் விசைக்கேற்ப புவியோடு பாதிப்புக்குள்ளாகும். இவ்வாறான அதிர்வுகள் புவியில் எங்காவது ஒவ்வொரு இரண்டரை மணிக்கொரு முறை நிகழ்வதாக ஆய்வுகள் கூறுகின்றன. குவியத்தில் இருந்து பிறக்கும் அதிர்வலைகள் நிலத்தையும் நீரையும் ஊடருவிச் செல்லும். இதனால் புவிநடுக்கங்கள் உருவாகின்றன. புவிநடுக்கத்தின் பரிமாணத்தை அளவீடு செய்வதற்கு செய்ஸ்மோகிராப் (Seismograph) கருவி பயன்படுத்தப் படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




மூலம்: பிலிப்ஸ் உலக தேசப்படப் புத்தகம்

இவ்விசைகள் குத்தாகவும், கிடையாகவும் இயங்கவல்லன. அவற்றை இழுவிசையென்றும், அமுக்கவிசை என்றும் வகைப்படுத்துவார்கள். இவை புவியின் மேற்பரப்பில் மாற்றங்களை ஏற்படுத்துவன. கவசத்தகடுகளின் பொருத்துக்கள் மெலிதாக அமைந்துள்ளன. மெலிதான இடங்களை விசைகள் இலகுவாகத் தாக்கும். விசைகள் தொடர்ந்து தாக்கிய வண்ணம் இருக்கும். குவியத்தில் இருந்து தாக்க அலைகள் விரிந்து செல்லும். அலைகளின் வேகத்துக்கு ஏற்ப புவியில் தாக்கங்கள் ஏற்படும். கவசத்தகடுகள் ஒன்றை ஒன்று உரைசியும், தள்ளியும் தொழிற்படும். அதேபோல் இழுபறிப்படும். இழுவிசையால் பிளவுகளும், அமுக்க விசையால் மடிப்புக்களும் தோன்றும். நிலத்திணிவு கடலுள் அமிழலாம். கடற்படுக்கைகள் மேலே உயர்த்தப் படலாம். அவ்வேளை புவியின் மேற்பரப்பில் குறைகள் எனப்படும் பள்ளத்தாக்குகள், மடிப்புக்கள் எனப்படும் மலைகள் தோன்றும். இவ்வாறு தோன்றியவைகள்தான் இமயமலைத் தொடர்களும், அமெரிக்க மேற்குமலைத் தொடர்களான அன்டிஸ் போன்ற ஏனையவைகளும் என ஆய்வாளர்கள் கூறுகின்றனர். இதனைத் தகட்டோட்டச் செயல்முறைகள் (டயவந வநஉவழைெ) என்பார்கள்.

புவிநடுக்கத்தினால் பெரும் அனர்த்தங்கள் ஏற்பட்டுள்ளதை அவதானிக்கலாம். சீனாவில் சாஞ்சி மாநிலத்தில் 1556ம் ஆண்டு பெப்ரவரி 02ம் திகதி ஏற்பட்ட புவிநடுக்கத்தால் 8,30,000 உயிரிழப்புக்கள் ஏற்பட்டன. 1976ல் சீனாவின் தங்சன் மாநிலத்தில் ஏற்பட்ட புவிநடுக்கத்தினால் 2,50,000 உயிரிழப்புக்கள் ஏற்பட்டுள்ளன. இவற்றைவிட 26-01-2001ல் இந்தியாவின் குஜராத் மாநிலத்தில் நிகழ்ந்த புவிநடுக்கத்தால் 30,000 பேருக்கு மேல் உயிரிழந்தனர். பல பகுதிகள் மண்ணில் புதையுண்டன. 08-10-2005ல் காஸ்மீரிலும் வடக்குப் பாகிஸ்தானிலும் எற்பட்ட பூகம்பத்தால் 200,000 வீடுகளும், 200,000 பேர்வரை காயத்துக்கும் உள்ளாகினர்.

கீழே காட்டப்பெற்ற அட்டவணை 1980 தொடக்கம் 1999 காலப் பகுதியில் புவிநடுக்கத்தால் இடம்பெற்ற அனர்தங்களைக் காட்டுகின்றது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| திகதி | நாடுகள் | இறந்தோர் |
|---|---|---|
| 10-10-1980 | அல்ஜீரியா | 2590 |
| 23-11-1980 | இத்தாலி | 2735 |
| 11-01-1981 | ஈரான் | 1027 |
| 13-12-1982 | ஜேர்மன் | 3000 |
| 30-10-1983 | துருக்கி | 1300 |
| 19-09-1985 | மெக்சிக்கோ | 9500 |
| 10-10-1986 | எல்சல்வடோர் | 1500 |
| 05-03-1987 | ஈக்கவடோர் | 1000 |
| 12-07-1988 | சோவியத்யூனியன் | 25000 |
| 07-12-1988 | தென்னமெரிக்கா | 25000 |
| 21-01-1990 | ஈரான் | 35000 |
| 16-07-1990 | பிலிப்பைன்ஸ் | 1620 |
| 01-02-1991 | பாகிஸ்தான் | 1200 |
| 20-10-1991 | இந்தியா | 1600 |
| 12-12-1992 | இந்தோனேசியா | 2200 |
| 30-09-1993 | இந்தியா | 10000 |
| 06-01-1994 | கொலம்பியா | 1000 |
| 17-01-1995 | யப்பான் | 6430 |
| 28-05-1997 | ருஸ்யா | 1989 |
| 28-02-1997 | ஈரான் | 1000 |
| 10-05-1997 | ஈரான் | 1560 |
| 04-02-1998 | ஆப்கானிஸ்தான் | 5400 |
| 30-05-1998 | ஆப்கானிஸ்தான் | 4000 |
| 17-07-1998 | பப்புவாநியுகினி | 2100 |
| 25-01-1999 | கொலம்பியா | 1170 |
| 17-08-1999 | துருக்கி | 17800 |
| 21-09-1999 | தாய்வான் | 20 |



புவிநடுக்கத்தின் வலிமையை றிச்டர் அளவுத்திட்டத்தினால் அளவிடலாம். இதனை சார்ள்ஸ் றிச்டர் (Charles Richter) 1935ல் அறிமுகம் செய்தார். அவரது கணிப்பீட்டு பட்டியலை அட்டவணை காட்டுகிறது. அவரது பெயராலாயே இந்த அளவுத்திட்டம் அழைக்கப் படுகிறது. இதனடிப்படையில் 5.5 றிச்டர் அளவுக்கு அதிகமான அதிர்வுகள் பாரிய சேதங்களை விளைவிப்பன என ஆய்வுகள் கூறுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| ரிச்டர் அதிர்வு அலைகளின் வேகம். | விபரம் | புவிநடுக்கத் தாக்கம் | தாக்க இடை வெளி |
|---|---|---|---|
| 2.0 குறைவு | மைக்ரோ | உணரமுடியாத சிறு அலைகள் | 8 ,000 நாளொன்றுக்கு |
| 2.0-2.9 | குறைந்தளவு | பொதுவாக உணரமுடியாதன. பதியப்படுவன | 1 000 நாளொன்றுக்கு |
| 3.0-3.9 | | இவை பிரை யே இடம்பெறுகிறது. அழிவுகளை சிலவேளைகளில் ஏற்படுத்துவது. | 49 000 வருடத்துக்கு ஒரு முறை |
| 4.0-4.9 | மெதுவானது | ஆவதானிக்கக் கூடியது. வீட்டினுள் பொருட்களை அசைத்து ஒலியெழுப்பும். சிலவேளையில் அழிவைத் தரும். | 6 200 வருடத்துக்கு ஒரு முறை |
| 5.0-5.9 | மத்திமமானது | சிறு பிரதேசத்தில் பலமற்ற கட்டிடங்களையும், ஏனையவற்றையும் தாக்கி அழிக்கவல்லது | 800 ஒரு வருடத்துக்கு |
| 6.0-6.9 | பலமானது | 160 கிலோ மீ. (100 அடி) வரையான சனநெருக்கடியான பரப்பைத் தாக்கி அழிக்கக் கூடியது. | 120 ஒரு வருடத்துக்கு |
| 7.0-7.9 | மிகப்பலமானது | பெரும்பகுதியைத் தாக்கி பெருஞ்சேதத்தை ஏற்படுத்தவல்லது. | 18 ஒரு வருடத்துக்கு |
| 8.0-8.9 | எபரிய அளவில் | பல நூறு மைல் பரப்பளவில் தாக்கிப் பெருஞ்சேதத்தை விளைவிப்பது. | 1 ஒரு வருடத்துக்கு |
| 9.0-9.9 | | பல ஆயிரம் மைல்களைத் தாக்கி அழித்துப் பெருஞ்சேதத்தை விளைவிப்பது. | 1 ஒவ்வொரு 20 வருடங்களுக்கு |
| 10.0 | அளவிடமுடியாதது | இதுவரை பதியப்படவில்லை. | எப்போதாவது(ஒருமெழுறை) |

(Based on U.S Geological Survey documents.)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| காலம் | றிச்டர் அளவு | நாடுகள் |
|---|---|---|
| 1923 | 8.3 | ஜப்பான் - ரோக்கியோ |
| 1935 | 7.6 | பாகிஸ்தான் |
| 1970 | 7.6 | சீனா |
| 1976 | 7.8 | பேரு |
| 1978 | 7.8 | ஈரான் |
| 1985 | 8.1 | மெக்ஸிக்கோ |
| 1999 | 7.4 | துருக்கி |
| 2001 | 7.9 | இந்தியா |
| 2004 | 9.1 | சுமத்திரா |
| 2005 | 9.1 | பாகிஸ்தான் |

## எரிமலைச் செயற்பாடுகள்

புவியினுள் இயங்கும் மின்காந்த விசைகளின் செயற்பாடுகளினால் புவிநடுக்கம். பூகம்பம், எரிமலைகளின் வெளிப்பாடு போன்றன தோன்றுகின்றன. நிலத்திணிவுகளில் இவை ஏற்படும்போதும் அழிவுகளைச் சந்திக்கின்றோம்.



புவிநடுக்கம் அல்லது பூகம்பம் என அலறுகிறோம். எரிமலைகள் வெடித்துச் சிதறி பாரிய அழிவுகளை ஏற்படுத்தும். இவ்வகை இயற்கைச் சீற்றங்களை இந்த உலகு பலமுறை சந்தித்திருக்கிறது. கோளவகத்துள் கொதிநிலையில் உள்ள பாறைக்குழம்பு அசைந்து புரண்டவண்ணம் உள்ளது. இச்செயல் மின்காந்த விசைகளைத் தோற்றுவிக்கின்றன. வெப்பம் அமுக்கம் காரணமாக புவியோட்டின் நொய்தலான பகுதி தாக்கத்துள்ளாகிறது. பாறைக்குழம்பான மக்மா பாறைப்படையைத் தகர்த்து வெளிவரும். பாறைத்துகள், தூசு துணிக்கைகள், லாவாக்குழம்பு,சாம்பல், சேறு, நீராவி, புகை ஆகியன வெளியேறும். காலநிலையில் சடுதியான மாற்றம் ஏற்படும். எரிமலைகளை இருவகைப் படுத்துவார்கள். தொடர்ந்து எரிமலைச் செயற்பாடுகளில் இயங்கிக்




உலகின் அக்கினி வலயம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யப்பான், இந்தோனேசியா பகுதிகளில் அதிகமாக இவ்வகை அனர்த்தங்கள் ஏற்படுகின்றன. பசுபிக் சமுத்திரத்தைச் சூழ்ந்து எரிமலைத்தாக்கம் கொண்ட வலயம் உள்ளது. அதனை அக்கினி வலயம் என அழைப்பார்கள். கி.பி 79ல் விசுவியஸ் எரிமலையின் கக்குகையால் பொம்பை நகர் அழிந்தது. 1815ம் ஆண்டு இந்தோனேசியத் தீவான சும்பாவாவில் ஒரு நிகழ்வு நடந்தது. சும்பாவா தீவின் மிகப் பிரபலமான அழகான நகரம் தம்போரா ஆகும். நமது நகரங்களைப் போலல்லாது குடிகளை நெருக்கிப் பெருக்கமாய்த் தோன்றியது. செல்வச் செழிப்பில் திளைத்தது. அங்கு எரிமலைகள் அதிகம். ஒருநாள் எரிமலையொன்று படுபயங்கரமாக வெடித்துச் சீறியது. பாறைக்குழம்பு ஆறாக ஓடியது. 24 சதுர மைல் தூரத்துக்கு எரிமலைக் குழம்பு பரவி மூடிப் படிந்தது. தம்போரா நகர் எரிமலைக்குழம்புள் அமிழ்ந்தது.

ஒரு லட்சம் மக்களுக்கு மேல் உயிரிழந்தனர். அண்மையில் அந்த இடத்தில் அகழ்வாராய்ச்சியாளர்கள் ஆராய்ந்தார்கள். நகரின் அமைப்பு அப்படியே இருந்தது. வீடுகள் சிதைந்த நிலையில் காணப்பட்டன. பொருட்கள் அப்படியே கிடந்தன. இரண்டு மனித உடல்கள் இருந்ததற்கான ஆதாரங்கள் தெரிந்தன. எரிமலைக் குழம்பின்கீழ் புதையுண்டு கிடக்கும் வீடுகளையும் பொருட்களையும் தோண்டி எடுக்கும் முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது எனச் செய்திகள் கூறுகின்றன.



உலகில் பரந்துள்ள எரிமலைகள்

## சுனாமி உருவாக்கம்


சமுத்திரப் படுக்கையில் எரிமலைச் செயற்பாடுகள் பாரிய ஆழிப்பேரலைகளை உருவாக்கிவிடுகின்றன. இதனை கடல்கோள் என்று நமது வரலாற்று நூல்களும், சங்க இலக்கிய நூல்களும் கூறுகின்றன. இன்று அதனைச் சுனாமி என்று கூறுகிறார்கள். 2004ம் ஆண்டு 26ந் திகதியின் பின்னர் சுனாமி என்னும் யப்பானியச் சொல் சர்வதேச அந்தஸ்த்தைப் பெற்றுவிட்டது. உலக மக்களது வாய்களில் சுனாமி உலாவருகிறது. இயற்கையின் விளையாட்டு விந்தையானது. புவிக்கோளம் அந்தரத்தில் தன்னைத்தானே சுற்றிக் கொண்டு சூரியனையும் வலம் வருவதாக அறிகிறோம். சூரியக்குடும்பத்தில் உள்ள கோள்களுள் உயிரினங்கள் இந்தப் புவியிலேயே உள்ளன. வேறு கோளங்களில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுனாமி உருவாக்கம்

சமுத்திரப் படுக்கையில் எரிமலைச் செயற்பாடுகள் பாரிய ஆழிப்பேரலைகளை உருவாக்கிவிடுகின்றன. இதனை கடல்கோள் என்று நமது வரலாற்று நூல்களும், சங்க இலக்கிய நூல்களும் கூறுகின்றன. இன்று அதனைச் சுனாமி என்று கூறுகிறார்கள். 2004ம் ஆண்டு 26ந் திகதியின் பின்னர் சுனாமி என்னும் யப்பானியச் சொல் சர்வதேச அந்தஸ்த்தைப் பெற்றுவிட்டது. உலக மக்களது வாய்களில் சுனாமி உலாவருகிறது. இயற்கையின் விளையாட்டு விந்தையானது. புவிக்கோளம் அந்தரத்தில் தன்னைத்தானே சுற்றிக் கொண்டு சூரியனையும் வலம் வருவதாக அறிகிறோம். சூரியக்குடும்பத்தில் உள்ள கோள்களுள் உயிரினங்கள் இந்தப் புவியிலேயே உள்ளன. வேறு கோளங்களில் உள்ளதை இதுவரை யாரும் கண்டறியவில்லை. புவியின் தோற்றம் பற்றிய கதைகள் ஏராளம். புவியின் உள்ளீடு வியப்புக்குரியது. புவிச்சுழற்சி காரணமாக புவியோடு ஒரு முட்டையின் ஓடுபோல் இறுகி நாம்காணும் நிலையில் உள்ளது. முட்டையினுள் உள்ள கருபோல் பாறைக்குழம்பு புவிக்கோளவகத்தினுள் உள்ளது.




உலகம் தோன்றிய காலத்திலிருந்து இச்செயற்பாடுகள் காலத்துக்குக் காலம் தோன்றிப் பேரழிவுகளை ஏற்படுத்திய வண்ணமே வந்துள்ளன.

இவ்வகை அனர்த்தங்கள் தெற்காசிய நாடுகளை அதிகம் பாதிக்கின்றன. நமது இலங்கையும் விதிவிலக்கல்ல. நம்முன்னோர் இவ்வாறான சந்திப்புக்களைக் கண்டிருக்கிறார்கள். இலங்கையில் பலமுறை இவ்வகை அனர்த்தங்கள் நடந்துள்ளன. களணிதிஸ்ஸ மன்னனது ஆட்சிக் காலத்தில் பெரியதொரு கடற்கோள் ஏற்பட்டுள்ளது என்பதை அறிகிறோம். ஆனால் அவற்றைப் பற்றிய குறிப்புகள் கிடைக்கவில்லை. 1883ல் நடந்த பேரழிவு பற்றிய குறிப்புகளைக் காணலாம். 2004ம் ஆண்டு டிசம்பர் 26ல் இந்தோனேசியாவின் கடலில் சுமத்ராவை அண்டிய கடற்பரப்பில் 6.2 கி.மீ.ஆழத்தில் 9.0 ரிச்டர் பருமனில் ஏற்பட்ட புவியதிர்ச்சியின் விளைவாக சுனாமி பல நாடுகளைத் தாக்கியழித்தது. சுமார் பத்து நாடுகளைப் பதம் பார்த்தது. 2,27,305 மக்களது உயிர்களைப் பறித்துச் சென்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சுனாமி அலை சுருட்டி விளையாடுகிறது.

சுமார் 1,24,057 நபர்களைக் காயப்படுத்தி விட்டது. இந்தோனேசியாவில் 1,73,981 உயிர்கள் பறிக்கப் பட்டன. இரண்டாவது இடத்தில் நமது இலங்கை இழப்பினைச் சந்தித்தது. அந்த அனர்த்தத்தை கீழே உள்ள அட்டவணை காட்டுகிறது.

2004 டிசம்பர் 26ல் சுனாமியால் உலகில் பாதிக்கப்பட்டோர


| நாடுகள் | உயிரிழந்தோர் | காயமடைந்தோர் |
|---|---|---|
| இந்தோனேசியா | 1,73, 981 | 100, 000 |
| இலங்கை | 30, 967 | 15, 256 |
| இந்தியா | 16, 383 | - - |
| தாய்லாந்து | 05, 322 | 08, 457 |
| கிழக்காபிரிக்கா | 00, 137 | - - |
| மலேசியா | 00, 074 | 00, 299 |
| மாலைதீவு | 00, 082 | - - |
| மியான்மார் | 00, 059 | 00, 045 |
| பங்களாதேசம் | 00, 002 | - - |
| ஆபிரிக்க நாடுகள். | 00, 298 | - - |
| மொத்தம். | 2,27, 305 | 1,24, 057 |

சுனாமி இலங்கையில் 13 மாவட்டங்களில் அனர்த்தங்களை விதைத்தது. வடக்குக் கிழக்கு மாகாணத்தில் பேரழிவை ஏற்படுத்தியது. வடக்குக் கிழக்கு மாகாணத்தில் பாரிய சேதத்தை விதைத்துவிட்டுப் போய்விட்டது. அட்டவணை அதனைக் காட்டுகிறது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுனாமி விட்டுச் சென்ற சுவடுகள்.



இங்கையின் வடக்கு கிழக்கு மாகாணங்களில் சுனாமியின் தாக்கம்.

| மாவட்டம் | இறந தோர் | காண ாமல் போே னார் | காயம டைந் தோர் | சூ பாதிப்ப டைந்த குடும்பங் கள் | இடம்பெயர்ந்தோர் | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | குடும்பம் | அங்கத்த வர் | முகாமிலு ள்ளோர் | வேறு இடங்கள ில் | சூ முகா ங்கள் |
| யாழ்ப்பாணம் | 2640 | 540 | 1647 | 13652 | 10639 | 40117 | 10198 | 29919 | 17 |
| கிளிநொச்சி | 560 | 56 | 670 | 10568 | 407 | 1603 | 305 | 1298 | 02 |
| முல்லைத்தீ வு | 3000 | 1300 | 2500 | 5517 | 5821 | 22557 | 11993 | 10564 | 23 |
| திருகோணம லை | 1078 | 337 | 164 | 31896 | 17976 | 83570 | 19515 | 64005 | 42 |
| மட்டக்களப்பு | 2815 | 1086 | 1116 | 63717 | 18234 | 62778 | 26827 | 35951 | 48 |
| அம்பாறை | 10436 | 821 | 120 | 38624 | 38624 | 129348 | 73324 | 56043 | 74 |
| மொத்தம் | 20529 | 4140 | 6217 | 163974 | 91701 | 339973 | 142162 | 197780 | 206 |

## நிலச்சரிவுகள் அல்லது நிலவமுக்குகைகள்.



புவிக்கு வெளியே நிகழும் அசைவுகள் பலவகைப்படும். இடத்துக்கிடம் வேறுபடும். நமது பூமி ஒரே சீராக அமையவில்லை. உயர்மலைத் தொடர்களையும், சமவெளிகளையும் கொண்டுள்ளது. பாலைவனங்களையும். குளிர் வலயங்களையும் கொண்டுள்ளது. வளிமண்டலத்தில் ஏற்படும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


மாற்றங்களால் வெள்ளம். வரட்சி, புயல், மண்ணரிப்பு, மண்சரிவு, நிலவழுக்குகைகள், பனிக்கட்டி அசைவுகள் ஆகியன தோன்றும்.



மலைநாட்டில் மண்சரிவுகள் அல்லது நிலச்சரிவுகள் அல்லது நிலவழுக்குகைகள் ஏற்படுகின்றன. உயர்மலைச் சரிவுகளின் உள்ளே கருங்கற் பாறைப்படை (கிறனைற்) இருக்கிறது. அதனை மூடி மண்படையும் இயற்கைத்தாவரமும் படர்ந்திருக்கும். மழைகாலத்தில் மழைநீர் கசிந்து கருங்கற் பாறைகளில் ஊடுருவும். கருங்கற் பாறைக்கும் மூடியுள்ள மட்போர்வைக்கும் இடையே உள்ள பிடிப்பை மெல்ல மெல்ல அகற்றிவிடும். பிடிப்பற்ற மட்படை பலவீனமாக இருக்கும். அதனால் மட்படை கீழ்நோக்கிச் சரிந்துவிடும். பெரிய அனர்த்தத்தை ஏற்படுத்தும். திட்டமிடப்படாத காணிப்பாவனையும் காரணமாகின்றன. இவ்வகைச் செயற்பாடுகள் காரணமாக இலங்கையின் மலைப்பிரதேசங்களில் அடிக்கடி நிலச்சரிவுகள் ஏற்படுகின்றன.

குறிப்பாக 1000 - 4000 மில்லி மீற்றருக்கு இடையில் மழை வீழ்ச்சி பெறும் மலைப்பிரதேசங்களிலேயே இவ்வகைச் செயற்பாடுகள் இடம்பெறுகின்றன. 1989ல் நிலச்சரிவினால் 300 பேர் பலியானார்கள். 1996ல் ஏற்பட்ட நிலச்சரிவில் 75 உயிரழிவுகள் ஏற்பட்டன. 2003ல் அலபாத்த பிரதேசத்தில் ஏற்பட்ட நிலச்சரிவு பாரிய அனர்த்தத்தை ஏற்படுத்தியது. கொஸ்லந்தையில் நிகழ்ந்த நிலச்சரிவு பயங்கரமானது. 2007ல் வலப்பனப்பிரதேசத்தில் பாரியதொரு நிலச்சரிவு ஏற்பட்டது. உயிர்ச் சேதமில்லை. ஆனால் நெருக்கடி நிலையில் சிக்கி பாரிய இடப்பெயர்வு ஏற்பட்டுள்ளது. அடிக்கடி மலையகப் பிரதேசங்களில் இவ்வகைச் செயற்பாடுகள் இடம் பெறுவதை அவதானிக்கலாம் வலப்பனப் பிரதேசத்தில் நிகழ்ந்த நிலச்சரிவின் படங்கள் தரப்பட்டுள்ளன.

### பனிப்பாறைச் சரிவுகள் அல்லது வழுக்குகைகள்




பனிபடர்ந்த உயர் ஹிமாலயப் பகுதிகளிலும், குளிர் வலயங்களிலும் பனிப்பாறைகள் உடைந்து பெரிய அனர்த்தங்களைச் செய்கின்றன. பனிப்பாறைச் சரிவுகளும் இயற்கை அனர்த்தங்களில் ஒன்றாகும். உயர்நிலத்தில் இருந்து பெருமளவு பனிக்கட்டி கீழே விழுதலையே பனிப்பாறைச் சரிவு என்பார்கள். 1962ல் பேருவில் நிகழ்ந்த பனிப்பாறைச் சரிவால் 3000 பேர் பலியானார்கள். பாரிய சொத்துக்களும் அழிந்தன. பனிப்பறைச் சரிவுகள் ஏற்படுவதற்குப் பலகாரணங்களைக் கூறுவார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ஓசோன் படையில் சேதம் ஏற்பட்டு வளிமண்டலத்தில் வெப்பம் அதிகரிப்பதால் பனிப்பாறைச் சரிவுகள் ஏற்படுவதாகக் கூறுவார்கள்.
- புவியின் வெப்பம் அதிகரித்துச் செல்லுதலால் ஏற்படுகிறது.
- எரிமலைச் செயற்பாடுகளால் ஏற்படுகின்றன.
- காடழிப்பு பனிப்பாறைச் சரிவுக்குக் காரணமாகிறது.
- புவிநடுக்கமும் காரணமாகிறது.
- சூரிய கதிர்வீசலினால் வெப்பம் அதிகரிக்கிறது. இது பனிப்பாறைச் சரிவுக்குக் காரணமாகிறது.
- தொழில் நுட்பமும், நவீன விவசாய நடவடிக்கைகளும் காரணமாகின்றன.

## சுழல்காற்றும் சூறாவளியும்.



வளியின் அமுக்கத்தால் சுழல் காற்றுக்களும், சூறாவளிகளும் தோன்றுகின்றன. பெருமழையுடன் காற்றும் வீசி அனர்தங்களை விளைவிக்கின்றன. இவ்வகைச் சூறாவளிகளை இடத்துக்கு ஏற்றவாறு அழைப்பார்கள். இந்தோனேசியாவில் தைபூன் என்றும், கரீபியன் பகுதியில் ஹரிகேன் என்றும் அமெரிக்காவில் கற்றறீனா என்றும் அழைப்பார்கள். இவை உயிரிழப்புக்களையும், அழிவுகளையும் விளைவிக்கின்றன. கடற்பிரதேசத்தில் சூறாவளி விருத்தியாவதற்கு 36 மணித்தியாலங்களுக்கு 27 பாகை செல்சியஸ்சுக்கு மேற்பட்ட வெப்பநிலை நிலையாக இருத்தல் வேண்டும். சூறாவளி பெரும்பாலும் பருவப் பெயர்ச்சிக் காற்றோடு தொடர்புபட்டது. சூறாவளி தோன்றும் பிரதேச அடிப்படையில் இருவகைப்படுத்துவார்கள்.

1. அயன வலயச் சூறாவளி.
2. இடைவெப்ப வலயச் சூறாவளி.

அயனவலயச் சூறாவளி பெரும்சேதத்தை ஏற்படுத்தவல்லது. அயனவலயச் சூறாவளியின் மையத்தில் வளிமண்டல அமுக்கம் குறைவாக உள்ளது. அதனால் புயலின் மையத்தை நோக்கி கடல்மட்டம் உயர்வடைகிறது. வேகமான காற்று கரையை நோக்கி வீசும். அலைகள் வேகமாக கரையைச் சாடும். கடலில் செல்லும் கப்பல்கள் கரைக்குத் தள்ளப்படும். 1737ல் வங்காள விரிகுடாவில் வீசிய சூறாவளியினால் கூக்கிலி நதிக்கழிமுகத்தில் 3 லட்சம் மக்கள் உயிரிழந்தனர். 1985ல் கங்கைக் கழிமுகத்தைத் தாக்கி 1500 பேரை அழித்தது. இலங்கையில் 83 சத வீதமான சூறாவளிகள் நவம்பர் தொடக்கம் டிசம்பர் மாத காலங்களிலேயே ஏற்பட்டுள்ளன. 1907, 1922, 1964, 1978 ஆகிய ஆண்டுகளில் ஏற்பட்ட சூறாவளிகள் மிகக்கடுமையானவை. 1978-நவம்பர் 23ல் வீசிய சூறாவளியினால் 915 பேர் பலியாகினர். மட்டக்களப்பு மாவட்டம் பெரிதும் பாதிப்புக்குள்ளானது.

ஐக்கிய அமெரிக்காவில் 1944ல் தோன்றிய சூறாவளி மூன்று போர்க்கப்பல்களைக் கடலுள் மூழ்கடித்தது. 720 பேர்வரை கொல்லப்பட்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2006ல் தோன்றிய கற்றினா ஐக்கிய அமெரிக்காவையே கலக்கிவிட்டது. அதிலிருந்து அமெரிக்கா இன்னும் முழுமையாக மீளவில்லை. உலக மக்களை உலுக்கும் சூறாவளி மனிதனுக்குப் பெரும் சவாலாக இருக்கிறது.

**இடைவெப்ப வலயச் சூறாவளி**

இடைவெப்ப வலயச் சூறாவளி இடைவெப்ப வலயத்தில் ஏற்படுகிறது. முனைவுக் காற்றுக் குளிரானது. தென் மேலைக்காற்று வெப்பநிலையில் வேறுபட்டது. இவை இரண்டும் ஒருங்குவதால் பிரிதளம் உருவாகி சுழற்சியுறுகிறது. வெப்பக்காற்று மேலெழும். குளிர்காற்று கீழிறங்கி உந்தும். அதனால் சூறாவளி தோற்றம் பெறுகிறது. மாரியிலும் பார்க்கக் கோடையில் அதிகம் விருத்தியாகி, அத்திலாந்திகிலும், ஐஸ்லாந்து, அலூசியன் தீவுகளிலும் வீசுகின்றது. இதன் வேகம் சராசரியாக 10 - 40 கிலோ மீற்றர் ஆகும். யப்பான், குறைல் தீவுகளையும் தாக்கி ஐரோப்பாவுக்குள்ளும் செல்வதை அவதானிக்கலாம்.

## வெள்ளம்



அதிகளவில் மழைப்பொழியும் காலங்களில், நிலம் நீரை உறிஞ்சும் கொள்ளளவு குறையும். நிலத்தின் மேல் நீர் தேக்கமடையும். மழை நீர் பெருகி வெள்ளம் பெருக்கெடுக்கிறது. சமவெளிகளிலும், ஆற்று வடிநிலங்களிலும், நதிப்படுக்கைகளிலும் வெள்ளம் ஏற்படுகிறது. இலங்கை இரு பருவப் பெயர்ச்சிக் காற்றுக்களின் செல்வாக்கைப் பெற்றுள்ளது. பருவப் பெயர்ச்சிக் காலங்களிலும். மேற்காவுகை எனப்படும் உகைப்பு மூலமும் அதிக மழை பெய்கிறது. தென்மேல் பருவப்பெயர்ச்சிக் காற்று ஏப்பிரல் மாதம் தொடக்கம் செப்தம்பர் வரை வீசுகிறது. ஒக்ரோபர் முதல் மார்ச் வரை வடகீழ் பருவப்பெயர்ச்சிக் காற்று வீசுகிறது எனப் பெருவாரியாகக் கூறுவார்கள். இலங்கையின் தரை அமைப்புக்கேற்ப மழைவீழ்ச்சி மட்டுப்படுத்தப் படுகிறது. தென்மேல் பருவக்காற்று வீசும் காலங்களில் இலங்கையின் தென்மேற்குப் பிரதேசம் மழையினைப் பெறுகிறது. வடகீழ் பருவக் காற்றினால் வடக்கு முதல் தெற்கு வரையுள்ள பிரதேசங்கள் மழையினைப் பெறுகின்றன. அத்துடன் சூறாவளியினால் அதிகளவு மழை கிடைக்கிறது.

உயர்மலைப் பிரதேசங்கள் மழைநீரை ஏந்தி பள்ளத்தாக்குகள் ஊடாக நதிவடிநிலங்களில் பாய்ச்சுகிறது. நதிகளில் நீரின் அளவு கூடும்போது கரைபுரண்டு பரவி ஓடும். கரைவிளிம்புகள் உடைந்து போகும். வடிநிலங்களில் வண்டல் படிந்து வெள்ளத்தை உருவாக்குகிறது. இலங்கையில் வடக்கு கிழக்குப் பிரதேசங்களிலும் தென் பிரதேசங்களிலும் தாழ்வடிநிலங்கள் உள்ளன. தாழ்நிலப் பரப்புக்களில் அடிக்கடி வெள்ளப் பெருக்கு ஏற்பட்டு அனர்த்தத்தை உருவாக்கிறது. அதனால் உயிர்ச்சேதங்கள், பொருளாதாரச் சிதைவுகள், பாரிய குடிப்பெயர்வையும், அனர்த்தங்களையும் உருவாக்கிறது. உலக நாடுகளில் அனர்த்தங்களில் வெள்ளப் பெருக்கு அதிகம் சேதத்தை விளைவிக்கிறது.

இலங்கை நீர்பாசனத் திணைக்களத்தினர் வெள்ளப் பெருக்கினை மழைவீழ்ச்சியின் அடிப்படையில் மூவகைப் படுத்தியுள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1) 5" தொடக்கம் 8" வரையான மழைவீழ்ச்சி -சிறுவெள்ளப் பெருக்கு.
2) 8" தொடக்கம் 11" வரையான மழைவீழ்ச்சி- பெரு வெள்ளப்பெருக்கு.
3) 11" மேலான மழைவீழ்ச்சி பேராபத்து வெள்ளப்பெருக்கு.

அண்மையில் 2007ல் பிரித்தானியாவை பெருவெள்ளப் பெருக்குத் தாக்கிப் பெரும் அனர்த்தத்தை உருவாக்கியது. பிரேசில், ஐக்கிய அமெரிக்கா என அனைத்து நாடுகளும் வெள்ளப் பெருக்கை அனுபவிக்கின்றன. சீனாவின் ஹொவாங்கோ நதி, யங்சிக்கியாங் போன்றனவும், இந்தியாவில் கங்கைக் கழிமுகமும் பெருவெள்ளப் பெருக்கில் மூழ்கி அனர்த்தங்களை அனுபவிக்கின்றது. பங்களா தேசம் அடிக்கடி வெள்ளப் பெருக்கினால் பாதிக்கப்படுகிறது. இலங்கையில் இரத்தினபுரி அடிக்கடி வெள்ளப்பெருக்கின் அனர்தத்துக்கு உள்ளாகிறது. இலங்கையில் 2002ல் இரத்தினபுரியில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கு பாரிய உயிர்ச்சேதங்களையும், பொருளாதார சிதைவுகளையும் ஏற்படுத்தியுள்ளது.

### வெள்ளப் பெருக்கு ஏற்படுவதற்கான காரணங்கள்

- காலநிலை மாற்றங்களினால் அதிக மழை பெய்தல்.
- காடுகளை அழித்தல்.
- நீர்வழிப்பாதைகளைத் தடைசெய்து சட்டவிரோத கட்டிடங்கள் அமைத்தல்.
- தாழ்நிலங்களை நிரப்புதல்.
- புவியின் வெப்பம் அதிகரித்தலால் ஏற்படும் தாக்கமும் காரணங்களாகின்றன.

உலகில் வெள்ளப் பெருக்கினால் ஏற்பட்ட அழிவுகள்

| ஆண்டு | நாடுகள் | அழிவுகள் |
|---|---|---|
| 1658 | பரீஸ் | பெருமளவு இடம்பெயர்வு ஏற்பட்டது |
| 1861 | வோர்சோ | பெருமளவு மக்கள் இடம்பெயர்ந்தனர். |
| 1887 | சீனாவின் குவான்கோ பள்ளத்தாக்கு | பெருவெள்ளம்சுமார் 09 இலட்சம் மக்கள் உயிரிழப்பு |
| 1978 | பங்களாதேசம் | சுமார் 44 இலட்சம் மக்கள் இடம்பெயர்ந்தனர். |
| 1996 | அமெரிக்காவின் வட டகோற்றா, பிலடெல்பியா | பெருமளவு மக்கள் காணாமற்போனார்கள் |
| 2005 | அமெரிக்காவின் கதிரினா, ரீட்டா சூறாவளி வெள்ளம் | சுமார் இரண்டு லட்சம் மக்கள் இடம்பெயர்வும் பல நகரங்கள் அழிவும் |
| 2007 | சோமாலியா | சுமார் மூன்று இலட்சம் உயிர்ச் சேதம் |

வெள்ளப் பெருக்கு அழிவுகளை மட்டும் தருவதில்லை, நல்ல பயனையும் தருகிறது. வெள்ளம் கரைகளை அழித்துப் பல்வேறு பருப்பொருட்களையும் சுமந்து வருகிறது. அவற்றைப் படைபடையாகப் படியச்செய்கிறது. அவை வண்டற் படிவுகளாக படிகின்றன. வண்டற்படிவு பயிர்ச்செய்கைக்கு வேண்டிய பசளையாக மாறுகிறது. ஆற்றுக்கழிமுகங்கள் சிறந்த பயிர்விளையும் பிரதேசங்களாக விளங்குவதை அவதானிக்கலாம். இந்திய கங்கைச் சமவெளி இதற்குச் சிறந்த உதாரணமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


**இடிமின்னல் தாக்கம்**

சூரியக் கதிர்களின் வெப்பச் செயற்பாட்டால் ஆவியாக்கம் நடைபெறுகிறது. புவியிலுள்ள நீர்நிலைகளில் இருந்து நீர் ஆவியாகி மேலெழுகிறது. மேலெழும் ஆவி மேகமாகத் திரண்டு வளியுடன் உராய்ந்து மின்னேற்றம் அடைகிறது. மின்னேற்றம் பெற்ற முகில் நேர்மின், எதிர்மின் அயன்களைக் கொண்டிருக்கும். இவை ஒன்றுடன் ஒன்று மோதி மின்னலாக மாறுகிறது. இடிமின்னல் தாக்கம் அதிகமாக வெப்ப வலயப் பகுதிகளில் நிகழ்கிறது. வரட்சியான காலத்தில் மழை பொழியும் சந்தர்ப்பங்களில் இடிமின்னல் தாக்கம் அதிகமாக இருக்கும். இலங்கையில் மார்ச் மாதம் தொடக்கம் மே வரையான காலத்திலும், செப்ரம்பர் தொடக்கம் ஒக்ரோபர் வரையான காலத்திலும் இடிமின்னல் தாக்கம் ஏற்படுகிறது. உலகில் இயற்கை அனர்த்தங்களில் இடிமின்னல தாக்கமும் அதிக சேதத்தைத் தருவதாகும். உலகில் வருடாந்தம் 2000 பேர்வரை பாதிக்கப்படுவதாக ஆய்வுகள் கூறுகின்றன.

மூன்று வழிகளில் இடிமின்னல் தாக்கம் ஏற்படுவதாகக் கூறப்படுகிறது.

1. புவி இடிமின்னல் - முகில் கீழ்பகுதியில் இருந்து புவிக்கு வருதல்.
2. முகில் இடிமின்னல் - முகில்களுக்கு இடையில் ஏற்படுவது.
3. காற்று இடிமின்னல் - முகில்களுக்கும் அண்ட வெளிக்கும் இடையில் ஏற்படுவது.

புவி இடிமின்னல்தான் அதிக அளவு ஏற்படுகிறது. அதிக பாதிப்புக்களையும் ஏற்படுத்துகிறது. விலங்குகளுக்கும், மனிதர்களுக்கும் உயிர்ச்சேதங்களை ஏற்படுத்துகிறது



உலகில் சிங்கப்பூர் நாடுதான் இடிமின்னல் தாக்கத்தினால் அதிகம் பாதிப்புக்குள்ளாகிறது. நமது இலங்கையிலும் இடி மின்னல் தாக்கம் அதிகளவு உண்டு. அண்மைக்காலங்களில் இடிமின்னல் தாக்கத்தினால் இலங்கையில் உயிரிழப்புக்கள் அதிகரித்துச் செல்வதை அவதானிக்கலாம். சிறப்பாக இலங்கையின் வரள்வலயத்தில் - அனுராதபுரம், பொலன்னறுவ மாவட்டங்களில் இடம்பெறுவதை அவதானிக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரட்சி



பருவப் பெயர்ச்சிக் காற்று வீசும் நாடுகளில் வரட்சியின் கொடுமை அதிகமாகக் காணப்படுகிறது. காலநிலை மாற்றங்களும், மனித நடவடிக்கைகளும் வரட்சி ஏற்படக் காரணங்களாகின்றன. ஆண்டுக்குரிய சராசரி மழைவீழ்ச்சிக் குறைவினால் வரட்சி ஏற்படுவதாக ஆய்வாளர்கள் கருதுவார்கள். ஒரு இடத்தில் 15 நாட்களுக்குத் தொடர்ச்சியாக மழை கிடைக்காத நிலை ஏற்படின் அங்கு வரட்சி ஏற்படும் என்று பிரித்தானிய ஆய்வாளர்கள் கருதுகின்றார்கள். வரட்சி தோன்றுவதற்குப் பல காரணங்களைக் கூறுவார்கள்.

- குறைந்த மழை வீழ்ச்சி.
- எல்நினோத் தாக்கம்.
- சூழலுக்குத் தீங்கு தரும் மனித நடவடிக்கைகள்.
- நச்சுக் கலவைகள் வளிமண்டலத்தில் சேருதல்.

உலகினை வரட்சி அடிக்கடி பாதித்துள்ளதை வரலாறு காட்டுகிறது.

1900ல் இந்தியாவில் ஏற்பட்ட வரட்சியினால் 3.5 மில்லியன் மக்கள் பட்டினியாலும், நோயினாலும் பாதிக்கப்பட்டனர். 1921-22ல் ரஸ்யாவும், 1928-29ல் வடமேற்கு சீனாவும், 1964ல் லிபியாவும், 2006ல் மேற்கு அவுஸ்திரேலியாவும் வரட்சியினால் பாதிக்கப்பட்டன. இலங்கையில் வடகீழ் பருவக்காற்றினால் மழை பெறும் பிரதேசங்கள் மாரியில் மட்டும் மழையைப் பெறுகின்றன. கோடையில் வரட்சியை அனுபவிக்கின்றன. வானம் பார்த்த பயிர்ச்செய்கையாலும், சேனைச்செய்கையாலும் பாதிப்புற்ற மக்கள் வாழ்வில் வறுமையில் வாடுகின்றனர். மன்னார், அம்பாந்தோட்டைப் பிரதேசங்களும் ஏனைய வடக்கு கிழக்குப் பிரதேசங்களும் வரட்சியை அனுபவிக்கின்றன. ஆப்கானிஸ்தான், இந்தியா ஆபிரிக்க நாடுகள் பெரிதும் பாதிக்கப் படுகின்றன.

## காட்டுத் தீ

அனர்த்த வகைகளில் காட்டுத்தீயும் முக்கிய இடத்தினைப் பெறுகிறது. சூரிய வெப்பம். காற்று, மரங்களின் உராய்வு என்பன காட்டுத்தீ ஏற்பட ஏதுவாகின்றன. சூழலில் ஏற்படும் வரட்சிநிலை காட்டுத்தீ ஏற்படத் துணைபுரிகின்றன. வெப்ப வலய, இடைவெப்ப வலயப் பிரதேசங்களில் காட்டுத்தீ அனர்த்தம் அதிகளவு நிகழ்கின்றன. சீனா, இந்தோனேசியா, அவுஸ்திரேலியா, ஐக்கிய அமரிக்கா, கனடா, பிரான்ஸ், மத்திய ஆபிரிக்கா, இந்தியா போன்ற பிரதேசங்களில் காட்டுத்தீயின் பாதிப்புக்கள் அதிகம் உண்டு. இதனால் இயற்கை வளங்களும் பொருளாதார சிதைவும் ஏற்படுகின்றன. அண்மையில் பெப்ரவரி 2009ல் அவுஸ்திரேலிய விக்டோரியா மாநிலத்தில் ஏற்பட்ட காட்டுத்தீயால் சில நகரங்கள் முற்றாக அழிந்தன. 750 வீடுகள் எரிந்து சாம்பலாகின. 135 பேருக்கு மேல் உயிரிழந்தனர். 330,000 ஹெக்ரேயர் நிலம் நாசமாகியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தொற்றுநோய்கள்

சுற்றுப்புறச் சூழல் - வளி, நீர், நிலம், மாசடையும் போது தொற்று நோய்கள் பரவுகின்றன. ஆட்கொல்லிகள்-மலேரியா,டெங்கு, அம்மைநோய் போன்றனவும், HIV/AIDS, பறவைக் காய்ச்சல். சார்ஸ் போன்றனவும் உருவாகின்றன.

மலேரியா

மலேரியா அனோபிலிஸ் என்னும் நுளம்பினால் பரப்பப்படுகிறது. மலேரியா ஒரு தொற்று நோயாகும். அத்துடன் அது பயங்கரமான நோயாகும். வரலாற்றுக்காலம் தொடக்கம் இலங்கையின் குடிப்பெயர்வில் அதிக செல்வாக்குச் செலுத்தியது. பொலன்னறுவை, அனுராதபுரம் ஆகிய இராச்சியங்களில் இருந்து மக்களை இடம்பெயரச் செய்தது. உலக நாடுகளில் பாரிய உயிர்ச்சேதங்களை ஏற்படுத்தியது. பல்லாயிரக்கணக்கான உயிர்களைப் பலிகொண்டது. இலங்கையில் உலக சுகாதார நிறுவனத்தின் பங்களிப்போடு இலங்கை அரசு இணைந்து மலேரியா நோயை அதனைப் பரப்பும் அனோபிலிஸ் நுளம்பின் பெருக்கத்தை ஒருவாறு கட்டுப்படுத்தி இன்று மலேரியா நோய் பரவுவதைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்துள்ளது.

டெங்கு

டெங்கு நுளம்புகளால் பரப்பப்படும் பாரதூரமான ஆட்கொல்லி நோயாகும். இது இரண்டு நிலைகளில் உருவாகிறது.

1. டெங்குக்காய்சல்.
2. டெங்கு குருதிப் பெருக்குக் காய்ச்சல்.

டெங்கு குருதிப் பெருக்குக் காய்ச்சலினால் ஏற்படும் டெங்கு அதிர்ச்சி, மரணத்தை ஏற்படுத்தலாம். குழந்தைகள், சிறுவர்கள், வளர்ந்தவர்கள் அனைவரும் பாதிக்கப்படலாம். சுகாதாரப்பகுதியினர் டெங்கைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளில் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

**(HIV/AIDS)** - எச்.ஐ.வி / எயிட்ஸ்

**(HIV)** எச்.ஐ.வி என்பது நமது உடலில் உள்ள நோய் எதிர்ப்பு சக்தியை குறைவடையச் செய்யும் ஒரு விதக்கிருமியாகும். இக்கிருமி மனித உடலில் நிர்பீடனக் குறைபாட்டை ஏற்படுத்துகின்றது.

**H** - Human - மனித
**I** - Immuno deficiency - நிர்ப்பீடனக் குறைபாடு
**V** - Virus - வைரஸ் - கிருமி

**(HIV)** எச்.ஐ.வி முற்றிய நிலைதான் **(AIDS)** எயிட்ஸ் ஆகும். ஒரு உடல்நலமுள்ளவர் **(HIV)** எச்.ஐ.வி தொற்றுக்கு உள்ளாகி உடல்நலமற்ற நோயாளியாகி **(AIDS)** எயிட்ஸ் என்னும் மரணத்துக்கு முந்திய நிலைக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆளாகிறார். இதனை நன்கு விளக்குவதாயின், **(HIV)** எச்.ஐ.வி தொற்றுதலுக்கு ஆளான ஒருவரிடமிருந்து இன்னொருவர் அதனைப் பெறுவதன் மூலம் தனது நிர்ப்பீடனக் குறைபாட்டுத் தன்மையை இழந்து அதன் குணங்குறிகளுடன் காணப்படுதலை**(AIDS)** எயிட்ஸ் என்பார்கள்.

**(AIDS)** எயிட்ஸ் என்பதை இவ்வாறு கூறலாம்.

- **A** - Acquired - பெறப்பட்ட
- **I** - Immuno - நிர்ப்பீடன
- **D** - Deficiency - குறைபாட்டு
- **S** - Syndrome - குணங்குறிகள்

ஏற்கனவே இந்நோய் உள்ளவரிடமிருந்து பெறப்பட்ட நிர்ப்பீடன குறைப்பாட்டுக் குணங்குறி உள்ள நோய் எனலாம். 1959ல் இருந்தே தொற்றுப் பரவும்நிலை உலக நாடுகளில் கண்டறியப்பட்டது. இன்றுவரை இருபத்து மூன்று மில்லியனுக்கு அதிகமான உயிர்களைக் காவுகொண்டுவிட்டது. சுமார் நாற்பத்தைந்து மில்லியனுக்கு அதிகமான மக்களை அழிவுப்பாதையில் இட்டுச் செல்கிறது. இது ஒரு பால்வினைத் தொற்று நோயாகும். எச்.ஐ.வி இன்று உலகத்துக்கு பெரிய சவாலாகமாறி, விஞ்ஞான மருத்துவ உலகினைக் கலக்கிக் கொண்டிருக்கிறது. உலகத்தின் பொருளாதாரத்தையும் ஆட்டிவைக்கும் சக்தியாகவும் விளங்குகின்றது. அதற்குத் தடுப்பு மருந்தின்றி தன்விருப்பம்போல் தலைவிரித்தாடுகின்றது. ஆதலால் நோய் பரவும் முறையினையும், சுகாதாரப் பழக்க வழக்கங்களையும் கடைப்பிடித்து மக்களைக் காக்க வேண்டியது அனைவரதும் கடப்பாடாகும். இலங்கையில் சுமார் 5,000 பேர் வரை எச்.ஐ.வி உடன் வாழ்வதாக UNAIDS கணிப்பிட்டுள்ளது. இதுவரை 274 பேர் வரை இனங்காணப்பட்டுள்ளதாக சுகாதாரத் திணைக்களம் தெரிவிக்கின்றது.

மக்கள் விழிப்புணர்வு அடைந்தால்தான் இவற்றைக் கட்டுப்படுத்தலாம். நமது தமிழ்ப் பண்பாடு போற்றுதற்குரியது. நமது மூதாதைகள் ஒருவனுக்கு ஒருத்தி என்ற வரையறையைக் கடைப்பிடித்தார்கள். அந்தப் பண்பாடு இவ்வகையான நோய்களுக்கு வேலியாக அமைந்து காத்துக் கொண்டது. இன்றைய நவநாகரிக உலகில் இவை தவிடு பொடியாகும் நிலை வந்துவிட்டது. இதிலிருந்து விடுவித்துக் கொள்ள நமது சமுதாயத்துக்கு விழிப்புணர்வுகள் தேவை. இந்த விழிப்புணர்வுகளை ஏற்படுத்துவது யாருடைய பொறுப்பு? நாட்டு மக்களது நல்வாழ்க்கையில் அல்லது நலன்களில் அக்கறை கொள்ளாத அரசுகள் உலகில் இல்லை. எனினும் அவற்றால் இவ்வாறான செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்வது இயலாத காரியமகிவிடுகிறது. ஆதலால் அரசசார்பற்ற நிறுவனங்கள் உள்ளூர் அமைப்புக்களின் உதவிகளோடு இந்தக் கைங்கரியங்களை முன்னெடுத்துச் செல்கின்றன.

**(HIV)** எச்.ஐ.வி தொற்றுதற்கான வழிவகைகளைக் கண்டறிய வேண்டும். தொற்றுள்ளவர்களை நாம் அன்புடன் அனுசரிக்க வேண்டும். பாலியல் உறுப்புக்கள் ஊடாக அல்லது கவனிப்பற்ற இரத்தப் பரிமாற்றம் ஊடாக மட்டுந்தான் இந்நோய் தொற்றக் கூடிய வாய்ப்பு உண்டு. இவ்வகையில் கிறிஸ்ரியன் எயிட்ஸ் பல அரசசார்பற்ற நிறுவனங்கள் ஊடாகப் பாரிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பங்களிப்பைச் செய்கிறது. ஒபர் (சிலோன்) நிறுவனம் பரந்த அடிப்படையில் எச்.ஐ.வி பற்றிய விழிப்புணர்வுகளை இலங்கையிலும். இந்தியாவிலும் ஊட்டிவருகிறது.

## செயற்கை அனர்த்தம்.

செயற்கை அனர்த்தங்கள் மனிதனின் நடவடிக்கைகளினால் தோற்றம் பெறுகின்றன. மனிதருள் ஏற்படும் அரசியல், பொருளாதார முரண்பாட்டால் தோன்றும் தடுமாற்றங்கள், அதனடிப்படையில் தோன்றும் யுத்தம், பயங்கரவாதம் போன்றவற்றைக் கூறலாம். இன்று உலக நாடுகளில் இவ்வகை அனர்த்தங்கள் பரவலாக நடைபெறுகின்றன. நகராக்க அபிவிருத்திச் செயற்பாட்டுத் திட்டங்கள், தொழில்நுட்பச் செயற்பாடுகள், தீயினால் ஏற்படும் விபத்துக்கள், வாகன விபத்துக்கள், போன்ற அனைத்தும் மனிதனால் தோற்றம் பெறுபவை. உற்பத்தியைப் பெருக்கும் நோக்குடன் காடழித்தல் கட்டிடங்கள் பெருகுதல், நகராக்கம், கைத்தொழில் ஆகியவை பெருகும்போது சூழல் மாசடைகிறது.

முரண்பாடான கொள்கை அல்லது கருத்துக்களால் நெருக்கடிகள் தோன்றுகின்றன. சாதி, சமயப்பூசல்கள் தோன்றுகின்றன. இனங்களுக்கிடையிலும், நாடுகளுக்கிடையிலும், பதவியாசை, கட்சிபேதங்கள், அதிகாரக் கெடுபிடிகள் போட்டியாகிப் பிரிவினைகள் தோற்றம் பெறுகின்றன. பழிக்குப் பழி என்னும் உணர்வுகள் தலையெடுக்கின்றன. போர்க்கோலம் உருவாகிறது. வெற்றி காணும் நோக்கில் பேரழிவைத்தரும் வெடி பொருட்கள் உற்பத்தியாகின்றன. ஏவுகணைகள், மனித குலம் மட்டுமல்லாமல் உயிரினங்களும் அழிந்து போகும் நியூற்றோன் குண்டுகள், கண்ணிவெடிகள், ஏவுகணைகள் போன்ற பயங்கர ஆயுதங்கள் உற்பத்தியாகின்றன. வளர்முக நாடுகள் பெரிதும் பாதிக்கப் படுகின்றன. இலங்கை அதனுள் சிக்கித் தலைதூக்க முடியாது தடுமாறுகிறது. அணுவாயுதங்கள், உற்பத்தியாக்கப் பெற்றுப் பரீட்சிக்கப் படுகின்றன. பயங்கரவாதம் தோற்றம் பெறுகின்றது. எது பயங்கரவாதம் என்பதில் மக்கள் மத்தியில் கருத்து முரண்பாடுகள் தோன்றியுள்ளன.

எந்த நாட்டு அரசாங்கங்கள் ஆனாலும் சரி, அவை எதனைச் செய்தாலும் அது பயங்கரவாதம் இல்லை. அது பயங்கரவாதத்துக்கு எதிரான செயற்பாடுகள் என்ற நிலைக்கு ஆட்சியாளர்கள் வந்துள்ளார்கள். யப்பானில் போடப்பட்ட அணுக்குண்டின் அழிவுகளின் வடுக்கள் இன்றும் மறையவில்லை. வியட்நாம் இன்றுவரை யுத்தவடுவில் இருந்து விடுபடவில்லை. ஈராக் தொடரழிவில் சிக்கியுள்ளது. தொழில்நுட்ப ஆய்வுகள், புதிய பொருட்களின் கண்டு பிடிப்புகள் ஆகியனவற்றால் சுற்றுப்புறச் சூழல் மாசடைகிறது. ஓசோன்படை வலுவிழக்கிறது. வளிமண்டலத்தில் ஓட்டை உருவாகிறது. அதனூடாக அல்ற்றா வயலற் கதிர்வீசல் நடைபெறுகிறது. இவை உயிரினங்களைப் பாதிப்படையச் செய்வன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழில்நுட்பச் செயற்பாடுகளில் சில தவறுகள் தோன்றும்போது அது பேரழிவை ஏற்படுத்துகிறது. இந்தியாவிலும், ரஸ்சியாவிலும் தொழில்நுட்பக் கோளாறினால் பல்லாயிரக் கணக்கான உயிர்கள் பறிபோயின. புவிக்கோளம் அதிவெப்பமாகிறது. இச்செயற்பாடுகளால் புவியும், வளிமண்டலமும் பாதிப்படைந்து வருகிறது. இவற்றில் இருந்து தோன்றும் இடர்களை எவ்வாறு தவிர்த்துக் கொள்ளலாம் என்பதையிட்டு உலகநாடுகள் சிந்திக்கின்றன. செயற்படுகின்றன. உலக வெப்பமாதலுக்கு எதிரான சமநிலை பேணும் செயற்திட்டங்களை முன்மொழிகின்றன. மக்களின் இடர்களினைக் களையும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படுகின்றன.

## அனர்த்தம் ஒற்றுமைக்கும் வழிவகுக்கிறது.?

அன்றைய காலங்களில் ஒரு இடத்தில் நடக்கும் பேரழிவுகளை உலக மக்கள் அதிகம் அறிந்திருக்க வாய்ப்புக் கிட்டவில்லை. அறிந்து கொள்ள வாய்ப்பும் வசதியும் இருக்கவில்லை. இன்றைய நவீன தொழில்நுட்ப யுகத்தில் ஊடகங்கள் ஊடாக கண்முன் காணக்கூடிய வாய்ப்புகள் இருப்பதால் வாயைப்பிளந்து அரற்றுகிறோம். மனிதனை மனிதனே வெட்டி, ரயர்போட்டுத் தீயிட்டுக் கொழுத்தி மகிழும் காலத்தில் அதனையிட்டுக் கரிசனை காட்ட யாராவது முன்வருகிறார்கள் இல்லை. சுனாமி செய்தால் மட்டும் ஏன் அலட்டிக்கொள்ள வேண்டும். பிரித்தாளும் அரசியல் நிலைமைகளால் நாடு சின்னாபின்னப் பட்டுக் கிடந்த நேரத்தில் சுனாமி தனது விளையாட்டைக் காட்டிவிட்டு பாய்ந்தோடியது. மக்கள் விழித்துக் கொண்டார்கள். இன, மதம், மொழி பாராது சுனாமி தாக்கியதால், மக்கள் ஆளுக்காள் உதவி செய்ய முன்வந்தார்கள். உலக நாடுகள் சோகத்தில் ஆழ்ந்தன. இலங்கை மக்கள் ஒன்றாகி துயர்துடைப்புப் பணிகளில் ஈடுபட்டனர்.

ஒரு துயரத்தில் ஒற்றுமை வளர்ந்து துளிர்விட்டது. ஆனால் இன்று மீண்டும் வேதாளம் முருங்கை மரத்தில் ஏறிய கதையாகி விட்டது. மக்கள் குடியிருப்புக்களை நோக்கி எறிகணை வீச்சுக்களும், விமானக் குண்டு வீச்சுக்களும் இடம்பெறுகினறன. அரசாங்கம் தனது நாட்டு மக்கள்மீதே விமானக்குண்டுகளையும், எறிகணைத் தாக்குதல்களையும் தொடுத்துச் சித்திரைவதை செய்கிறது. உயிரிழப்புகளும். பொருளாதாரச் சிதைவுகளும் ஏற்படுகின்றன. நாட்டின் பொருளாதாரம் நலிவுற்று விலைவாசிகள் வானைமுட்டும் அளவுக்கு உயர்ந்து மக்களுக்குத் துன்பத்தைக் கொடுக்கின்றன. மனிதனால் ஏற்படுத்தும் அனர்த்தங்களைச் சர்வதேசச் சமூகமும் பாராமுகமாக இருப்பது வேதனைக்குரியதே.

இயற்கை அனர்தங்களை மனிதனால் தடுக்கமுடியுமா? அவை மனித ஆற்றலுக்கு அப்பாற்பட்டவை. ஆனால் நாம் எச்சரிக்கையாக இருந்தால் அழிவுகளைக் குறைத்துக் கொள்ளலாம். அவற்றிலிருந்து ஒருவாறு தப்பித்துக் கொள்ளலாம். அதற்கு அறிவும் அனுபவமும் அத்துடன் விவேகமும் தேவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரண்டாம் பகுதி

## அனர்த்த முகாமைத்துவம் பற்றிய அறிமுகம்.

ஒரு நிகழ்வு நடந்ததன் பின்னர்தான் அதனையிட்டு சிந்திக்கின்றோம். அனர்த்தங்கள் ஒன்றன் பின் ஒன்றாகத் தொடர்பு பட்டவை. அதன் பிரதிபலிப்பாக அதனையிட்டுக் கவனம் மேற்கொள்ளப்படுகிறது. அனர்த்தங்கள் உலகம் தோன்றிய நாளிலிருந்து உலகில் எந்தவொரு மூலையிலாவது நடந்து கொண்டுதான் இருக்கின்றன. ஆனால் அவை நமக்கு எட்டுவதில்லை. அப்போது ஊடகங்களின் செயற்பாடுகள் இருக்கவில்லை. ஆனால் இன்று உயர்தொழில் நுட்ப, ஊடக, வலைபின்னற் செயற்பாடுகளும், உலகமயமாதலும் வளர்ச்சியடைந்து விட்டது. உலகின் எந்தவொரு இடத்தில் நடைபெறும் எந்தவொரு நிகழ்வுகளையும் உடனுக்குடன் கண்டும் கேட்டும் வாசித்தும் அறிந்து கொள்ளவும் முடியும். அதனால் இன்று அனர்த்தங்களுக்கான எச்சரிக்கைகள், முன்னாயத்த முனைவுகளிலும், இடர்குறைத்தலிலும் நாடுகள் நாட்டம் செலுத்தி வருகின்றன. உலகரீதியாக அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் ஆண்டுதோறும் சுமார் 90 சதவீதமான இயற்கை அனர்த்தங்களும், அதனூடாக 95 சதவீதமான உயிரிழப்புகளும் நிகழ்கின்றன. 2025ம் ஆண்டளவில் உலக சனத்தொகையில் 80 சதவீதமானோர் அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் இருப்பார்கள். அவர்களில் 60 சதவீதமானோர் வெள்ளப்பெருக்கு, புயல்,மண்சரிவு போன்ற இயற்கை அனர்த்தங்களால் நலிவடைந்து இருப்பார்கள் என்று ஆய்வுகள் கூறுகின்றன.

இழப்புகள் அதிகரிப்பதற்குப் பீதியும் (பயம்) பதகளிப்பும் காரணம் எனக் கூறப்படுகிறது. உதாரணத்துக்கு ஒரு கதை. ஒரு பாடசாலையின் வகுப்பறை. அந்த வகுப்பறையில் சுமார் 30 -35 மாணவர்கள் வரை இருந்தார்கள். ஆசிரியர் பாடம் நடத்துகிறார். பாடம் சுவையாக இருக்கிறது. அனைவரது கவனமும் பாடத்தில் இருக்கிறது. வகுப்பறையினுள் சாரைப்பாம்பு புகுந்து கொண்டது. யாரும் அதனைக் கவனிக்கவில்லை. பாம்பு வந்ததுபோல் வந்த வழியே போய்விட்டது. யாரும் கண்டு கொள்ளவில்லை. அங்கு பிரச்சினை இருக்கவில்லை. அனர்த்தமும் இல்லை.

இதேபோல் இன்னொரு நாள் அந்த வகுப்பறையினுள் பாடம் நடக்கிறது. அதே சாரைப்பாம்பு நுழைகிறது. சிலரின் கண்கள் கண்டுகொண்டன. ஒரேகலவரம். அல்லோல கல்லோலம். அனைவரது மனங்களிலும் பீதி குடிகொண்டு விட்டது. ஆளையாள் தள்ளி, விழுந்து காயப்பட்டு பாடசாலையே அமர்க்களமாகியது. பீதியின் காரணமாக மாணவர் ஒருவர் மிதிபட்டு மருத்துவ மனையில் சேர்க்கப் பட்டார். ஓடிய சாரைப்பாம்பு பல்வேறு பெயர் கொண்ட பாம்புகளாகப் பேசப்பட்டது. இது சாதாரண உதாரணம் மட்டுந்தான். இதனை இட்டுச் சிந்திக்க வேண்டும். பீதி சிந்திக்க இடமளிக்காது. பாம்பு வகுப்பறையுள் நுழைந்ததற்கான காரணம் யாதாக இருக்கலாம்.?

- வகுப்பறைச் சுத்தம் பேணப்படாது இருந்திருக்கலாம்.
- பாம்பு இரைதேடலில் ஈடுபட்டு நுழைந்திருக்கலாம்.
- ஆசிரியர் மாணவர் கவனமின்மையாக இருக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதனால் ஏற்பட்ட விளைவுகளுக்குரிய காரணங்களாக பின்வருவனவற்றைக் கூறலாமல்லவா?

- பீதி அல்லது பயம் காரணமாக எழுந்த விளைவுகள்.
- மனதினிலே துணிவு இன்மையாக இருக்கலாம்.
- முன்னெச்சரிக்கை இன்மையாக இருக்கலாம்.
- முன் ஆயத்தம் இன்மையாகவும் இருக்கலாம்.
- தங்களைக் காப்பாற்றிக் கொள்ளும் திறன் இன்மையாகவும் இருக்கலாம்.
- பயிற்சி இன்மையாகவும் இருக்கலாம்.
- அனர்த்தம் பற்றிய விளைவுகளை அறியாது இருக்கலாம்.

பாடசாலை நிர்வாகம் எச்சரிக்கையாக, தற்காப்பு நடவடிக்கைகளுடன் இருந்திருந்தால் அனர்த்தம் ஏற்பட வாய்ப்பில்லை. பாம்பு நுழைந்த பின்தான் பல காப்பு நடவடிக்கைகள் பாடசாலையில் எடுக்கப்பட்டன. எனவே ஒரு பிரச்சினையை அணுகும் பயிற்சியில் அனைவரும் ஈடுபட்டிருக்க வேண்டும். அனர்த்தமும் அதன் விளைவுகள் பற்றிய அனுபவ அறிவும் தேவை.

இந்திய மாநிலத்தில் கும்பகோணத்தில் பல நூற்றுக்கணக்கான பள்ளிச் சிறார்கள் தீயினால் கருகி இறந்தார்கள். 2008 நவம்பரில் ஹெயிட்டியில் இரு பாடசாலைக் கட்டிடங்கள் இடிந்து வீழ்ந்ததால் நூற்றூக்கணக்கான சிறார்கள் உயிர் நீத்தனர். இதற்குக் காரணம் என்ன? திட்டமிடப்படாத கட்டிட அமைப்பு, சிறார்களைப் பற்றிய கரிசனை இன்மை, கவனமற்ற மனப்பாங்கு, வருமுன் காக்கும் தீர்க்கதரிசனம் அற்ற தன்மை ஆகியவற்றைக் கூறலாம். அவற்றை அறிந்திருந்து வருமுன் காக்கும் வழிகளையும் தெரிந்திருந்தால் இவ்வித இழப்புக்கள் வந்திருக்குமா? ஏற்படவிருந்த இடர்களைக் குறைத்துக் கொண்டிருக்கலாம் அல்லவா?

நமது நாட்டில் நிகழ்ந்த இயற்கை அனர்த்தங்களால் பாரிய சேதங்கள் ஏற்பட்டன. பாடசாலைகளிலும், வீடுகளிலும். வீதி விபத்துக்களிலும், பல்வேறுபட்ட அனர்த்தங்களில் சிக்கியும் சுமார் 35,399 உயிர்கள் பிரிந்தன. இயற்கை அனர்த்தங்களினால் காவு கொள்ளப்பட்டன. அதனைக் கீழே உள்ள அட்டவணை காட்டுகிறது.

| காலம் | அனர்த்த வகை | இறப்பு |
|---|---|---|
| 25 டிசம்பர் 1957 | வெள்ளம் | 200 |
| 22 டிசம்பர் 1964 | புயல் | 206 |
| 25 டிசம்பர் 1969 | வெள்ளம் | 062 |
| 24 நவம்பர் 1978 | புயல் | 740 |
| 24 மே 1984 | வெள்ளம் | 045 |
| நவம்பர் 1987 | தொற்றுநோய் | 053 |
| மே 1989 | வெள்ளம் | 325 |
| ஒக்ரோபர் 1993 | மண்சரிவு | 065 |
| மே 2003 | வெள்ளம் | 235 |
| 26 டிசம்பர் 2004 | சுனாமி | 35,399 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1982 - 2001க்கு இடைப்பட்ட காலப்பகுதியில் தெற்காசிய நாடுகளில் ஏற்பட்ட இவ்வகை அனர்த்த விளைவுகளை கீழ் காணும் அட்டவணை காட்டுகிறது

| நாடு | மக்கள் இறப்பு வருடாந்த சராசரி. | மக்கள் பாதிப்பு வருடாந்த சராசரி. |
|---|---|---|
| பங்களாதேசம் | 8,754 | 15,897,987 |
| இந்தியா | 5,391 | 56,116,660 |
| பாகிஸ்தான் | 542 | 1,437,785 |
| நேபாளம் | 285 | 92, 497 |
| இலங்கை | 65 | 721, 182 |
| 20 வருடம் | 300 740 | 1,485,442,220. |

அனர்த்தங்களால் பங்களாதேசத்தில் ஆண்டுதோறும் சராசரியாக 8,754 மக்கள் இறக்கிறார்கள். இந்தியாவில் 56,116,660 மக்கள் பாதிப்புக்குள்ளாகிறார்கள். ஆக ஆண்டுதோறும் 3,00,740 மக்கள் இறக்கிறார்கள். 1,485,442,220 மக்கள் பாதிப்புக்கு உள்ளாகிறார்கள். அதேவேளை 2004 டிசம்பர் 26ல் நடந்த சுனாமி எனும் அனர்த்தம் முழு உலகையுமே உலுக்கியது. இலங்கையின் வடக்கு கிழக்கு மாகாணங்களில் இருந்து 20529 மக்கள் இறந்தொழிந்தனர்.

பின்வரும் அனர்த்தங்களின் அனுபவத்தின் பின்னர் அனர்த்தம் பற்றிய சிந்தனை துளிர்விடத் தொடங்கியது எனலாம்.

- 57 டிசம்பரில் வடக்கிலும் கிழக்கிலும் வெள்ளம்
- 77ல் கிழக்கில் சூறாவளியின் அனர்த்தம்.
- அரசியல் நெருக்கடிகளினால் ஏற்படும் அனர்த்தங்களால் இடப்பெயர்வுகள்.

இதன் அடிப்படையில் நிவாரணச் செயற்பாடுகள் தொடங்கப்பட்டன.

- 80களில் பிரதிபலிப்பு நடவடிக்கைகள் தொடங்கப் பட்டன.
- 90 ல் இனரீதியான பாதிப்புக்களும், இடப்பெயர்வுகளும் தொடர்ந்தன.
- 2004 டிசம்பர் 26ல் சுனாமியின் தாக்கம் அதன்பின் அதிதீவிர கவனம் செலுத்தப்படுகிறது.
- நிவாரணம், பின் அனர்த்தவேலைகளில் கவனம்
- அனர்த்த முகாமைத்துவம் ஆரம்பமானது.

அனர்த்தங்கள் ஒன்றன் பின் ஒன்றாகத் தொடர அதன் பிரதிபலிப்பாக அதனையிட்டுக் கவனம் மேற்கொள்ளப்படுகிறது. எச்சரிக்கைகள், முன்னாயத்த முனைவுகளில் நாட்டம் செலுத்தப்படுகிறது.

உதாரணமாக, இந்தியாவிலுள்ள மேற்கு வங்காளத்தில் கங்கை வடிநிலத்தில் அடிக்கடி வெள்ளப் பெருக்கெடுத்து பேரழிவுகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருவாக்குகின்றன. குறிப்பாக முர்சிதாபாத் மாவட்டம் கங்கைக் கழிமுகத்தில் உள்ளது. அம்மாவட்டத்தில் கோடாரம்பூர் பத்மா நதிக்கும் பகிரதி நதிக்கும் இடையில் உள்ள கிராமம். அங்கு அடிக்கடி வெள்ளப் பெருக்கினால் உயிர்ச்சேதங்களும், பொருளாதார அழிவுகளும் தொடர்ந்தவண்ணம் இருந்தது. காசா (CASA) நிறுவனம் இக்கிராமத்தில் மக்களை ஒருங்கிணைத்து அவசர தயார் நிலை சம்பந்தமான விழிப்புணர்வுகளை ஏற்படுத்தினர். பின்னர் அவர்களை ஒன்றிணைத்துப் பின்வருமாறு குழுக்களை அமைத்து பயிற்சி அளித்தனர். பின்வருவனவற்றில் குழுக்களைப் பயிற்றுவித்துள்ளனர்.

-

- முன் எச்சரிக்கை,
- தீர்மானம் மேற்கொள்ளல் ,
- குழு வேலைகள்,
- நியமங்கள்,
- தொடர்பாடல் வழிமுறைகள்,
- தேவைகளைமதிப்பிடல்,
- அவசரதிட்டமிடலும் செயற்படுத்தலும்.

இன்று மக்கள் தங்களைத் தாங்களே காத்துக்கொள்ளும் தற்சார்புநிலையில் உள்ளனர். வெள்ளம் கிராமத்துள் புகுந்து அழிவை ஏற்படுத்தாதவாறு உயரமான நீண்ட அணையிட்டு அதனையே வாகனங்கள் போகும் கடினமான வீதியாகச் செப்னிட்டுள்ளார்கள். அனர்த்த காலங்களில் அனைத்து மக்களுக்கும் அபாய அறிவித்தல் கொடுக்கப்படுகிறது. முக்கியமான ஆவணங்களைக் காப்பாற்றி வைக்கும் காப்பகம் போன்றனவும், கண்டுபிடித்து உயிர்காக்கும் செயற்பாடுகளும் உள்ளன. காலநிலை மாற்றங்களில் கவனம் செலுத்தப்படுகிறது. அதற்கேற்ப மாற்றுப் பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்படுகிறது. வெள்ளப் பெருக்குக் காலங்களைக் கணக்கிட்டு அதற்கேற்ப சணலைப் பயிரிடுகிறார்கள். சணல் வெள்ளத்துக்கு ஈடுகொடுத்து வளரக்கூடியது. ஏனைய காலங்களில் வேறு பயிர் செய்து பயனைப் பெறுகிறார்கள்.

போதிய கல்வி வசதியற்றவர்களும் ஏனையவர்களோடு இணைந்து செயல்படுகிறார்கள். இத்தனைக்கும் காரணம் மக்கள் வருமுன் காக்கும் திட்டத்தைப் புரிந்து செயற்படுவதே. அரசும், அரச சார்பற்ற நிறுவனங்களும் பாரிய பங்களிப்பினைச் செய்து விழிப்புணர்வுகளை எற்படுத்தி மக்களைத் தயார்நிலையில் வைத்திருப்பதேயாகும்.

## முன் ஆயத்த நடவடிக்கைகளையிட்ட சிந்தனை

இயற்கை ஆபத்துக்கள் தவிர்க்கப்பட முடியாதவை. ஆனால் அவற்றினால் ஏற்படும் அனர்த்தங்களில் இருந்து அழிவுகளைக் குறைத்துக் கொள்ளமுடியும். அதற்கான அனுபவமும், திறனும் பயிற்சியும் தேவை.

நாட்டு மக்களின் அன்றாட அமைதிவாழ்க்கையில் கரிசனை செலுத்த வேண்டியது அந்தந்த நாட்டு அரசுகளின் கடமையாகும். மக்கள் துயருறும் போது அவர்களது துயரைப் போக்க நடவடிக்கை எடுக்கவேண்டும். அதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரணமாகவே அனர்த்தங்களின் பாதிப்பைக் குறைக்க முன் ஆயத்த நடவடிக்கைகள் தொடங்கப்பெற்றன.
அதன்பின்னர் அனர்த்த இடர்குறைப்பு (Disaster Risk Reduction) முகாமைத்துவம் முன்வைக்கப் பெற்றது. அனர்த்தங்களின் தோற்றம். காரணம். தோன்றும் காலம் முதலியனவற்றையிட்டு ஆய்வுகள் மேற்கொள்ளப் படுகின்றன.

அனர்த்தம் இயற்கையாலும் மனிதனாலும் தோற்றுவிக்கப் படுவனவாகும். அவை சடுதியானதாக அல்லது மெதுவானதாக இருக்கலாம். மனிதனின் பாவச்செயல்களால் சீற்றம் கொண்ட கடவுள் கொடுக்கும் தண்டனைதான் இயற்கையான அனர்த்தம் எனப் பல சமயவாதிகள் இன்றும் கருதுகிறார்கள். ஆனால் இயற்கை அனர்த்தங்கள் ஏற்படுவதற்கு மனிதனின் செயற்பாடுகளும் காரணம் ஆகின்றன என ஆய்வாளர்கள் கருதுகிறார்கள். அபிவிருத்திச் செயற்பாடுகளினால் சூழல் மாசடைகிறது. சூழலின் சமனநிலைத்தன்மை நிலைகுலையும்போது சூழலில் மாற்றம் ஏற்படுகிறது. ஓசோன் படையில் மாற்றம் ஏற்படும்போது வளிமண்டலத்தில் தாக்கம் ஏற்படுகிறது. பின் அனர்த்த விளைவுகளை ஏற்படுத்துகிறது.

இங்கிலாந்தில் குளிரிலிருந்து தங்களைக் காப்பதற்காக வீடுகளில் நிலக்கரி அடுப்புகளைப் பாவித்தனர். புகைபோக்கியினூடாகப் புகைசென்றது. கைத்தொழில் சாலைகளிலிருந்தும் புகை வெளிவந்தது. சிலகாலங்களில் வானம் இருள்மயமாகி விடும். புகையினால் வளிமண்டலத்தில் காபனீரொட்சைட் கலந்துவிட்டது. குழந்தைகளும், கருவுற்றவர்களும், முதியோர்களும் சுவாச நோயினால் பாதிக்கப்பட்டனர். மருத்துவமனைகள் நிறைந்தன. ஆய்வுகளின் பின்னர்தான் இதனைக் கண்டறிந்தனர். இவ்வாறான உதாரணங்கள் நிறையவே உண்டு.

இயற்கை சில வளங்களை இலவசமாக நமக்கு வழங்கியுள்ளது. உதாரணமாக தண்ணீர், காற்று அல்லது வளி, சூரிய ஒளி ஆகியனவற்றைக் கூறலாம். ஆனால் இவை யாவும் இன்று மனிதனின் அபிவிருத்திச் செயற்பாடுகளால் மாசுறுகின்றன. இலவசமாகக் கிடைத்த தண்ணீர் அரிதாகிக் கொண்டு வருகிறது. இனிவருங் காலங்களில் குடிநீர்ப் பிரச்சினை ஒரு சவாலாக மாறவிருக்கிறது. காடுகள் அழிக்கப்படுவதால் மழைவளம் குறைந்து பாலைவனமயமாதலும் கூடும். மனித நடவடிக்கைகளால் பூமிப்பந்து வெப்பமடைந்து செல்கிறது. பாலைவனமயமாதலும், நீர் மாசடைதலும் அனர்த்தமா? சிந்தித்துப் பாருங்கள். இவை யாவும் மனிதருக்கு அல்லது சூழலில் உள்ளவற்றுக்கு இடரைக் கொடுப்பனவாக மாறிவருகின்றன..

அனர்த்தங்கள் எதிர்வு கூறக்கூடியவையாக அல்லது எதிர்பாராத வையாக இருக்கலாம் சமீபத்தைய அனர்த்தங்களான பூகம்பங்கள், சுனாமி ஆகியவற்றை உதாரணங்களுக்காக கூறலாம். அனர்த்தங்கள் அவலத்தைத் தருவன. நெருக்கடி நிலைகளை உருவாக்குவன. பாரிய குடிப்பெயர்வை ஏற்படுத்துகின்றன. பேரிடரைத் தந்து சவாலாக மாறுகின்றன.

எந்த ஒரு நெருக்கடி நிலையும் பாரிய குடிப்பெயர்வை ஏற்படுத்துவதை அவதானிக்கலாம். மக்கள் பெரும் சிக்கல்களுக்குள் தவிக்கின்றார்கள். அதிகமாகப் பாதிக்கப்படுபவர்கள் பெண்களும் குழந்தைகளும்தான் என்று ஆய்வுகள் கூறுகின்றன. இலங்கையில் 2004 டிசம்பரில் நடந்த சுனாமியின் போது உயிரிழந்தவர்களில் 36% சதவீதமானவர்கள் பெண்களும், குழந்தைகளும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக் கணக்கிடப் பட்டுள்ளது. அவர்கள் எதிர்நோக்கும் ஆபத்திலிருந்து விடுபட சிரமப்படுகிறார்கள். நெருக்கடி நிலை சரியாக முகாமைத்துவம் செய்யப்படாவிட்டால் அது தொடர்ந்து அழிவுகளை ஏற்படுத்தும். பெரிய அனர்த்தமாக மாறிவிடும்.

## அவசரத் தயார்நிலை அறிமுகம்

அவசரத் தயார்நிலை என்றால் என்ன?

நமது நாட்டில் கடந்த காலங்களில் நடந்தேறிய அனர்த்தங்களின் போது கற்றுக்கொண்டவற்றை அவசரநிலைகளில், மற்றவர்களோடு இணைந்து சேவை செய்வதற்கு ஒரு தயார்நிலையை ஏற்படுத்தி நன்மையடைவதற்கு ஆயத்தமாக இருத்தலாகும். எதிர்காலத்தில் அழிவுகளில் இருந்து மக்களைக் காப்பற்ற அரசாங்கம் கட்டமைப்புக்களை தேசிய, மாவட்ட, பிரதேச ரீதியில் உருவாக்கியுள்ளது. தேசிய கொள்கைகளை வகுத்து அவற்றின் ஊடாகச் செயற்படுத்த முனைகிறது. அவற்றில் சிலவற்றின் விபரங்கள்:

## ஹியோகோ செயற்திட்டம்

அனர்த்த இடர்குறைப்புச் செயற்பாடுகளின்போது தேசிய அரசாங்கங்களினால் கடைப்பிடிக்க வேண்டிய ஹயாகோ சட்டகம்.
2005 ஜனவரியில் 168 நாடுகள் ஜப்பானில் உள்ள கோப் தீவின் தலைநகரான ஹயாகோவில் அனர்த்தங்களின் போது சமூக, பொருளாதார உதவிகளுக்கு எவ்வாறு உதவுகரம் நீட்டலாம் என ஆராய்ந்து தொடர்ந்து வரும் (2005 2015) 10 ஆண்டுகளுக்கான ஒரு (Frame work) செயற்திட்ட வடிவமைப்புச் சட்டகத்தைத் தயாரித்தன. இந்த செயற்பாட்டுத்திட்டம் ஒரு வழிகாட்டியாக அமைந்துள்ளது. நாட்டின் மக்கள் துயருறுகையில் அரசாங்கம் முன்னுரிமைப்படுத்தி உதவுதல் வேண்டும். அது அரசாங்கத்தின் கடமையுமாகும். அதே வேளை அரசசார்பற்ற நிறுவனங்களும் எவ்வாறு உதவுகரம் நீட்டலாம் எனத் தெளிவுறுத்துகிறது. ஆதனால் பின்வரும் நடவடிக்கைகள் மூலம் நாட்டில் நன்மைகளைப் பெருக்கலாம். இவற்றின் ஊடாக மக்களது நலிவுறு தன்மைகளைக் குறைக்கலாம் என எதிர்பார்க்கப் படுகிறது.:

- தேசிய அளவிலும், உள் ஊர்மட்டத்திலும் கட்டொழுங்கான அமைப்புக்கள் ஊடாக உயிரழிவைக் குறைத்தல்.
- பேரழிவுக்கான காரணங்களைக் கண்டறிதலும் குறைப்பதற்கான வழிகளில் உதவுதலும்.
- பேரழிவுகளை மதிப்பிட்டு சமூக, பொருளாதார அழிவுகளைக் குறைப்பதற்கான முன்னெச்சரிக்கைகளை வழங்குதல்.
- பேரிடரைக் குறைப்பதற்கான தயார்நிலையில் இருந்து சூழலைப் பாதுகாத்தல்
- அறிவு திறன் மனப்பாங்கினைப் பெருக்கி பாதுகாப்புக்கலாச்சாரத்தைக் கட்டியெழுப்பபி அனர்த்தத்தைச் சமாளிக்கும் சமூகத்தை உருவாக்கல்.

இன்று உலக நாடுகள் ஹியாகோ வரைபினைப்பின் பற்றி தமது நாடுகளில் பேராபத்துக்களில் இருந்து விடுபடும் வழிமுறைகளைப் பின்பற்றுகின்றன. நமது நாட்டிலும் பல்வேறு மட்டங்களிலும் இவ்வாறான நல்ல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசிய மட்டத்தில்:-

- தேசத்தைக் கட்டியெழுப்பும் அபிவிருத்தி அமைச்சு.
- நிதி அமைச்சு.
- சமூக சேவை அமைச்சு.
- சமூகசேவைத் திணைக்களம்

மாவட்ட மட்டத்தில் :

- அரச அதிபர் அலுவலகம்.
- பிரதேச செயலாளர் அலுவலகங்கள்.
- மாகாண சபைக்குரிய அலுவலகங்கள்.

உள்ளூராட்சி மன்றங்கள் மட்டத்தில்.

- பிரதேச சபைகள்.
- நகர சபைகள்.
- பட்டின சபைகள்.

ஏனைய நிறுவனங்கள்.

- சர்வதேச அரசசார்பற்ற நிறுவனங்கள்.
- உள்ளூர் அரசசார்பற்ற நிறுவனங்கள்.
- சமூக மட்டத்திலான நிறுவனங்கள்.
- ஊடகத்துறை சார்ந்த நிறுவனங்கள்.
- வெளிநாட்டு தூதுவராலயங்கள்.
- உயர் ஸ்தானிகர் அலுவலகங்கள்
- இன்னும் பல நிறுவனங்கள் ஈடுபட்டுள்ளன.

இழப்புகளைப் போக்க முன்மொழிவுகள் தேசிய மட்டத்திலும், மாவட்ட, பிரதேச மட்டத்திலும் மேற்கொள்ளப்பட்டன. வேலைத்திட்டங்கள் புகுத்தப் பட்டன. பல நிறுவனங்கள் செயற்திட்டங்களில் ஈடுபட்டன. எனினும் அவை சரியாக இன்று வரை தகுதியானவர்களுக்குப் போய்ச் சேரவில்லை என்பது பலபேர்களினது கணிப்பாகும்.

அவசர தயார் நிலை சம்பந்தமான திட்டமிடல் அவசியமானது. திட்டமிடலை பின்வருமாறு அமைத்தல் நன்மைபயக்கும்.

- முன் எச்சரிக்கை,
- தீர்மானம் மேற்கொள்ளல் ,
- குழு வேலைகள்,
- நியமங்கள்,
- தொடர்பாடல் வழிமுறைகள்,
- தேவைகளை மதிப்பிடல்,
- அவசரதிட்டமிடல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவசரநிலைகளில் திட்டமிடலில் உள்ளடக்க வேண்டிய விடயங்களும் கலந்துரையாடலும்.

- அவசரத் தயார்நிலை.
- அது தொடர்பான அனுபவங்களை பகிர்ந்து கொள்ளல்.
- எதிர் கால நடவடிக்கைககளையிட்டு முடிவெடுத்தல்.
- அனர்த்தவேளைகளில் ஸ்பியர் நியமங்கள்.
- அவசரதிட்டமிடல் நடைமுறைகளைஉருவாக்குதல்
- இலகுவில் பாதிக்கப்படக் கூடிய குழுக்களுக்கும் அவசரநிலைகளில் ஏற்படும் தாக்கம் பற்றிய விழிப்புணர்வுகளை ஏற்படுத்தல்.

அனர்த்தங்கள் மனிதனைத் தொடர்ந்து தாக்குகின்றன. அதனால் பெரும் அழிவுகளை எதிர்கொள்ள வேண்டியுள்ளது. அனர்த்தம் பெரிய சவாலை ஏற்படுத்துகின்றது. எனவே அதனது தாக்கம் பற்றிய தேடலில் மனித இனம் ஈடுபட்டுள்ளது. எவ்வாறு இத்தாக்கங்களில் இருந்து ஓரளவு தப்பித்துக் கொள்ளலாம். அல்லது அழிவுகளை எவ்வாறு குறைத்துக் கொள்ளலாம் என முயற்சிகளில் இறங்கியுள்ளது.

அனர்த்த இடர்காப்பு முகாமைத்துவம் அறிமுகம்

அனர்த்த இடர்காப்பு என்றால் என்ன? அனர்த்தங்களில் இருந்து காத்துக் கொள்ளும் வழிமுறைகள் எவை? இதனையிட்டு அறிஞர்கள் ஈடுபட்டு உழைக்கிறார்கள். அதனையிட்டு ஆய்வுகளை மேற்கொள்கிறார்கள். அதற்குரிய தேடல்களைக் கண்டறிகிறார்கள். அவற்றைப் பரீட்சித்துப் பார்த்துச் செயற்படுத்த முனைகிறார்கள். அவர்கள் வகுத்த வியூகங்களாவன:

- அனர்த்த விடுதலை வடிவம்.
- முதற்காரணிகளை அடையாளம் காணல்.
- அழுத்தங்களை குறைத்தல்.
- பாதுகாப்பான, கட்டுப்படுத்தப்பட்ட நிலையை நோக்காக கொள்ளுதல்.

இவைபோன்ற வழிமுறைகளில் பல நாடுகளும் ஈடுபட்டு உழைக்கின்றன.

அனர்த்தக் குறைப்பு வழிமுறைகள்:

## -DRRM ( Disaster Risk Riduction Management)

- அனர்த்த இடர் காப்பு முகாமைத்துவம்.

வருமுன் காக்கும் திட்டம் என இதனைக் கூறலாம். வெள்ளம் வருமுன் அணைபோடவேண்டும் என்பது நமது முன்னோர்கள் வாக்கு. இங்கு அனர்த்தத்திற்கு முன்னரான சில நடவடிக்கைளை மேற்கொள்ளலாகும். நமது மக்களை விழிப்படையச் செய்து செயற்பாடுகளில் ஈடுபடுத்தவேண்டும். கிராம மட்டத்தில் மக்கள் பங்கேற்புடனான அனர்த்த இடர்குறைப்பு முகாமைத்துவக் குழுக்களை அமைத்துப் பயிற்சி வழங்கி தயார்நிலையில் இருத்தல் மிகவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவசியம் எனக் கருதப்படுகிறது. அதில் பின்வருவன உள்ளடக்கப் படவேண்டியவையாகும்.

- .அனர்த்தங்களை இனங்காணல்.
- அவை நிகழும் காலங்களை இனங்காணல்.
- அனர்த்தம் நிகழக்கூடிய பகுதிகளை இனங்காணல்.
- அனர்த்தங்களின் தாக்கத்தைத் தவிர்க்க அல்லது குறைக்கக்கூடிய விழிப்புணர்வுளை இனங்காணல்.
- விழிப்புணர்வுகளை வழங்கக்கூடிய வளவாளர்களைத் தேர்ந்தெடுத்தல்.
- அவர்களுக்குப் பயிற்சியளித்தல்.
- அனர்த்தபகுதிகளில் வாழும் மக்களுக்கு முன்னெச்சரிக்கை விடுத்தல்.
- அவர்களை முன்னெச்சரிக்கையுடன் இருக்குமாறு பணித்தல் அத்துடன் பயிற்சிகளிலும் ஒத்திகைகளிலும் ஈடுபடுத்தல்.

இவற்றை அனர்த்தத்திற்கு முன்னரான தடுப்பு (DRR) அல்லது தணித்தல் அல்லது குறைத்தல் ஏற்பாடுகள் (Mitigation) என்று கூறுவார்கள். இதனைத்தான் இடர்குறைப்பு முகாமைத்துவம் என்பார்கள்

இவற்றினால் ஏற்படும் விளைவுகள்.

- மக்கள் இலகுவில் பாதிக்கப்படக்கூடிய தன்மையைக் குறைப்பதற்கு வழிவகுக்கும்.
- இவை மூலம் புதிய இடர் உருவாகுவதைத் தடுக்கமுடியும்.
- மக்களை தயார்நிலையில் வைத்திருக்க முடியும்.
- எந்த நேரமும் பிறருக்கு உதவும் மனப்பான்மையை வளர்க்க முடியும்.

இந்த இடர்காப்பு அல்லது இடர் குறைத்தல் முகாமைத்தும் மூலம் எதிர்பார்க்கும் நன்மைகள்.

- உயிரிழப்பைத் தடுத்தல்.
- மனிதஅவலங்களைக் குறைத்தல்.
- இடரைப்பற்றி மக்களுக்குத் தெரிவித்தல்.
- சொத்துக்களையும், பொருளாதார இழப்பையும் குறைத்தல்.
- வடிவமைக்கப்பட்ட மீள் நிர்மாணப் பணியைத் துரிதப்படுத்துதல்.
- பணியை முகாமைத்துவம் செய்தல்

அனர்த்த இடர்காப்பு முகாமைத்துவம்

அனர்த்த இடர்காப்பு முகாமைத்துவம் முக்கிய மூன்று படிமுறைகளைக் கொண்டது.

1. அனர்த்தத் தடுப்பு
2. அனர்த்தக் குறைப்பு
3. அனர்த்தத் தயார்நிலை




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனர்த்த இடர்காப்பு முகாமைத்துவத்தில் நெருக்கடிசக்கரம் பற்றிய அறிவும் தேவை.

நெருக்கடி நிலை :- (Emergency)

அனர்த்தம் நெருக்கடி நிலையைத் தோற்றுவிக்கும். பாரிய குடிப்பெயர்வையும், சிரமங்களையும், செயற்பாடுகளையும் உருவாக்கும். சொந்த வளங்களைப் பயன்படுத்திச் சமாளிக்கும் ஆற்றலுக்கு அப்பாற்பட்டு, பரந்த அளவில் உடல், பொருள், உடமை இழப்புக்களைச் சீர்குலைக்கும்.

நெருக்கடிசக்கரம் (Disaster Management Cycle)
அனர்த்த நிகழ்வுகள் சுழற்சி முறையானது




அனர்த்தத்தில் இருந்து விடுபடும் திட்டத்தில் பலவற்றை உள்ளடக்க வேண்டும்.

- தயார் நிலை
- உடனடி நிவாரணம்.
- புனர்வாழ்வு.
- புனர்நிர்மாணம்,
- தணிப்பு / குறைப்பு
- அபிவிருத்தி முன்னெடுப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொதுக்கல்வியும் பயிற்சியும்.

நமது கல்விப் பாடவிதானத்தில் அனர்த்தமுகாமைத்துவம் சேர்க்கப் பட்டுள்ளது. ஆனால் அது மறைமுகமாகவே உள்ளது. சூழற்பாடத்திலும், மனையியல், சுகாதாரப் பாடங்களிலும் இத்தகைய செயற்பாடுகள் உள்ளன. துணைப்பாட விதானத்துள்ளும் உள்ளடக்கப் பட்டுள்ளன. உதாரணமாக சாரணர் இயக்கம், சென்ற் ஜோன்ஸ் அம்புயலன்ஸ் போன்றவற்றுள் அனர்த்தங்களுக்கு அழுத்தம் கொடுபட்டுள்ளதை அவதானிக்கலாம். ஆனால் இதுவரை அவற்றுக்குச் செயல்வடிவம் கொடுக்கப்படவில்லை. இவற்றை உணர்ந்த சிலர் மட்டும் அதனைப் புரிந்து கொண்டு செயற்படுகிறார்கள். 2004 டிசம்பர் 26ல் ஏற்பட்ட சுனாமியின் தாக்கத்தின் பின் நிலைமைகள் மாறிவிட்டன. அரசும், மக்களும் விழித்துக் கொண்டார்கள். ஒவ்வொரு குடிமகனும் அனர்த் முகாமைத்துவத்தைப் பரிந்து தயார்நிலையில் இருப்பதற்குரிய சூழ்நிலை உருவாகிக் கொண்டு வருகிறது. அனைத்துப் பாடசாலைகளிலும் அனர்த்த முகாமைத்துவம் முக்கிய இடம் பெறுவது மகிழ்ச்சிக்குரியதாகும்.

பாடசாலைகளில் விசேடபயிற்சிநெறிகள், பொதுத் தகவல்கள் ஆகியவற்றோடு வீடியோமூலம் கட்புல நெருக்கடிநிகழ்ச்சிகள். முதலுதவிச் செயற்பாடுகள், அப்புறப்படுத்தல், அணிவகுப்புகள், ஒத்திகைகள் போன்றவற்றைச் செயற்படுத்துவதை அவதானிக்கலாம். உலக நாடுகளில் அனர்த்தங்கள் அதிகமாக நிகழும் பிரதேசங்களில் ஆசிரியர்களுக்கும். மாணவர்களுக்கும் பயிற்சிகள் வழங்கி, அவர்களைத் தயார்நிலையில் இருப்பதற்கான நடவடிக்கைகளில் ஈடுபடுத்துகின்றனர்.

## அனுபவ அணுகுமுறை.

வருமுன் காக்கும் திட்டம் பற்றி அறிந்திருத்தல் பயனுள்ளதாகும். இயற்கை அனர்த்தங்கள் ஏற்படுவதைத் தடுக்கமுடியாது. ஆனால் இயற்கை அனர்த்தங்கள் ஏற்படுவதற்கான காரணங்கள் பற்றி அறிந்திருத்தல் மிகவும் அவசியம். அப்படி அறிந்திருந்தால் அனர்த்தங்களில் இருந்து ஒருவாறு நம்மைக் காப்பாற்றிக் கொள்வதோடு அழிவுகளையும் குறைத்துக் கொள்ளலாம். உலக நாடுகள் இவ்வகை முயற்சிகளில் ஈடுபட்டு வருவதைக் காணலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயற்கை அனர்த்தங்கள் ஏற்படுவதற்கான காரணங்களை அட்டவணை காட்டுகிறது.

### நிலநடுக்கம்.

1) புவியின் உட்புறத்தில் ஏற்படும் இயற்கை அசைவுகள்.
2) சமுத்திரங்களில் ஏற்படும் நிலநடுக்கம்.
3) எரிமலை வெடிப்பு.
4) அணுக்கரு வெடித்தல்.
5) புவியின் உட்புறத்தில் உள்ள வாயு, கனிய எண்ணெய் போன்றவற்றின் பாவனை.

### வரட்சி

- நீர் ஆவியாதலும் வெப்பநிலை அதிகரித்தலும்.
- காடழிப்பும், காடுகளுக்குத் தீயிடலும்.
- வளிமண்டலம் மாசடைதல்.
- புவி வெப்பமாதலும், காலநிலை மாற்றங்களும்.
- சூரியக் கதிர்களின் வெப்பம் அதிகரித்தலும், மழையின்மையும்.

### சூறாவளி.

- வங்காள விரிகுடாவில் உருவாகும் தாழமுக்கம்.
- வடகீழ் பருவப்பெயர்ச்சிக் காற்றுக் காலங்களில் ஏற்படும் வளிமண்டல நிலைமைகள்.
- வளிமண்டலத்தில் ஏற்படும் குழப்ப நிலை.
- தென்மேற்குப் பருவப்பெயர்சிக்காற்றுக் காலத்துக்கு முன்(மார்ச்-ஏப்பிரல்) வளிமண்டல நிலைமைகள்..
- வளிமண்டலத்தில் வெப்பம் அதிகரித்தல்.

### இடி மின்னல்.

1. வெப்பம் அதிகரித்தல்.
2. இடிமுழக்கத்துடன் மழை.
3. மேற்காவுகைச் செயற்பாடு.

### சுனாமி

4. சமுத்திரத்தில் மண்சரிவும் பாறைப்படை தகர்வும்.
5. புவியோட்டின் உட்புறத்தில் ஏற்படும் மாற்றங்களினால் இந்து சமுத்திரத்தில் இந்திய, அவுஸ்திரேலிய தகட்டுக்கு அண்மையில் ஏற்படும் கடல் நிலநடுக்கம்.
6. கடலில் எரிமலை வெடிப்பு.
7. சமுத்திரத்தில் எரிநட்சத்திரங்கள் விழுதல்.

### மண்சரிவு

8. அதிக மழை வீழ்ச்சி.
9. தாய்ப்பறையின் வகையும் மலைச்சரிவுகளின் தன்மையும்.
10. தரையில் வெடிப்புக்கள் ஏற்படுதல்.
11. மனித நடவடிக்கைகள்- (கட்டிடம், காடழித்தல்-சேனைப்பயிர் முதலியன).
12. உயர்நிலங்களில் நீர்வழிப்பாதைகளைத் தடைசெய்தல்.
13. நீரைத் தேக்கி வைத்தல்.
14. மண் அகழ்தலும், மண்ணரிப்பும்.

### வெள்ளப்பெருக்கு

15. இடையிடையே இடிமின்னலுடன் தொடர்மழை.
16. பருவக்காற்று, சூறாவளிகளின் செல்வாக்கு
17. ஆற்று வடிநிலங்களில் சட்டவிரோத கட்டிட அமைப்பு.
18. மலைகளிலும், சரிவு நிலங்களிலும் காடழிப்பு.
19. ஆறுகளில் வண்டல் படிவுகள் குவிதல்.
20. தாழ்நிலங்களையும், சேற்று நிலங்களையும் நிரப்புதல்.
21. நீர் வழிந்தோடும் இடங்களைத் தடைசெய்தல்.
22. புயற்காற்று அலைகளின் தாக்கம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயற்கை அனர்த்தங்களை இனங்காணும் திறனைப் பெறவேண்டும். அதிலிருந்து மீளுவதற்கான எடுக்க வேண்டிய நடவடிக்கைகளையும் அனைவரும் அறிந்திருத்தல் அவசியம். அத்துடன் எப்போதும் தயார்நிலையில் இருப்பதும், உதவ முன்வருதலும் தலையாய கடமையாகக் கொள்ள வேண்டும்.

| புவிநடுக்கம் | | |
|---|---|---|
| அனர்த்தங்களை இனங்கானல் | உடனடியாக செய்ய வேண்டியன | முகாமைத்துவம் தொடர்பாக எடுக்க வேண்டியவை |
| • நிலநடுக்கம் பெருஞ்சத்தம் கேட்டல் மரங்கள், வீடுகள் சாய்தல் | • அவ்விடத்தை விட்டு நீங்குதல்<br>• தொடர்பாடல் சாதனங்களின் அறிவுறுத்தல்களைக் கேட்டல்<br>• தாம் அறிந்தவற்றை ஏனையோருக்கும் அறிவித்தல்<br>• திறந்தவெளி இடங்களுக்கு விரைவாகச் செல்லல்<br>மின்கம்பி, கட்டிடம் உள்ள பகுதியிலிருந்து வெளியேறுதல்<br>மறு அறிவித்தல் வரும்வரை அப்பகுதிக்குள் செல்லாதிருத்தல்<br>உடமைகளை பாராது உயிர் பிழைப்பதற்கான வழிவகைகளை மேற்கொள்ளல் | • தொடர்பாடல் ஊடகங்களைச் செவிமடுத்து நிலநடுக்கம் பற்றி அவதானமாக இருத்தல்<br>• நிலநடுக்கத்துக்கு ஏற்றவகையில் தாக்குப் பிடிக்கும் கட்டிடங்களை அமைத்தல்<br>• பாரமில்லாத பொருட்களையும் இயந்திரங்களையும் பயன்படுத்துதல்<br>• பொருட்களைச் சுவர்களோடு இறுக்கமாகப் பொருத்தி வைத்தல்<br>• புவிநடுக்க அளவீட்டுக் கருவியைப் பொருத்திப் பயன்படுத்தல்<br>• திடீரென ஏற்படும் மாற்றங்களை அறிந்து அறிவுறுத்தல்<br>• பாடசாலைகளில் கலைத் திட்டங்களைப் புகுத்திக் கற்பித்தல்<br>• மக்களுக்கு வழிபுணர்வுக் கருத்தரங்குகளை நடாத்திப் பயிற்சியளித்தல் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| மண்சரிவு | | |
|---|---|---|
| அனர்த்தங்களை இனங்கானல் | உடனடியாக செய்ய வேண்டியன | முகாமைத்துவம் தொடர்பாக எடுக்க வேண்டியவை |
| • அதிக மழை<br>• நிலம் வெடிப்புற்றுக் கீழிறங்குதல்<br>• சரிவுகளில் உள்ள கட்டிடங்களில் வெடிப்புக்கள் தோன்றுதல்<br>• திடீரென நீரூற்றுக்களும் சேற்று ஊற்றுக்களும் தோன்றுதல்<br>• பாறைகளும் மண்ணும் மெல்ல மெல்லக் கீழிறங்குதல் | • அப்பகுதியில் இருந்து வெளியேறுதல்<br>• மறு அறிவித்தல்வரை அப்பகுதிக்குள் செல்லாதிருத்தல் | • நீர் வழிந்தோடக்கூடிய கால்வாய்களை அமைத்தல்<br>• நீர் வழிந்தோடும் வழிகளைத் தடை செய்யாதிருத்தல்<br>• படிகட்டுமுறைப் பயிர்ச்செய்கையில் ஈடுபடுதல்<br>• மண்ணைப் பாதுகாப்பதற்கு மரங்களை நட்டு வளர்த்தல்<br>• மண்சரிவுகளுக்கு உள்ளாகும் மட்படையைக் கம்பிவலைகளால் இணைத்தல்<br>• மலைச்சிகரங்களில் அனர்த்தம் ஏற்படும் பகுதிகளில் வீடுகள், கட்டிடங்கள் கட்டாதிருத்தல் |

| சூறாவளி | | |
|---|---|---|
| அனர்த்தங்களை இனங்கானல் | உடனடியாக செய்ய வேண்டியன | முகாமைத்துவம் தொடர்பாக எடுக்க வேண்டியவை |
| • வானம் இருண்டு இருத்தல்<br>• தொடர்ச்சியாகப் பெய்யும் மழை<br>• கடற்கரையோரப் பிரதேசங்களில் கடல் பொங்கித் தரைக்குள் நுழைதல்<br>• கடும் காற்று வீசுதல் | • வானொலி கேட்டல்<br>• திறந்த வெளியிடங்களுக்குச் செல்லாதிருத்தல்<br>• கதவு யன்னல் ஓரங்களில் நிற்பதைத் தவிர்த்தல்<br>• வலுவான அல்லது கொங்கிறீட் இடங்களைக் கெட்டியாகப் பிடித்தல் | • எப்போதும் தொடர்பாடல் ஊடகங்களைச் செவிமடுத்தல்<br>• சூறாவளி ஏற்படும் காலம்பற்றி அறிந்திருத்தல்<br>• ஆபத்தை ஏற்படுத்தும் மரங்களை வெட்டுதல்<br>• அனர்த்த முகாமைத்துவ நிலையங்களை ஏற்படுத்தல்<br>• சூறாவளியை தாக்குப்பிடிக்க கூடிய வீடுகளை அமைத்தல் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| | • உறுதியான கூரையின் கீழ் தங்கியிருத்தல்<br>• சிறுபிள்ளைகளை வெளியில் விடாது வீட்டினுள் வைத்திருத்தல் | • அவசர சந்தர்ப்பங்களில் பயன்படுத்துவதற்கு என ஒரு பயணப் பொதியினைத் தயாராக வைத்திருத்தல் |

| வரட்சி | | |
|---|---|---|
| அனர்த்தங்களை இனங்கானல் | உடனடியாக செய்ய வேண்டியன | முகாமைத்துவம் தொடர்பாக எடுக்க வேண்டியவை |
| • மழை தொடர்ந்து 15 நாட்களிற்கு மேல் பெய்யாதிருத்தல்<br>• வெப்பம் அதிகரித்தல்<br>• பிரகாசமான சூரிய வெளிச்சம்<br>• சேற்றுப் பிரதேசங்களில் வெடிப்புக்கள் ஏற்படுதல் | • நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்துதல்<br>• ஆறுகள் குளங்கள் நீர் நிலைகள் என்பவற்றை அசுத்தமாக்காதிருத்தல்<br>• மரம் செடி கொடிகள் மூடுகையை நீக்காதிருத்தல்<br>• கடும் வெப்பத்தினால் மண் மூடுகையை நீக்காதிருத்தல்<br>• நீரை வீணாக்காதிருத்தல் | • குளங்கள் ஏரிகள் என்பவற்றை அமைத்தல்<br>• நீரேந்து பிரதேசங்களை பாதுகாப்பதற்கு காடுகளை அழிக்காதிருத்தல்<br>• மரங்களை நடுதல்<br>• நீரை அத்தியாவசிய தேவைகளிற்கு மட்டும் பயன்படுத்தல்<br>• மழை நீர் சேகரிப்புத் தாங்கிகளை அமைத்தல்<br>• குழாய்க் கிணறுகளைப் பயன்படுத்தல்<br>• மண்ணை பாதுகாப்பதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்<br>• குறைவான நீரைப் பயன்படுத்தக்கூடிய பயிரை நடுதல் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரட்சியில் இருந்து மீளுவோம்

மனிதனின் அடிப்படைத் தேவைகளான உணவு, உடை, உறைவிடம் அவசியமாகின்றன. அத்துடன் உயிர் வாழ்வதற்கு வளியும், நீரும் தேவை. உயிரினங்களுக்கு இலவசமாக காற்று, நீர் முதலியன கிடைக்கின்றன. மனிதனால் யாவும் மாசடைகிறது. கட்டில்லாப் பொருட்கள் அரிதாகி வருகின்றன. வளிமண்டலம் மாசடைந்து போகிறது. முழுஉலகின் நீரளவில் 97.5% உப்புநீராகும். மிகுதியான 2.5% நந்நீரிலில், 70% உறைந்து ஐஸாக துருவப்பகுதியிலும். உயர்மலைப்பகுதியிலும் உள்ளது. மிகுதி 30% வளியிலும் நிலத்தடி நீராகவும் உள்ளதாக ஆய்வுகள் கூறுகின்றன. உலகின் மனித நேரடி பயன்பாட்டுக்காக 1% நந்நீர்தான் கிடைக்கிறது. இதனை நமது மக்கள் புரிந்து கொண்டு செயற்படவேண்டும். இலங்கையில் வறள்வலயத்தில் வடகீழ் பருவக்காற்றினால் மழைவீழ்ச்சி கிடைக்கிறது. வரட்சியான காலங்களில் நீர் பற்றக்குறை ஏற்படுகிறது.

## இக்குறைபாட்டை மழைநீரைச் சேகரிப்பதன் மூலம் நிவர்த்தி செய்யலாம்.

இதனை (Rain water harvesting) மழை நீரைச் சேகரித்தல் எனக் கூறுவார்கள். இது இருவகைப்படும்.

1) Roof top water harvesting - வீட்டுக் கூரையில் இருந்து மழைநீரைச் சேகரிப்பது.

இது ஒரு இலகுவான முறையாகும்.. மழைகாலத்தில் நமது வீட்டுக் கூரையில் இருந்து மழைநீர் வடிகின்றது. வடிந்த மழைநீர் வீணே விரையமாகிப் போகின்றது. அந்த நீரை பெரிய பாத்திரத்தில் வடித்துச் சேகரித்து, வேண்டியபோது பயன்படுத்துவதுதான் இம்முறையாகும். தற்போது பெரிய பிளாஸ்ரிக் தாங்கிகள் கிடைக்கின்றன. கூரையில் இருந்து வடியும் மழைநீரை ஏந்தும் வண்ணம் பீலியைப் பொருத்தி தாங்கியினுள் சேகரிக்கலாம். நீரைச் சேகரிக்குமுன் வடிக்கவேண்டும். இதனை நேரடியாகக் குடிப்பதற்குப் பயன்படுத்தலாம். மாலைதீவில் இச்செயல் முறைகளைக் காணலாம். அங்கு வீடு கட்டுமுன் அடித்தளத்தல் தாங்கிகளை அமைத்து அதன்மேல் வீடுகளைக் கட்டுவார்கள். பீலிகளைப் பொருத்தி மழைநீரை தாங்கியினுள் சேகரித்துப் பயன்படுத்துகிறார்கள்.

2) Recharging ground water - வழிந்தோடும் மழைநீரை குளங்களில் சேமித்துப் பயன்படுத்தல்.

இந்தச் செயற்பாட்டை நமது முன்னோர் அறிந்திருந்தார்கள். அதனால்தான் குளங்களை அமைத்து நீரைச் சேகரித்து வளம் பெருக்கினார்கள். கிராமங்கள் தோறும் மழைநீரை குளங்களிலும், கேணிகளிலும் சேகரித்து வைக்கும் திட்டத்தை நடைமுறைப் படுத்தினால் வரட்சியின் கொடுமையில் இருந்து நம்மை நாம் வீடுவித்துக் கொள்ளலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| வெள்ளம் | | |
|---|---|---|
| அனர்த்தங்களை இனங்கானல் | உடனடியாக செய்ய வேண்டியன | முகாமைத்துவம் தொடர்பாக எடுக்க வேண்டியவை |
| • தொடர்ச்சியான பெரும்மழையும், கடும் காற்றும்<br>• ஆறுகளின் கழிமுகப் பகுதிகளில் நீர்மட்டம் உயர்தல்<br>• நீர் வழிந்தோடா திருத்தல்<br>• கால்வாய்களும், அணைக்கட்டுகளும் நீர் நிரம்பி வழிதல் | • இருப்பிடங்களைவிட்டு வெளியேறுதல்<br>• நீர் தேங்கி நிற்காது வழிந்தோடச் செய்தல்<br>• ஆறுகளின் கழிமுகப்பகுதிகள், நீர்நிலைகளை விட்டு வெளியேறுதல்<br>• பாதுகாப்பான உயர்நிலங்களுக்குச் செல்லுதல்<br>• உடமைகளைப் பார்க்காது உயிர்களைப் பாதுகாக்க முயற்சித்தல்<br>• தற்காலிக முகாம்களை அமைத்தல் | • வெள்ளப்பெருக்கு ஏற்படும் பகுதிகளில் தாக்குப் பிடிக்கக்கூடிய மாடி வீடுகளை அமைத்தல்<br>• காடுகளை அழிக்காதிருத்தல்<br>• தாழ்நிலங்களை நிரப்புவதைத் தவிர்த்தல்<br>• நீரோடும் பகுதிகளைத் துப்பரவாக வைத்திருத்தல்<br>• ஆறுகளின் மண் அகழ்வதைத் தவிர்த்தல்<br>தோணி, வள்ளம் போன்றவற்றைத் தயார் நிலையில் வைத்திருத்தல் |

| சுனாமி | | |
|---|---|---|
| அனர்த்தங்களை இனங்கானல் | உடனடியாக செய்ய வேண்டியன | முகாமைத்துவம் தொடர்பாக எடுக்க வேண்டியவை |
| • கடலில் பெருமிரைச்சல் ஏற்படுதல்<br>• விலங்குகளின் அசாதாரண நடத்தைக் கோலங்கள்<br>• நிலம் அசைதலும் கடலில் மணல் வெளிகள் தோன்றுதல்<br>• கடல் வற்றுதல் | • தொடர்பாடல் ஊடகங்களோடு தொடர்பேற்படுத்தல்<br>• உடனடியாக உயரமான இடங்களுக்குச் செல்லுதல்<br>• மறு அறிவித்தல்வரை அப்பகுதிகளுக்குள் செல்லாதிருத்தல்<br>• உயிர்களை பாதுகாக்கும் முயற்சிகளில் ஈடுபடுதல் | • கடலையண்டிய பகுதிகளில் கட்டிடங்களை அமைக்காதிருத்தல்<br>• சுனாமித்தாக்கங்களுக்கு ஈடு கொடுக்கக் கூடிய கட்டிடங்களை அமைத்தல்<br>• பாரமற்ற இலகுவான பொருட்களைப் பயன்படுத்தல்<br>• சட்டரீதியான கொள்கைகளையும், சட்டங்களையும் உருவாக்கி நடைமுறைப்படுத்தல் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| இடிமின்னல் | | |
|---|---|---|
| அனர்த்தங்களை இனங்கானல் | உடனடியாக செய்ய வேண்டியன | முகாமைத்துவம் தொடர்பாக எடுக்க வேண்டியவை |
| • இடிமுழக்கத்துடன் மழை<br>• மின்னலுடன் கூடிய காற்று<br>• ஏப்பிரல், மே, ஒக்ரோபர், நவம்பர் மாதங்களில் இடிமின்னல் பெருமளவு ஏற்படும்<br>• அக்காலங்களில் அவதானமாக இருத்தல் | • திறந்த வெளியிடங்களில் நிற்பதைத் தவிர்த்தல்<br>• மின் தொடர்பினைத் துண்டித்தல்<br>• உயர் மரங்களின் கீழ் நிற்பதைத் தவிர்த்தல்<br>• உலோகத் தளபாடங்களைப் பயன்படுத்தலைத் தவிர்த்தல்<br>• திறந்த வாகனங்களில் பயணித்தலைத் தவிர்த்தல்<br>• மின் உபகரணங்களைப் பயன்படுத்துவதைத் தவிர்த்தல் | • மின்னலைத் தாங்கும் தரைக்கீழ் கம்பிகளைக் கட்டிடங்களுக்குப் பொருத்துதல்<br>• இடி தாங்கிகளை அமைத்தல்<br>• கட்டிடங்களுக்கிடையில் உலோகப் பொருட்கள் மூலம் தொடர்புகளை ஏற்படாதிருத்தல் |

## வீட்டில் ஏற்படக்கூடிய விபத்துக்கள்

சாதாரணமாக நாம் வீடுகளில் பாதுகாப்புப் பற்றி சிரத்தை காட்டுவதில்லை. வீட்டில் பலவாறான விபத்துக்கள் ஏற்படுவதை அவதானிக்கலாம். பெற்றோரின் கவனக்குறைவே இவைகளுக்கான காரணங்களாகும். பிள்ளைகள் சுறுசுறுப்பானவர்கள். ஓடியாடி விளையாடுவார்கள். எதனையும் தொட்டளைந்து பார்ப்பார்கள். நாம்தான் மிகுந்த கரிசனை காட்ட வேண்டும். பாதுகாப்பை அளிக்க வேண்டும்.

வீட்டில் கீழ்தரப்படுவனவற்றாலும் வேறு வகையிலும் விபத்துக்கள் ஏற்படலாம்.

- நிலம், படிகள், குளிக்குமிடம் பாதுகாப்பற்ற நிலையில் இருத்தல்.
- சமையலறையிலும், வீட்டின் உள்ளும் புறமும் பொருட்கள் ஒழுங்கு முறையில் இல்லாதபோதும். அசுத்தமாக இருக்கும் போதும் விபத்துக்கள் ஏற்படலாம்.
- கூரிய பொருட்களைப் பாதுகாப்பான இடங்களில் வைக்காதுவிடுதல்.
- மின்சாரப் பயன்பாட்டின்போது கவனமற்று இருத்தல்.
- மண்ணெண்ணெய் விளக்குகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- எரிவாயுக் கொள்கலன்.
- சமையலறை தீ பற்றிக்கொள்ளல்.
- வீட்டில் வளர்க்கும் செல்லப் பிராணிகள் - நாய், பூனை, ஆடு, மாடு.
- கிணறு போன்ற நீர்நிலைகள்.
- கிருமிநாசினி
- எலித் தொல்லை.

இவைபோன்றனவால் விபத்துக்கள் தோன்றி பேரிடரை விளைவிக்கும்.

**வீட்டு விபத்துக்களினால் ஏற்படக்கூடிய பாதிப்புக்கள்.**

- நிலம், படிகள், குளிக்குமிடம் பாதுகாப்பற்ற நிலையில் இருந்தால் விழுந்து கைகால் முறிவுகளும் . உயிராபத்துக்களும் ஏற்படலாம்.
- சமையலறையிலும், வீட்டின் உள்ளும் புறமும் பொருட்கள் ஒழுங்கு முறையில் இல்லாதபோதும். அசுத்தமாக இருக்கும் போதும் விபத்துக்கள் ஏற்பட வாய்ப்புண்டு. இவை காலகதியில் பெரிய அனர்த்தமாகிவிடலாம்.
- கூரிய பொருட்களைப் பாதுகாப்பான இடங்களில் வைக்காதுவிடின் விபத்துக்களை உண்டாக்கும்.
- மின்சாரப் பயன்பாடு மிகமுக்கியமானது. மின்னொழுக்கு, மின்கசிவு எரிகாயங்களையும், உயிராபத்தை ஏற்படுத்தும்.
- மண்ணெண்ணெய் விளக்குகளின் பாவனையில் அவதானம் தேவை. அதிகமான விபத்துக்கள் மண்ணெண்ணெய் விளக்குகளால் ஏற்படுகின்றன. எரிகாயங்கள், வீடும், உடமைகளும் எரிந்து நலிவினையும்,ஆபத்தையும் விளைவிக்கும்.
- எரிவாயுக் கொள்கலன் வெடிப்பதால் உயிராபத்துக்கள் ஏற்படும் சந்தர்ப்பங்கள் நிறயவே உண்டு.
- சமையலறை தீ பற்றிக்கொள்ளல். அதனால் அனர்த்தங்கள் பாதிப்புக்களை ஏற்படுத்துகின்றன.
- வீட்டில் வளர்க்கும் செல்லப் பிராணிகள் - நாய், பூனைகள் கடிப்பதாலும், ஆடு, மாடு முட்டுவதாலும் விபத்துக்கள் ஏற்பட வாய்ப்புண்டு.
- கிணறு போன்ற நீர்நிலைகளில் தவறி விழுவதாலும், அவை நச்சுத்தன்மை அடைவதாலும், வாந்திபேதி போன்ற நோய்களினால் உயிர் ஆபத்துக்ள் ஏற்படலாம்.
- கிருமிநாசினிப் பயன்பாடு பேராபத்தைத் தரவல்லது.
- எலி கடிப்பதால் எலிக்காய்ச்சல் எனும் கொடிய நோய் பரவுகிறது. எலியின் சிறுநீர் தண்ணீரோடு கலப்பதால், அத்தண்ணீரை நாம் பயன்படுத்தும் போது எலிக்காய்ச்சல் பரவுவதாக அண்மைக்கால ஆய்வுகள் தெரிவிக்கின்றன. இலங்கையின் தென் பகுதி மக்கள் பெரிதும் பாதிக்கப் படுகின்றனர். ஆதலால் எலிகளின் தொல்லைகளை அகற்ற முற்படவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீட்டு விபத்துக்களில் இருந்து பாதுகாப்புப் பெறுதல்

- நிலம், படிகள், குளிக்குமிடம் முதலியனவற்றைத் துப்பரவாகவும், பாதுகாப்பான நிலையிலும் வைத்திருத்தல்.
- சமையலறையிலும், வீட்டின் உள்ளும் புறமும் பொருட்கள் ஒழுங்கு முறையிலும், சுத்தமாகவும் வைத்திருத்தல்.
- கூரிய பொருட்களைப் பாதுகாப்பான இடங்களில் வைக்கவேண்டும். அதனால் விபத்துக்களைத் தவிர்த்துக்கொள்ளலாம்.
- மின்சாரப் பயன்பாடு மிகமுக்கியமானது. மின்னொழுக்கு, மின்கசிவு ஏற்படாவண்ணம் பாதுகாப்பாகவும், மின்னுபகரணங்களைக் கவனமாகவும் கையாளுதல் வேண்டும்.
- மண்ணெண்ணெய் விளக்குகளின் பாவனையில் அவதானம் தேவை.
- எரிவாயுக் கொள்கலன் ஆபத்தைத் தரவல்லது. அதனைக் கவனமாகப் பாவித்தல் வேண்டும்..
- சமையலறையில் தீயின் பயன்பாடு அதிகம். வேலைகள் முடிந்ததும் தீயினை அணைத்து விடவேண்டும். வாளிகளில் தண்ணீர் தயார்நிலையில் இருக்க வேண்டும்.
- வீட்டில் வளர்க்கும் செல்லப் பிராணிகள் - நாய், பூனை, ஆடு, மாடு பொன்றவற்றைச் சீண்டாவண்ணம் பார்த்துக் கொள்ள வேண்டும்.
- கிணறு போன்ற நீர்நிலைகளில்
- கிருமிநாசினிப் பயன்பாடு பேராபத்தைத் தரவல்லது.
- எலி கடிப்பதால் எலிக்காய்ச்சல் எனும் கொடிய நோய் பரவுகிறது. எலிகளை இல்லாதொழிப்பது நல்லது.

## வீதி விபத்துக்கள்

வீதி விபத்துக்கள் இன்று மோசமான எல்லையைத் தொட்டுள்ளன. அதிகமாகப் பாதிக்கப்படுவது பாடசாலை மாணவர்கள்தான். பாடசாலையில் வீதி ஒழுங்குகள் பற்றிய தொடர்நிகழ்வுகளை நடத்த வேண்டும். பாடசாலைப் பிள்ளைகளிடையே பலவிதமான விழிப்புணர்வுகளை ஏற்படுத்துவதால் விபத்துக்களைக் குறைத்துக் கொள்ளலாம். பின்வரும் காரணங்களால் வீதி விபத்துக்கள் ஏற்படுகின்றன.

- வாகன நெரிசலால்.
- வாகனங்களின் வேக அதிகரிப்பினால்.
- பாதையைக் குறுக்கறுக்கும் போது
- பாதையில் குழிகள் விழுவதால்.
- பாதையில் வழுக்கி விழுவதால்.
- பாதையில் விபத்துக்கள் ஏற்படுவதால்.
- பாதையில் கற்கள் குவிக்கப்பட்டு இடைஞ்சல் தருவதால்.
- கட்டாக் காலிகளின் தொல்லையால்.
- விசர் நாய்களின் தொல்லை.
- பாம்புகளின் தொல்லை
- சமாந்திரமாக வரிசையாக நடப்பது அல்லது வண்டிகளை ஓட்டுவதால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- அவசரமாக இயங்குவதால்.

- **வீதி விபத்துக்களால் உண்டாகும் பாதிப்புக்கள்**

- வாகனங்களில் மோதுண்டு உயிராபத்து ஏற்படலாம்.
- கைகால் முறிவுகள் ஏற்படலாம்.
- வீதிகளில் உருவாகும் குழிகளினால் விபத்துக்கள் உருவாகலாம்.
- கற்கள் தடுக்கிக் காயங்கள் ஏற்படலாம்.
- பாம்பு தீண்டுவதால் உயிராபத்துக்களும் ஏற்படலாம்.
- விபத்துக்களால் அங்கவீனங்கள் ஏற்படலாம்.

- **வீதி விபத்துக்களில் இருந்து பாதுகாப்புப் பெறுதல்**

- வீதிகளில் அவதானமாகச் செல்லுதல்.
- வீதியில் வலதுபுறமாக நடந்து செல்லுதல்.
- வீதியைக் குறுக்கறுக்கும் போது மஞ்சள் கடவையைப் பயன்படுத்தல்.
- இருபுறமும் பார்த்துப் பின் வீதியைக் கடத்தல்.
- பழுதடைந்த வீதிகளை உரியவர்கள் திருத்துதல்.
- பாதையைப் பார்த்துக் குழிகளில் விழாது செல்லுதல்.
- வீதியின் இருபக்கங்களையும் சுத்தமாக வைத்திருத்தல்.
- சாரதிகளும், மற்றவர்களும் வீதி ஒழுங்குகளைக் கவனித்து நடத்தல்.

## நுளம்பினால் ஏற்படும் அனர்த்தங்கள்

வீடுகளிலும் பாடசாலைகளிலும், பல்வேறு நோய்கள் பரவுவதற்கு நுளம்புகள்தான் காரணம். நோய்கள் பரவுவதும் ஒருவகை விபத்துத்தான். இவ்விபத்துக்கள் அனர்த்தத்தைத் தருவனவாக உள்ளன. வீட்டுச் சூழலையும், பாடசாலைச் சூழலையும் சுத்தமாக வைத்திருப்பது முக்கியமானது. நுளம்புகளினால் ஏற்படும் நோய்களை அறிந்திருத்தல் நலம். அதனால் ஏற்படும் கொடிய நோய்களையும் அறிந்திருந்து வருமுன் காக்கும் திட்டத்துக்கு ஆயத்தமாயிருத்தல் சாலச்சிறந்ததாகும்.

- மலேரியா ஒரு கொடிய நோயாகும். கட்டுப்படுத்தாவிட்டால் உயிராபத்துக்களை விளைவிக்கும். மலேரியாவைப் பரப்புவது **'அனோபிலிஸ்' என்னும் நுளம்புவகையாகும்.**
- **யானைக்கால் 'கியூலெக்ஸ்' என்ற நுளம்புவகையினால் ஏற்படுகின்றது.**
- **யப்பானிய மூளைக்காய்ச்சல் கியூலெக்ஸ் ரைமீரியோ ரிக்கஸ் என்னும் நுளம்புவகையால் ஏற்படுகிறது.**
- **டெங்கு எடிஸ் இஜிப்ரஸ் அல்போபிக்ரஸ் என்ற நுளம்புவகையால் தோன்றுகிறது.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நுளம்பின் பெருக்கத்தைக் கட்டுப்படுத்துவதன் மூலம் இவ்வகையான நோய்களில் இருந்து நம்மையும், நமது சமூகத்தையும் காப்பாற்றலாம். ஆதலால் நுளம்பு பெருகும் இடங்களை அறிந்திருத்தல் நல்லது.

**நுளம்பு பெருகும் இடங்களை அறிவோம்**

- நீர் தேங்கியுள்ள இடங்கள்.
- சேற்று நீர்ப்பகுதிகள்.
- குப்பை கூளங்கள் குவிந்து கிடக்கும் இடங்கள்.
- நீர் தேங்கியுள்ள கழிவுப் பாத்திரங்களான சிரட்டை, தகரப்பேணி, ரயர், பிளாஸ்ரிக் பாத்திரங்கள்.
- சுற்றாடலிலும், வீட்டிலும் உள்ள நீர்ப்பாவனை நிலையங்கள்.

**நுளம்பின் பெருக்கத்தை எவ்வாறு கட்டுப்படுத்தலாம்**

- நீர் தேங்கியிராதவாறு பாதுகாத்தல்.
- கழிவுப் பாத்திரங்களான சிரட்டை, தகரப்பேணி, ரயர், பிளாஸ்ரிக் பாத்திரங்களை அகற்றுதலும் அவற்றை அழித்துவிடுதலும்.
- நீர் தேங்கும் இடங்களை மூடிவிடுதல்.
- நுளம்புக் குடம்பிகளை உணவாக உண்ணும் மீன்களை நீர்நிலைகளில் வளர்த்தல்.
- மலத்தியன் தெளித்தல்.
- குப்பை கூளங்களை அகற்றிச் சுற்றுப்புறச் சூழலைப் பாதுகாத்தல்.
- நீரின் மேற்பரப்பில் எண்ணெய்ப் படலம் இடுதல்.

**நுளம்பின் தொல்லையில் இருந்து விடுபடல்**

- மலத்தியன் இடுதல்.
- வேம்பின் விதை, இலை போன்ற மூலிகையிலை, விதைகளைச் சேகரித்துப் புகையிடுதல்.
- நுளம்பு வலையைப் பயன்படுத்தல்.
- நுளம்புச் சுருள் பாவித்தல்.

**பாதுகாப்பை உறுதிப்படுத்தல்**

- உடலில் நோய்க்குறி தென்பட்டால் வைத்தியரின் உதவியைப் பெறுதல்
- வைத்தியரின் ஆலோசனைகளைப் பெறுதல்.
- ஒழுங்காக மருந்தைப் பயன்படுத்தல்.

**ஏனைய விபத்துக்கள் ஏற்படும் சந்தர்ப்பங்களை அறிதலும், தவிர்த்தலும்**

1. வாழைப்பழத் தோல்.
2. உடைந்த போத்தல் துண்டங்கள்.
3. தகரப் பேணி, தகடுகள்
4. ஆணிகள் போன்றவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்படும் பாதிப்புக்கள்.

- வாழைப்பழத்தோல் வழுக்கும் தன்மை கொண்டது. வீதியில் போடுவதால் வழுக்கி விழநேரிடும். விழுந்தால் கைகால் முறிவு ஏற்படும். தலையடிபட்டு உயிராபத்துக்களும் ஏற்படலாம்.
- காயங்கள் ஏற்படும்.
- தகரப் பொருட்கள், ஆணி போன்றவற்றால் ஏற்படும் காயங்கள் ஏர்ப்பை உண்டாக்கும். உயிராபத்தை ஏற்படுத்தும்.

தவிர்க்கும் முறைகள்

- வாழைப்பழத் தோலை வீட்டினுள்ளும், வீதிகளிலும் போடாதிருத்தல்.
- உடைந்த தகரப் பொருட்களை அகற்றிப் பாதுகாப்பான இடத்தில் போடுதல்.
- ஆணிகளைப் பாதுகாப்பான இடத்துக்கு அப்புறப் படுத்தல்.
- பாதுகாப்பை உறுதிப்படுத்தல்.
- முதலுதவிச் சிகிச்சை பெறுதல்.
- விபத்துக்கள் ஏற்படும்போது வைத்தியரின் உதவியைப் பெறுதல்.
- ஒழுங்காக மருந்தைப் பாவித்தல்.
- வைத்தியரின் ஆலோசனைகளைப் பெறுதல்.

தீயினால் ஏற்படும் விபத்துக்களும் பாதிப்புக்களும்

- குப்பி விளக்குப் போன்ற மண்ணெண்ணெய் விளக்குகளைப் பயன்படுத்துவதால் தவறுதலாக விழுந்து தீப்பற்றும் சந்தர்ப்பங்கள் உண்டு. அதனால் உடலில் தீக்காயங்கள் ஏற்படும். ஓலைவீடுகளில் இலகுவாக தீப்பற்றிக் கொள்ளும் வாய்ப்புக்கள் அதிகமாகவே உண்டு.
- வாயு அடுப்புக்கள், ஏனைய அடுப்புக்களாலும் தீப்பற்றும் அபாயம் உண்டு.
- மின்சாரமும் தீப்பற்றிக் கொள்ள இடமளிக்கிறது. மின்சாரக் கம்பிகள் அறுந்து விபத்துக்களை ஏற்படுத்தலாம். மின்னொழுக்கு ஏற்பட்டு ஆபத்துக்களை விளைவிக்கும். மின்சார உபகரணங்களைக் கவனக்குறைவாகப் பயன்படுத்துவதால் ஆபத்துக்கள் ஏற்பட வாய்ப்புண்டு.

- தீயினால் ஏற்படும் விபத்துக்களைத் தவிர்த்துக் கொள்ளுதல்
- குப்பி விளக்குப் போன்ற மண்ணெண்ணெய் விளக்குகளைப் பயன்படுத்துவதால் தவறுதலாக விழுந்து தீப்பற்றும் சந்தர்ப்பங்கள் உண்டு. அதனால் அவற்றை அவதானமாகப் பாவிக்க வேண்டும்.
- வாயு அடுப்புக்கள், ஏனைய அடுப்புக்களாலும் தீப்பற்றும் அபாயம் உண்டு. ஆதாலால் அவற்றை மிகக்கவனமாகப் பாவிக்கப் பழகிக் கொள்ளவேண்டும்.
- மின்சாரப் பாவனையில் மிகுந்த கவனம் தேவை. மின்சார உபகரணங்களைக் கவனமாகப் பயன்படுத்த வேண்டும். மின்னொழுக்கு ஏற்படாதவாறு அவதானமாக இருக்க வேண்டும். மின்சார ஆபத்துக்களைத் தவிர்த்துக் கொள்ள தானியங்கி ஆளிகளை (Trip



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

switch) பயன்படுத்தவேண்டும்.

- மின்சாரக் கம்பிகளில் கொழுவி களவாக மின்பெறுவதைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும்.
- உடையில் தீப்பற்றிக் கொண்டால் ஓடதலைத் தவிர்த்து, நிலத்தில் விழுந்து புரளுதல் நன்று. ஈரச்சாக்கு அல்லது ஈரத்துணியினால் சுற்றுதல் பயனுள்ளது.
- உடனடியாக வைத்திசாலைக்குச் செல்லுதல் வேண்டும்.
- மின்சாரத்தினால் ஆபத்து ஏற்படும்போது மின்சாரத்தைத் துண்டித்து விடுதல்வேண்டும்.
- செயற்கைச் சுவாசம் வழங்கி வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லுதல் வேண்டும்.

## நீரினால் அடித்துச்செல்லப் படுதல்.

நீர் உயிர் வாழ்வதற்கு மிக அவசியமானது. ஆனால் நீரினால் ஆபத்துக்களும் உண்டு. நீர் நிலைகளில் குளிக்கும் போது பேரிடர் உருவாகலாம். உயிர் ஆபத்துக்கள் ஏற்படலாம். விபத்துக்களும், பாதிப்புக்களும், காயங்களும் ஏற்படலாம்.

- பாதிப்புக்கள்: காயங்கள் ஏற்படலாம். உயிராபத்துக்கள் ஏற்படலாம்.

### தவிர்க்கும் முறைகள்:

- ஆழமான நீர விரைந்து செல்லும் நீர் நிலைகளில் குளிப்பதைத் தவிர்த்தல்.
- கடல் கொந்தளிப்பாக இருக்கும் போது குளிப்பதைத் தவிர்த்தல்.
- நீந்தத் தெரிந்திருத்தல் அவசியம்.
- பாதிப்புக்குள்ளானவருக்கு முதலுதவி அளித்தல்.
- வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லுதல்.

## நஞ்சுள்ள விதைகள், பொருட்களால் ஏற்படும் அபாயம்.

அண்மையில் திருகோணமலை வைத்தியசாலைக்குச் சென்றிருந்தேன். பல சிறார்கள் ஆமணக்கு விதகளை உட்கொண்டதனால் ஆபத்தான நிலையில் சிக்கியிருப்பதைக் கண்டேன். பலர் அலரி விதைகளையும், கிருமிநாசினிகளையும், மண்ணெண்ணெய்யையும் பாவித்து தங்கள் உயிரைப் போக்குவதற்கு முயற்சிகளை எடுத்துள்ளார்கள். நமது சமூகத்தில் இப்படிப்பட்ட செயல்களுக்கு இடமளிக்கலாகாது. உயிருக்கு ஆபத்தை விளைவிக்கும் பொருட்களையிட்டு விழிப்புக் கருத்தரங்குகளை நடத்தவேண்டும். அதனால் ஏற்படும் கொடுமைகளையும், சமூகத்துக்கு ஏற்படும் துயரங்களையும் எடுத்துச் சொல்லவேண்டும். உலகிலுள்ள உயிர்கள் அனைத்தும் தம்முயிர்களைக் காப்பதற்காகப் போராடுகின்றன. ஆனால் மனிதன் மட்டும் தனது உயிரையும். பிறரின் உயிர்களையும் அழிக்க முனைகிறான். இது வேடிக்கையாக இல்லை.?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூன்றாம் பகுதி

## அனர்த்தங்களில் இருந்து பாடசாலைகளைப் பாதுகாப்போம்

சகல உயிரினங்களும் வருமுன் காக்கும் செயல்களைப் புரிந்து அதற்கேற்பத் தங்களை இசைவாக்கிக் கொண்டுள்ளன. ஒவ்வாத காலங்களில் பாதுகாப்பாக வாழும்வகைகளை அவை மனிதனுக்குக் கற்றுத்தருகின்றன. மரஞ்செடி, கொடிகளும், பறவைகளும், விலங்குகளும் கற்றுத்தருவன ஏராளம். அனர்த்தங்களில் இருந்து அவை தப்பிக் கொள்கின்றன. காலநிலைகளுக்கேற்ற வகையில் தம்மைத் தயார்படுத்திக் கொள்கின்றன. அதற்கேற்ற உடலமைப்பும், உணரும் சக்தியும் அவற்றிடம் உண்டு. அவற்றின் இயற்கை வாழ்வுக்கு இடைஞ்சலாக மனிதன்தான் விளங்குகின்றான். இன்றைய கல்வித்திட்டத்தில் வருமுன் காப்போம் என்ற அனர்த்தமுகாமைத்துவத் தத்துவங்களைத் தொட்டந் தொட்டமாகப் பாடங்களில் புகுத்தியுள்ளார்கள். ஆழமாகப் பாடத்திட்டங்களை பார்ப்பவர்களுக்குப் புரியும்.

இன்றையக் கல்விமுறைகளில் முன்பள்ளிக் கல்வி முக்கிய பங்கினை வகிப்பதைப் பலரும் புரிந்திருப்பர். வடக்குக் கிழக்கு மாகாண கல்வி அமைச்சு மட்டுந்தான் முன்பள்ளிக் கல்விக்கு முக்கியத்துவம் அளித்து ஆரம்பப் பிள்ளைப் பருவ அபிவிருத்திக்கென தனி அலகினையே ஏற்படுத்தி முன்பள்ளிகளை அமைச்சில் பதிந்து ஒரு கட்டமைப்பினை ஏற்படுத்தியது. இலங்கை சிறுவர் பாதுகாப்பு நிறுவனத்தின் அனுசரணையோடு முன்பள்ளிக் கல்விக்கென பாடத்திட்டத்தையும் வரைந்து முன்பள்ளி ஆசிரியர்களுக்குப் பயிற்சியினையும் வழங்கி வருகிறது. பல அரசசார்பற்ற நிறுவனங்கள் இந்த நல்ல கைங்கரியத்தில் ஈடுபட்டுழைக்கின்றன. பயிற்சியில் முன்பள்ளிப் பாதுகாப்புப் பற்றி அழுத்தப்படுகிறது. முன்பள்ளிச் சூழலை எவ்வாறு வைத்திருக்க வேண்டும்; சிறார்களின் பாதுகாப்பில் ஆசிரியரும், பெற்றோரும் எவ்வாறு கரிசனை காட்டவேண்டும் என்பதனையிட்டு வற்புறுத்தப் படுகிறது. ஆசிரியர்களின் தரக்குறிகாட்டியிலும் இவை இடம் பெறுகின்றமை குறிப்பிடத் தக்கது. வடக்கு கிழக்கு என மாகாணங்கள் இரண்டாகப் பிரிக்கப்பட்டாலும் இரண்டு அமைச்சுக்களிலும் இந்தக் கட்டமைப்பு நிலைத்திருக்கிறது.

சாதாரணமாக பிள்ளைகளைத் தாக்கும் விபத்துக்களை அனைவரும் அறிந்திருக்கவேண்டும். பாதிப்புக்களில் இருந்து எவ்வாறு பாதுகாப்புப் பெறலாம் என்பவற்றை அறிந்து செயற்படவும் வேண்டும். சாதாரண விபத்துக்கள்தான் என்று வெறுமனே இருந்து விட்டால் பின் அது விஸ்வரூபம் எடுத்துப் பெரிய அனர்த்தத்தை விளைவிக்கும். வீடுகளிலும், பாடசாலைகளிலும் பாதுகாப்பை உறுதிப் படுத்தி பிள்ளைகளிடையே தயார்நிலையை ஏற்படுத்துவது நமது கடமையாகும்.

இயற்கை அனர்த்தங்களாலும், பல்வேறு நெருக்கடிகளினாலும் பாதிக்கப்படுவது பாடசாலையும். மாணவர்களுமே. ஆசிய ஆபிரிக்க நாடுகளில் மட்டுமல்ல அமெரிக்க ஐரோப்பிய நாடுகளிலும் அதிகமாகப் பாதிக்கப் படுபவர்கள் பாடசாலைச் சமூகத்தவர்கள்தான். குஜராத்தில் 2001ம் 2003ம் ஆண்டுகளில் புவியதிர்ச்சி பேரழிவை ஏற்படுத்தியது. 2001ல் நடந்த புவியதிர்ச்சியின் போது 400க்கு மேற்பட்ட மாணவர்கள் பலியாகினர். 2003ல் நடந்த நிலநடுக்கத்தில் 130 பாடசாலைகள் அழிவுற்றன. முப்பத்தாறாயிரம் மாணவர்கள் பாதிக்கப் பட்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


பாகிஸ்தானில் 600 மாணவர்கள் பலியாகினர். 2004 டிசம்பர் 26ல் நிகழ்ந்த சுனாமிப் பேரழிவால் இலங்கையில் 182 பாடசாலைகள் அழிந்தன. கல்முனைக் கல்விவலயத்தில் உள்ள அல் அஸ்மிஸ்பஸ் முஸ்லிம் வித்தியாலயத்தில் மட்டும் 104 மாணவர்கள் சுனாமியினால் அள்ளுண்டு போயினர். சுமார் 250 பாடசாலைகள் அகதிமுகாங்களாகின. நாலாயிரத்துக்கு மேற்பட்டோர் பாடசாலைச் சிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தியாவில் கும்பகோணத்தில் சிறிகிருஸ்ணா சரஸ்வதி பாடசாலையில் 2004 ஜூலைமாதம் 16ம் திகதி காலை 10.40 மணியளவில் தீபற்றிக் கொண்டது. ஓலையினால் வேயப்பட்ட கூரை இலகுவில் எரியத் தொடங்கியது. 250 சிறார்கள் கல்வி கற்றுக்கொண்டிருந்த அந்த ஆரம்பப் பள்ளியின் கதவுகள் பூட்டியிருந்தன. ஒடுங்கிய பாதை பிள்ளைகள் தப்பி வெளியேறுவதற்கு இடைஞ்சலாயிருந்தது. தீப்பற்றிக் கொண்ட செய்தி பரவி மக்கள் திரண்டனர். தீயணைக்கும் படையினர் கதவினை உடைத்து, திரண்டிருந்த மக்களை விலக்கி, உள்ளே நுழையும் போது 11மணியாகிவிட்டது. தீ கொழுந்து விட்டெரிந்தது. ஆண்கள், பெண்கள் என 94 சிறார்கள் எரிந்து சாம்பராகினர்.

பாடசாலைகளே அதிக உயிர்களையும், பௌதிக வளங்களையும் இழந்துள்ளதை அனர்த்த வரலாறுகள் காட்டுகின்றன. இலகுவில் பாதிப்புக்குள்ளாவதும் பாடசாலைகளே. எந்தவொரு ஆபத்துக்கள் வந்தாலும், மக்கள் பாதுகாப்புக்காக நாடுவது பாடசாலைகளைத்தான். எனவேதான் ஐக்கியநாடுகள் சபையின் கல்வி விஞ்ஞானக் கலாசார நிறுவனமான UNESCO வுடன் ISDR (International strategy for disaster reduction) அமையமும் இணைந்து 2006 - 2007 காலப்பகுதியைப் 'பாடசாலைகளைப் பாதுகாத்தல்' எனும் சிந்தனையை உலகக் கல்வி நிறுவனங்களிடையே தோற்றுவித்துள்ளன. சர்வதேச அனர்த்தக் குறைப்பு பாடசாலைகளைப் பாதுகாக்கும் கரிசனையில் அனர்த்த முகாமைத்துவக் கலைத்திட்டங்களையும், அவசரநிலைக் கல்விச் செயற்திட்ட ஏற்பாடுகளையும் முன்மொழிந்துள்ளது.



இந்தியாவில் புதுடில்லியில் உள்ள லூட்லோ காஸ்சில் கல்லூரியில் GeoHazards International (GHI) எனும் நிறுவனம் பாடசாலைப் பாதுகாப்பினை செயற்படுத்தி வருகிறது. சுமார் 1900 மாணவர்கள் முதலாம் தரம் தொடக்கம் பன்னிரெண்டாம் வகுப்பு வரை கற்கிறார்கள். அப்பாடசாலையின் அதிபர் தினமும் ஒன்றுகூடல் நிகழ்வின்போது பாடசாலைப் பாதுகாப்புப் பற்றிய செயற்பாடுகளைச் செய்விக்கிறார். மாதிரி ஒத்திகைகளும் நடைபெறுகின்றன. இது அவர்கள் வருமுன் காக்கும் திட்டத்தில் தம்மைத் தயார் நிலையில் வைத்துள்ளமையைக் காட்டுகிறது.



நமது நாட்டுக்கல்வித் திட்டத்தில் அனரத்தங்கள் பற்றிய விழிப்புணர்வுச் சிந்தனைகள் புகுத்தப்பட்டுள்ளன. 2004 டிசம்பர் மாதம் சுனாமி என்ற பெயரில் அழிவினை ஏற்படுத்திய கடற்கோள் அனர்த்தம் அனர்த்த முகாமைத்துவக் கல்விக்கு அடித்தளமிட்டுள்ளது. அரசு பல மட்டங்களிலும் அனர்த்த முகாமைத்துவக் கட்டமைப்புக்களைச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல மட்டங்களிலும் அனர்த்த முகாமைத்துவக் கட்டமைப்புக்களைச் செயற்படுத்தி வருகிறது. அமைச்சு மட்டத்தில் இருந்து கிராமிய அடித்தளம் வரைக்கும் இந்தக் கட்டமைப்புச் செல்வதை அவதானிக்கலாம். மாணவர்களின் அறிவினைத் தூண்டவும், அவர்களைத் தயார்நிலைக்கு இட்டுச் செல்லவும் ஆரம்ப வகுப்பிலிருந்தே தொடங்குவதற் கேற்ற ஆயத்தங்கள் பாடத்திட்டத்தில் இடம்பிடித்துள்ளன. மூன்றாம் வகுப்பில் 'பாதுகாப்பும் கரிசனையும்' எனத் தொடங்கி க.பொ.த(சா/த) வகுப்பில் அனர்தங்களை விரிவாகத் தந்து எவ்வாறு அழிவுகளைக் குறைத்துக் கொள்ளலாம் என்ற வழிமுறைகளும் விளக்கப்பட்டுள்ளன.

பள்ளிக்கூடங்கள் தொட்டுப் பல்கலைக்கழகங்கள் வரை பாடத்திட்டத்தில் இடம்பிடித்துள்ள அனர்த்த முகாமைத்துவம் நமது மக்களுக்கு இன்றியமையாதது. ஒவ்வொரு தனிமனிதனுக்கும் அனர்த்த முகாமைத்துவச் சிந்தனை சென்றடையவேண்டும். எப்போதும் தயார்நிலையில் இருக்க வேண்டும். துரதிர்ஸ்டவசமாக நமது நாடு வித்தியாசமான அனர்த்தத்தின் பிடியில் சிக்கி நாளை என்ன நடக்குமோ என்ற நிலையில் உள்ளது. இதனையிட்டு ஆட்சியாளர்களும். மக்களும் சிந்திக்க வேண்டும். தங்களுக்கு மட்டும் வாழாது இந்த நாட்டில் வாழும் அனைத்து மக்களின் எதிர்கால நல்வாழ்வுக்காகவும் விட்டுக் கொடுப்புகளைச் செய்து சாந்தியும் சமாதானமும் நிலவ வழிசெய்யவேண்டும்.

நமது நாட்டிலும் இயற்கை அனர்த்தங்களின் போதும், செயற்கை அனர்த்தங்களின் போதும் பாடசாலைச் சமூகந்தான் அதிகம் பாதிக்கப் படுகிறது. வடக்குக் கிழக்கில் போரினால் பாதிக்கப் பட்ட பள்ளி மாணவர்களின் எண்ணிக்கை எண்ணிலடங்காது. ஏறிகணைத் தாக்குதலால் பல பாடசாலைக் கட்டிடங்களும், ஆசிரியர்களும், மாணவர்களும் பாதிக்கப் பட்டுள்ளனர். பாடசாலைகள் அழிவுற்றன. அகதிமுகாங்களாகப் பல பாடசாலைகள் இன்றும் உள்ளன. வன்னி நிலப்பரப்பில் விமானத்தாக்குதலாலும், எறிகணை வீச்சுக்களாலும் நித்தமும் செத்துக் கொண்டிருப்பது பாடசாலை மாணவர்களும், ஆசிரியர்களும். தாய்மார்களும்தான்.

பாடசாலைதான் அனைத்துச் செயற்பாடுகளுக்கும் அடித்தளமாகிறது. சமூகத்துக்குள் புகுவதற்கு நுழைவாயிலாக உள்ளது. மாணவர்கள் மிக இலகுவில் செய்திகளைச் சமூகத்துக்கு எடுத்துச் செல்பவர்கள். மாணவர்களைச் சமாதானத்தின் தூதுவர்களாக நாம் மாற்றவேண்டும். நல்ல எண்ணக்கருக்களை அவர்களது உள்ளங்களில் விதைக்க வேண்டும். அனர்த்தங்கள் பற்றிய விழிப்புணர்வுகளை பாடசாலை மட்டத்தில் ஏற்படுத்தி அவர்களைப் பங்காளிகளாக ஆக்கவேண்டும். செய்தி காவிகளாக விளங்கும் நமது மாணவர்களைச் செயல்வீரர்களாக்குவது நமது கைகளில்தான் உள்ளது. அனர்த்தங்களின் தோற்றங்கள், அவற்றினால் ஏற்படும் அல்லல்கள், அவலங்கள், உயிரிழப்புக்கள், சொத்திழப்புக்கள், இடப்பெயர்வுகள் போன்ற நெருக்கடி நிலைகளைப் புரிய வைக்கவேண்டும். நெருக்கடி நிலை தோன்றும் போது எவ்வாறு செயற்பட வேண்டும் என்பதையிட்டுப் பயிற்சிகள் வழங்கவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டும்.

பாடசாலைகளில் அனர்த்தங்களின் தோற்றப்பாடுகள், அவற்றினால் விளையும் பாதிப்புக்கள், அவற்றைத் தடுக்க, அவற்றில் இருந்து பாதுகாப்புப் பெறும் முறைகள் எவை? என்பதனையிட்டு விளக்கமும். பயிற்சிகளும் வழங்கவேண்டும். இவை பாடப்புத்தகங்களில் இருந்தாலும் 'ஏட்டுச்சுரைக்காய்' போன்றே உள்ளது. அவற்றுக்குரிய முக்கியத்துவம் பற்றிய கரிசனைகளைப் பாடசாலைகள் மேற்கொள்வதில்லை. பரீட்சைகளை மையமாக வைத்தே கற்பித்தற் செயற்பாடுகள் நடைபெறுவதால் வாழ்க்கைக்கு வேண்டிய தற்காப்பு முறைகள் செயற்படுத்தப் படுவதில்லை. வாய்மொழிமூலம் விடையளிக்கத் தயாராக உள்ள மாணவர்கள் அவற்றைச் செயற்படுத்தும் பயிற்சியினைப் பெறுவதில்லை. நீந்துவது பற்றி விரிவாக விளக்கம் அளிக்கும் மாணவருக்கு நீந்தத் தெரியாதுள்ளது. ஆதலால் செயன்முறை மூலமான பயிற்சியினை வழங்குவதற்கான வழிவகைகளை முன்னெடுத்துச் செல்லவேண்டியுள்ளது. அந்த வகையில் இந்த நூலில் சிலவற்றை உள்ளடக்கியுள்ளேன்.

## பாடசாலை பாதுகாப்பு அணுகுமுறை

### ஏன் இந்தப் பாடசாலை பாதுகாப்பு?

பாடசாலைகளைக் கவனிக்கத்தான் அமைச்சுக்களும், திணைக் களங்களும் இருக்கின்றனவே. அவற்றைப் பற்றி நாம் ஏன் சிந்திக்கவேண்டும்.? எனப்பலர் சிந்திக்கலாம். ஆனால் பாடசாலைகள் சமூகத்தின் ஒரு அங்கம் என்பதை நாம் மறக்கமுடியாது. பாடசாலைகள் ஒரு சமூகத்தின கதவுகளாகும். பாடசாலைகளின் ஊடாக செய்திகளை சமூகத்துக்கு இலகுவாக அனுப்பலாம் அல்லது பரவச்செய்யலாம். பாடசாலைதான் அனைத்துச் செயற் பாடுகளுக்கும் அடித்தளமாகிறது. சமூகத்துக்குள் புகுவதற்கு நுழைவாயிலாக உள்ளது. மாணவர்கள் மிக இலகுவில் செய்திகளைச் சமூகத்துக்கு எடுத்துச் செல்பவர்கள். பாடசாலைகள் சமூகத்தின் பிரதிநிதிகளை உருவாக்குகின்றன. இளமையில் பதியும் நல்ல கற்றற் செயற்பாடுகள் வாழ்நாள் பூராவும் பிள்ளைகளது மனங்களில் நிலைத்து விடுகின்றன.



சமூகத்துக்குத் தீங்குபயக்கும் காரணிகளைப் பிள்ளைகள் இனங்காணும் வகையில் அவர்களை வழிப்படுத்த வேண்டும். நல்லவை எவை? அல்லவை எவை? என்பதைப் பிள்ளைகள் அறிந்திருக்க வேண்டும். வருமுன் காக்கும் திட்டத்தைப் பாடசாலைகள் ஊடாக வளர்த்து விட்டால் வளமான சமூகத்தை உருவாக்கலாம். அழிவுகளில் இருந்து ஓரளவு தப்பித்துக் கொள்ளலாம். இழப்புக்களையும் குறைத்துக் கொள்ளலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏன் வழிகாட்டல்கள் அவசியம் தேவை?

பல பாடசாலை மாணவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். பாடசாலைகளில் பாதுகாப்புத் தொடர்பான வழிகாட்டல்கள் அவசியம் தேவை. சுனாமியினாலும், நிலநடுக்கத்தினாலும், தீயினாலும் போரினாலும், இலங்கை உட்படப் பலநாடுகளில் பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ளன.

- விழிப்புணர்வு உயிரிழப்புக்களையும் அழிவுகளையும் குறைக்கும்.
- சமூகத்தை அடைவதற்குச் சிறார்கள்தான் சரியான ஊடக வழிகாட்டிகள். (வடிகால்கள்)
- பாடசாலைக் கட்டிடங்கள் அனர்த்தங்களுக்கு அடைக்கலம் தரும் நிலையங்கள்.

பாடசாலைப் பாதுகாப்பின் குறிக்கோள்

நோக்கு: அனர்த்தங்களை எதிர்கொண்டு மீளுந்தன்மை கொண்ட ஆற்றல்மிகு சமூகத்தை உருவாக்கல்.

குறிக்கோள்: அனர்த்தத்திலிருந்து பாடசாலைப் பாதுகாப்பை வளர்த்தெடுக்கும் கலாசாரத்தை உருவாக்கல்.

பாடசாலைப் பாதுகாப்புக் செயற்திட்டங்கள்.

- அமைப்பு ரீதியான கட்டுமானப் பாதுகாப்பு.
- அமைப்பாக்கம் பெறாத பாதுகாப்பு
- ஆசிரியர், மாணவர், பெற்றாருக்கான அனர்த்த விழிப்புணர்வு
- அதிபர், ஆசிரியர்களுக்கான அனர்த்தந் தொடர்பான பயிற்சிகள்.
- உயிர்காப்புத் திறன்களில் மாணவர்களுக்குப் பயிற்சிகள்.
- வெளியேற்றும் திட்டங்கள்.
- வெளியேற்றும் செயற்திறன் காட்சிப்படுத்தல்.
- பாடசாலை அனர்த்த முகாமைத்துத் திட்டம்.
- பயன்விளை அனர்த்தக் கல்வி
- பாடசாலையைச் சமூகத்தோடு இணைத்தல்.

இச்செயற்பாடுகளைச் செவ்வனே பாடசாலைகளில் செயற்படுத்தும் போது அனர்த்தங்களின் தாக்கத்திலிருந்து மீளும்தன்மையை நமது மக்கள் இலகுவில் பெற்று வலுவான பலமுள்ள சமூகத்தைக் கண்முன்னே காணுவார்கள்.

## Structural Safety

கட்டொழுங்கான பாதுகாப்பு

- கட்டொழுங்கான பேரிடரை இனங்காணல்.

பாடசாலைகளில் கட்டொழுங்கான பாதுகாப்பு முறையில் பயிற்சிகளை வழங்க வேண்டும். கட்டொழுங்கான பயிற்சி இருவகைப்படும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. மனித வலுசார்ந்தது.
2. பௌதிக வளம்சார்ந்தது.

மனித வலுசார்ந்த கட்டொழுங்கு நிரந்தரமானது. அனர்த்த முகாமைத்துவக் குழுவை உருவாக்குதல். மனிதர்களைககொண்டதாக இருக்கும். இது அசைந்து கொண்டிருக்கும அனைத்துச் செயல்களையும நடைமுறைப் படுத்தும்.

## 2. பௌதிக வளம்சார்ந்தது.



இது கட்டிடங்கள் தளபாடங்கள் போன்ற அனைத்தையும் குறிக்கும். இன்றையக் கட்டிடங்கள் உறுதி கொண்டதாக அமைக்கப் படுவதிலை. ஒப்பந்தக் காரர்களில் லாபநோக்கமும், அதிகாரிகளின அசமந்தப் போக்கும் இந்நிலையை உருவாக்கின்றன. இன்றைய கால கட்டத்தில் உறுதிமிக்க கட்டிடங்கள கட்டப்படுவதை உறுதி செய்ய வேண்டும். உயர் மாடிக்கட்டிடங்கள் கட்டும் போது அவை (Retrofitting ) உறுதிமிக்க கட்டிடங்களாக அமைக்க வேண்டும்.

### Non-Structural Safety அமைப்பற்ற பேரிடரை இனங்காணல்.

1) **வீழும் பேரிடர்:** வகுப்பறைகளில் தளபாடங்கள் ஒழுங்கற்ற நிலையில், ஒன்றன்மேல் ஒன்று அடுக்கப்பட்டிருக்கும். அவை திடீரென விழக்கூடிய சாத்தியக் கூறுகளை ஏற்படுத்தும். அவற்றை மாணவர்களுக்கு உணர்த்தக்கூடிய வழிகளில் இனங்காணச் செய்யவேண்டும். கடந்த சுனாமியினால் பல பாடசாலைக் கட்டிடங்கள் இடிபாடுகளைக் கண்டன. யுத்தத்தினால் சேதமுற்ற கட்டிடங்களில் வகுப்புக்கள் நடைபெறுகின்றன. இவை பேரிடரைத் தரக்கூடியன. இவற்றை இனங்கண்டு தவிர்த்துக் கொள்ளும் வகையில் மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் விழிப்புணர்வுகளை ஏற்படுத்த வேண்டும்.

2) **தடைப்படுதலால் ஏற்படும் பேரிடர்:** உரிய காலத்தில் ஏற்ற நடவடிக்கைகளை எடுக்காது விடுதலால் பேரிடர் ஏற்படக்கூடிய வாய்ப்புகள் உண்டு.

3) **வேறுவகையான பேரிடர்:** நாம் எதிர்பாராத வகையில் பாடசாலைக் கட்டிடங்கள், அல்லது தளபாடங்கள் அனர்த்தங்களுக்கு உள்ளாகி இடரைத் தரலாம்.

4) **அமைப்பற்ற பேரிடர் :** அலுமாரி போன்ற பொருட்கள் கீழே விழவிடாது சுவரோடு பொருத்துதல் மூலம் பேரிடரை தவிர்க்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அனர்த்த விழிப்புணர்வு

கீழ்காணப்படுபவற்றில் விழிப்புணர்வுகளையும், செயற் திறன்களையும், பயிற்சிகள் மூலம் வழங்கித் தயார்நிலையில் வைத்தல் மிகவும் நல்லது.

பேரிடர் தரும் அனர்த்தங்களின் வகைகள்

1) **இயற்கை அனர்த்தங்கள்** - புவிநடுக்கம், எரிமலைச் செயற்பாடு, சுனாமி. வெள்ளம். வரட்சி போன்றன.
2) மனிதனால் ஏற்படும் அனர்த்தம் - யுத்தம், அபிவிருத்திக்கான செயற்பாடுகள் போன்றன.
3) பாடசாலைகளில் ஏற்படும் விஸேட அனர்த்தங்க்ள்.

- **Vulnerabilities (Weaknesses)**- நலிவுறுதன்மை.

சமூகம் எந்தளவுக்கு அனர்த்த விளைவுகளால் பாதிக்கப்படும். பாதிப்பின் தன்மையை அறியுமாற்றலை எந்தளவுக்கு கொண்டுள்ளது என்பதை கண்டறிந்து தெளிவுப்படுத்த வேண்டும். அதற்குரிய தயார் நிலையில் சமூகத்தை வைத்திருப்பது நமது கடமையாகும்.

- **Do's & Don'ts** செய் - செய்யாதே / வேண்டும் வேண்டாம்

எடுத்துக் காட்டு: (1) செய் அல்லது வேண்டும்: மின்சாதனப் பொருட்களைப் பயன்படுத்தும் போது காலில் செருப்பு அணிதல் வேண்டும்.

சூறாவளியின் போதும் முன்னரும் செய்யவேண்டியவை

- சூறாவளி வீசும் காலத்தை அறிந்திருக்க வேண்டும்.
- வசிப்பிடங்களுக்குத் தேவையான திருத்த வேலைகளைக் கவனித்துச் செய்து முடிக்க வேண்டும்.
- குடும்பத்தவரோடு அவசர காலங்களில் அல்லது நெருக்கடி நேரங்களில் என்ன செய்யவேண்டும் என்பதைக் கலந்துரையாடி திட்டமிட வேண்டும்.
- முக்கியமான ஆவணங்கள் நீரினால் அல்லது வேறுவழிகளால் பழுதுபடாத வகையில் பாதுகாப்பாக வைக்கவேண்டும்.
- மெழுகுதிரி, டோர்ச்லைற், பெற்றறிகள், விளக்குக்கு வேண்டிய எரிபொருள், மருந்துவகை, மேலதிகமாகத் தேவையான குடிநீர். உணவு போன்றவற்றைப் பாதுகாப்பாக வைத்திருத்தல்.
- கருவுற்ற தாய்மார், முதியோர், இயலாதவர்கள், உடல்நலமற்றோரைப் பாதுகாப்பாக வைத்திருக்கத் திட்டமிடுதல் வேண்டும்.
- வீட்டின் சூழலில் உள்ள உயர்ந்த மரங்களின் கொப்புகளைக் களைந்து அப்புறப் படுத்தவேண்டும்.
- வானொலி, ஊடகச் செய்திகள், அறிவுப்புக்களைக் கேட்கவேண்டும். அத்துடன் அரச அலுவலகங்களோடு தொடர்பினை வைத்திருக்க வேண்டும்.
- அனர்த்தங்கள் பற்றிய செய்திகள் கிடைத்ததும் குறிப்பிடப்படும் பாதுகாப்பான இடங்களுக்கு இடம்பெயரவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(2) செய்யாதே அல்லது வேண்டாம்: இடிமின்னல் நேரத்தில் நீர்நிலைகளில் நிற்கக் கூடாது.

## சூறாவளியின் போதும் முன்னரும் செய்யக் கூடாதவை

- உரிய இடங்களில் இருந்து அறிவித்தல் கிடைத்தாலன்றி, வெளியில் அலைதல் கூடாது.
- வசிக்குமிடம் பாதுகாப்பற்றது எனத்தெரிந்தால் சூறாவளி தொடங்கு முன்னரே வெளியேறிவிட வேண்டும். சூறாவளி வீசும்போது வெளியில் செல்லக்கூடாது.
- மீனவர் தமது படகுகளைக் கரையில் பாதுகாப்பாகக் கட்டிவிட்டு கடலுக்குப் போவதைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும்.
- சூறாவளியின்போது பழைய கட்டிடங்களுக்குள்ளோ அல்லது உயர்ந்த மரங்களுக்குக் கீழோ நிற்கக்கூடாது.
- மின்சாதனக் கம்பங்கள். கம்பிகளைத் தொடக்கூடாது.

1. ஆசிரிய பயிற்சி



- அனர்த்த முகாமைத்துவ ஒழுங்கமைப்பு
- அடிப்படை அனர்த்த விழிப்புணர்வு.
- முதலுதவி, தீயிலிருந்து பாதுகாத்தல், மீட்டெடுக்கும் பயிற்சிகளை வழங்குதல்.
- எவ்வாறு பயின்ற செயற்திறன்களைக் காட்சிப் படுத்தல் (mock drills)

2. மாணவருக்கான பயிற்சி (**Training of Students**).

- மாணவர் செயலணிகளை (student forums) உருவாக்கல்.
- பாடசாலைகள் தோறும் பின்வரும் குழுக்களை உருவாக்கி அவற்றின் பணிக்கூற்றுக்களை விளக்கிச் செயற்படத் தூண்டவேண்டும்.



1. முன்னெச்சரிக்கையும், தேடி மீட்கும் செயலணி.
2. முதலுதவியும் சுகாதாரமும் செயலணி.
3. ஒழுங்கமைப்பும் பாதுகாப்பும் செயலணி
4. அவசரகாலக் கல்வியும் செய்திமடல் செயலணி.
5. கட்டொழுங்கும் சிறுசேமிப்பும் செயலணி.

- (Training) செயலணிகளுக்கான பயிற்சிகள்.
செயலணிகளுக்குச் சிறந்த பயிற்சிகளை வழங்கிச் செயற்படவும், அவர்களைத் தயார்நிலையில் வைத்துத்துக் கொள்ளவும் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## School Disaster Management Planning

பாடசாலை அனர்த்த முகாமைத்துவ திட்டம்.

- பாடசாலை அனர்த்த முகாமைத்துவ திட்டத்தின் குறிக்கோள்.
- அனர்த்தங்களில் இருந்து பாடசாலையை பாதுகாப்பாக வைத்திருத்தல்.
- அனர்த்தங்களை குறைப்பதற்கான திட்டங்களை வகுத்துச் செயற்படுத்தல்.
- அனர்த்தங்களுக்கு முகங்கொடுக்கும் வண்ணம் பயிற்சிகளை வழங்கல்.
- அனர்த்தங்களையிட்டுப் பயிற்சிகளை வழங்கி. பாடசாலைச் சமூகத்துக்கு விழிப்புணர்வுகளை ஏற்படுத்தல்
- உள்ளூர் அரச, அரசசார்பற்ற முகவர்களோடு இணைந்து செயலாற்றல்.
- சிறுசேமிப்பை மாணவரிடையே ஊக்குவித்தல். (இன்று பல மாணவர்கள் தமது கல்வியைத் தொடரமுடியாமல் தவிக்கின்றனர். அவர்கள் இடைவிலகலுக்குள் ஆளாகின்றனர். உயர்கல்விக்கு வசதியின்றித் தவிக்கினறனர். இது அவர்களை பேரிடருக்குள் தள்ளி விடும். அவர்களுக்கு வழிகாட்டவேண்டிய அவசியம் உருவாகியுள்ளதை யாவரும் உணர்வார்கள்.)

### Phases of Disaster management

அனர்த்த முகாமைத்துவக் கட்டங்கள

| | |
|---|---|
| அனர்தத்துக்கு முன்<br><br>சடுதியான விளைவுகளுக்கான தயார்நிலை வசதிகளைப் பார்வையிடல். இழப்புகளைக் குறைப்பதற்கான முடிவுகளை எடுத்தல். | அனர்த்தத்தின் போது<br><br>அனர்த்தத்தின் போது விரைந்து செயற்படல். செயலணிகளை துரிதப்படுத்தி பதிவுகளை மேற்கொள்ளல். |
| அனர்த்தம் இல்லாதபோது<br><br>அனர்த்தத் தாக்க விளைவுகளைக் குறைப்பதற்கான செயற்பாடுகளில் ஈடுபடல். அனர்த்த முகாமைத்துவத் திறன்களை வளர்த்தல். தொடர்ச்சியாகப் பயிற்சிகளிலும், விழிப்புணர்வுகளிலும் மாணவரை ஈடுபடுத்தல். | அனர்தத்தின் பின்னர்<br><br>செயலணியினரின் பாதுகாப்பிலும், அவர்களைப் பாதுகாப்பாக வீடுகளுக்கு அனுப்புவதிலும் கவனம் செலுத்தல். |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Developing School Disaster Management Plan
## பாடசாலை அனர்த்த முகாமைத்துவ திட்டத்தினை விருத்தி செய்தல்

- பாடசாலை அனர்த்த முகாமைத்துவக் குழவை உருவாக்கல்.
- தலைவர் - அதிபர்.
- உறுப்பினர்கள் பாடசாலையிலிருந்தும், சமூகத்திலிருந்தும் இடம் பெறுவர்.
- பேரிடர்களை இனங்காணுதல்.
- நலிவுறுதன்மை. இடர்களை இனங்காணுதல்.
- அமைப்பான, அமைப்பற்ற இடர்களை அறிதல்
- உள்ளும் புறமும் உள்ள இடர்களை இனங்காணுதல்.
- தயார்நிலையிலிருத்தல், குறைத்தல் போன்றவற்றுக்கான திட்டங்களைத் தயாரித்துச் செயற்படுதல்.

பாடசாலை முகாமைத்துவ அமைப்பு.





பாடசாலை அனர்த்த முகாமைத்துவத் திட்டம் உருவாக்கல்.

- அனர்த்தத்தைக் குறைப்பதற்கான திட்டம்.
- தயார்நிலைக்கான திட்டமிடல்.
- (Response) பிரதிபலிப்புக்கான திட்டம்.
- பாடசாலை அனர்த்த முகாமைத்துவத் திட்டத்தை மீளாய்வு செய்யும் திட்டம்.
- சிறுசேமிப்புக்கான திட்டம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடசாலையில் எவ்வாறு திட்டமிடுவது.?





பொறுப்னவர்களின் (நடிபங்கு)கடமைகளும், பொறுப்புக்களும்

- பாடசாலை அனர்த்தங்களின் பல்வேறு கட்டங்களினதும் கடமைகள், பொறுப்புக்களைப் பட்டியல் படுத்த வேண்டும்
- பாடசாலை முகாமைத்துக் குழுவினது கடமைகள்
- அதிபரது கடமை, பொறுப்புக்கள்.
- ஒவ்வொரு செயலணியினரதும் கடமைகள். பொறுப்புக்கள்.

அனர்த்த வரைபடம் ( பாடசாலைக்கு வெளியே

**Risk Map {Outside school}**






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


பாடசாலையின் சுற்றுப்புறச் சூழலையும், அதன் கட்டிடங்களின் வடிவமைப்பு, கட்டிடங்கள் கட்டப்பெற்ற காலம் முதலியவற்றை அறிந்திருக்க வேண்டும். பாடசாலைக்கு வெளியில் இருந்து வரக்கூடிய ஆபத்துக்கள் ஆகியவற்றைக் கவனத்தில் கொள்ள வேண்டும். சில பாடசாலைகள் மிகவும் அச்சுறுத்தலுக்குள் உள்ளன. உதாரணமாக திருகோணமலைப் பாடசாலைகள் அதிகமானவை போக்குவரத்து நெரிசல் மிக்க வீதிகளை அண்மித்து அமைந்துள்ளன. புனித சவேரியர் மகாவித்தியாலயம் சந்தடிமிக்க மத்திய வீதியில் அமைந்துள்ளது. அதன் கட்டிடங்கள் பாதையின் இரு மருங்கிலும் உள்ளன. அதாவது பாடசாலையை ஊடறுத்து மத்திய வீதி செல்கிறது. பாதையைக் கடந்து ஆசிரியர்களும், பிள்ளைகளும் அடிக்கடி கடந்து செல்கிறார்கள். வாகன நெரிசல் அதிகமான பகுதியாகவும் உள்ளது. எந்த நேரமும் விபத்து நடக்கலாம்.

இருவழிப் பாதையாகவும் உள்ளது. இரண்டு பகுதிகளையும் இணைத்து மேம்பாலம் அமைத்தால் ஆபத்து நீங்கிவிடும். மிகப் பிரபல்யமான கல்லூரியாக ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி விளங்குகிறது. சுமார் இரண்டாயிரம் மாணவர்கள் கல்வி கற்கிறார்கள். டொக்யாட் வீதி போக்கு வரத்து நெரிசல் மிக்கது. பல கோயில்களும் சூழ்ந்துள்ளன. சனநெருக்கடி மிக்க இடமாகவும்

உள்ளது. இங்கும் விபத்துக்கள் எப்போதும் நடக்கலாம். இவ்வாறான இடங்களுக்குத் தற்காப்பு வசதிகளை அனைவரும் இணைந்து செய்யவேண்டும். ஆசிரியர்களுக்கும், பெற்றாருக்கும் மாணவர்களுக்கும் வருமுன் காக்கும் விழிப்புணர்வுகள் மூலம் அறிவூட்டி தயார்நிலையில் வைப்பது நமது கடமையாகும்.

வசதி சேவைகள் வரைபடம். ( பாடசாலைக்கு வெளியே.)

**Facility Map {Outside School}**







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலையின் அமைவிடத்தினையும், சூழலையும் யாவரும் புரிந்திருக்க வேண்டும். எவ்வாறான அனர்தங்கள் பாடசாலைக்கு வெளியே இருந்து வரக்கூடியவை? எனஅறிந்து அதற்கேற்பத் தற்காப்பை ஏற்படுத்தலாம். அதேபோல் எவ்வகை உதவிகளை. எவ்விடங்களில் இருந்து பெறலாம் என்பதையும் தெரிந்து உதவிகளைப் பெறக்கூடியதான தயார்நிலையில் பாடசாலைக் கட்டமைப்பு இருக்க வேண்டும். உதவிகளைப் பெறக்கூடிய நிறுவனங்களோடு நெருங்கிய தொடர்புகளை வைத்திருக்க வேண்டும். அத்துடன் ஏதாவதொன்று நிகழும் பொழுது அதனை எதிர் கொண்டு சமாளிக்கும் ஆற்றல்களையும், பயிற்சிகளையும் அனைவருக்கும் வழங்க வேண்டும்.


## வெளியேற்றும் திட்டம் (Evacuation Plan)

பாடசாலைகளில் அனர்த்தங்களின் போது வகுப்பறைகளில் இருந்து பிள்ளைகளை வெளியேற்றும் திட்டம் தயாராக இருக்க வேண்டும். நாம் திரையரங்குகளில் படம் பார்க்கச் சென்றால் அங்கு சிவப்பு நிறத்தில் ஒரு தீயணைக்கும் கருவியைக் காண்கின்றோம். அது ஏன் வைக்கப்பட்டுள்ளது என நாம் கேட்பதில்லை. பல கதவுகள் வெளிப்பக்கமாகத் திறபடக்கூடியதாக அமைக்கப் பெற்றிருக்கும். அனர்த்தங்கள் அல்லது ஆபத்துக்கள் ஏற்படும் போது உள்ளிருந்து தள்ளித் திறந்து வெளியேறுவதற்காகவே இவ்வாறு வைக்கப் பெற்றிருக்கும். பாடசாலைகளும் அனர்தங்கள் ஏற்படும்போது பாதுகாப்பாக வெளியேறும் பயிற்சிகளை மாணவர்களுக்கு வழங்க வேண்டும்.

இன்றைய நாட்களில் பாடசாலைக் கட்டிடங்கள் தொடர்மாடிக் கட்டிடங்காளக மாறிக் கொண்டு வருகின்றன. விளம்பரங்கள் கொடுத்துக் கட்டிட ஒப்பந்தக்காரர்களிடம் குறைந்த விலைக்கூற்றின் அடிப்படையில் கட்டுவதற்காக அல்லது அதனை நிர்மாணிப்பதற்காகக் கொடுக்கப்படுகிறது. இலாப நோக்கோடு செயற்படும் ஒப்பந்தக்காரர்கள் சரியான முறையில் கட்டிடங்களைக் கட்டுவதென்பது நம்பகத் தன்மையைக் கொண்டதல்ல. கட்டிடங்கள் கட்டும்போது பிள்ளைகளின் பாதுகாப்பைக் கவனத்தில் கொள்ளவேண்டும். மாடிக்கட்டிடங்கள் அமைக்கும் போது மாடிகளுக்குப் போய்வரக்கூடிய போதியளவு அகலமான இருவழிகொண்ட படிக்கட்டுக்களை அமைக்க வேண்டும். அத்துடன் உறுதிமிக்க கொங்கிறீற் தூண்களும், தளங்களும் கொண்டனவாக அமைக்க வேண்டும்.





Evacuation Plan for First Floor






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'கெயிற்றியில்' அண்மையில் இரண்டு மாடிக்கட்டிடங்கள் இடிந்து விழுந்து பல நூற்றுக்கணக்கான சிறார்கள் உயிரிழந்துள்ளனர். இலங்கையிலும் ஆபத்தான நிலையில் பல பழைய கட்டிடங்கள் உள்ளன. அண்மைக்கால சுனாமி அனர்தங்களின் போதும், யுத்தத்தினாலும் பல கட்டிடங்கள் சுவர்கள் வெடித்தும், அடித்தளமங்கள் அள்ளுண்டு போயும் உள்ளன. அவற்றுக்குப் பதிலாக இந்த நூல் எழுதும்வரை தகுந்த பாதுகாப்பான வசதிகள் அளிக்கப்படவில்லை. உதாரணமாக ஈச்சிலம்பற்று வெருகல் பிரதேச செயலாளர் பிரிவுக்குள் அடங்கும் இலங்கைத்துறைமுகத்துவாரம் பாடசாலை, பூநகர் திருவள்ளுவர் வித்தியாலயம் போன்றவற்றைக் கூறலாம்.

பூநகரில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட பாடசாலைக் கட்டிடம்.

இதேபோல் சுமார் 40 வருடங்களுக்கு மேலான 'என்னைக்காப்பாற்று விழப் போகிறேன்' என்ற நிலையில் பல பாடசாலைக் கட்டிடங்கள் இப்பிரதேசத்தில் இருப்பதைக் காணலாம். இவற்றை அரச, அரசசார்பற்ற நிறுவனங்கள் கவனத்திற் கொண்டு சீர்செய்ய வேண்டியது கட்டாயத் தேவையாகும். பாடசாலைகளைக் பாதுகாப்பதனூடாக நாம் சமூகத்தைக் பாதுகாக்கலாம். ஏனெனில் இன்றைய சிறார்கள் தான் நாளைய சமூகத்தினர்.

## பாடசாலை பாதுகாப்பு மன்றம் (**School Safety Club**)

இவை மாணவர் மன்றங்களைப் போல் இயங்கும். பாடசாலைகளில் மாணவர் மன்றங்கள் ஊடாக பாடசாலைப் பாதுகாப்புச் செயற்பாடுகளை உள்ளீர்த்து கீழ்காணப்படும் செயற்பாடுகளை நடைமுறைப் படுத்தலாம். இதனூடாக மாணவர்களின் தேடலை அதிகர்க்கச் செய்யலாம். ஆர்வத்தையும் ஆற்றலையும், ஆளுமையையும் விருத்திசெய்யலாம். தங்கள் பாடசாலை என்ற உணர்வினை ஏற்படுத்த மிகச் சிறந்த வழியாகும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இம்மன்றத்தின் ஊடாக பின்வருவனவற்றைச் செயற்படுத்தலாம்.

- கதைகள்
- விளையாட்டுக்கள்
- பல்வேறு நாடகங்கள்.
- போட்டிகள் - (சித்திரம்இ விவாதம்)
- பேரிடர்களை இனங்காணும் துணுக்குகள்
- குடும்பத் தயார்நிலைக்கான பட்டியல்
- அனர்த்தங்களை அறியும் நூல்கள் சஞ்சிகைகள்

பாடசாலைப் பாதுகாப்புச் செய்திமடல் வெளியிடுதல்

(School Safety Newsletter)

இம்மன்றத்தின்ஊடாக செய்தி மடலை வெளியிடுதல் நல்ல அம்சமாகும். பின்வருமாறு அதனைச் செயற்படுத்த வேண்டும்.

- காலாண்டுக்கு ஒரு செய்தி மடல் வெளியிடல்
- மாணவர்களால் தாய்மொழியில் தயாரித்தல்.
- நாட்டிலுள்ள பாடசாலைகளுக்கும் கிடைக்கச் செய்தல்.
- அனர்த்தச் விழிப்புணர்வை ஏற்படுத்தும் செய்திகள்.

பாடசாலைப் பாதுகாப்புச் செய்திமடலில் பின்வருவன இடம் பெறுகின்றன.

- நாட்டில் நடப்பவை
- கதைகள், கவிதைகள், நாடகங்கள்.
- விளையாட்டுச் செய்திகள்.
- புதிர்கள், விடுகதைகள்.
- ஆய்வுகள், கட்டுரைகள்
- சிறு சேமிப்புச் செயற்பாட்டுச் செய்திகள்.
- இவற்றூடாக கலாசார விழுமியங்களை வளர்த்தல்

இச்செய்தி மடலை மாணவர்களைத் தயாரிக்க ஆசிரியர்கள் வழிகாட்டுவார்கள். வழிகாட்டவேண்டும். செய்திமடல் மாணவர்களின் ஆக்கத்திறனையும். அறிவையும் விருத்தியுறச் செய்யும். தேடல் சிந்தனையைத் தூண்டும். ஆவலையும், கரிசனையையும் மாணவரிடை தோற்றுவிக்கும்.



**Linking school to community**
பாடசாலையைச் சமூகத்தோடு இணைத்தல்.

இன்று பல பாடசாலைகள் சமூகத்தோடு எதுவித தொடர்புகளும் இல்லாது இயங்குவதைக் காணலாம். பாடசாலைக்கும், சமூகத்துக்கும் இடையில் எந்தவித தொடர்புகளும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லாதிருக்கிறது. சமூகம் வேறு, பாடசாலை வேறு என்ற அர்த்தத்தில் இயங்கி வருகின்றன. இதனை விடுத்துப் பாடசாலைகள் சமூகத்தின் விழிகள் என்ற நிலையை உருவாக்க அனைவரும் உழைக்க வேண்டும். பாடசாலைக்கும், சமூகத்துக்கும் இறுக்கமான பிணைப்பைக் கட்டியெழுப்ப வேண்டும். பின்வருவனவற்றைச் செயற்படுத்துவது மிகப் பயனுள்ள அம்சங்களாகும்.

- பாடசாலையில் அக்கறையில்லாதவர்களையும் பாடசாலையின் பங்காளர்களாக்குதல்.
- பாடசாலை வளங்களைச் சமூகத்துக்குக் கிடைக்கச் செய்தல்.
- சமூக வளங்களைப் பாடசாலைக்குக் கிடைக்கச் செய்தல்.
- பாடசாலையைப் பாதுகாக்கும் பங்காளிகளாகச் சமூகத்தை மாற்றுதல்.

## பாடசாலைகள் மூலம் சமூகத்தைப் பாதுகாப்போம்

பாடசாலைதான் அனைத்துச் செயற்பாடுகளுக்கும் அடித்தளமாகிறது. சமூகத்துக்குள் புகுவதற்கு நுழைவாயிலாக உள்ளது மாணவர்கள் மிக இலகுவில் செய்திகளைச் சமூகத்துக்கு எடுத்துச் செல்பவர்கள். மாணவர்களைச் சமாதானத்தின் தூதுவர்களாக நாம் மாற்றவேண்டும். நல்ல எண்ணக்கருக்களை அவர்களது உள்ளங்களில் விதைக்க வேண்டும அனர்த்தங்கள் பற்றிய விழிப்புணர்வுகளை பாடசாலை மட்டத்தில் ஏற்படுத்தி அவர்களைப் பங்காளிகளாக ஆக்கவேண்டும். செய்தி காவிகளாக விளங்கும் நமது மாணவர்களைச் செயல்வீரர்களாக்குவது நமது கைகளில்தான் உள்ளது. பாடசாலைகளைப் பாதுகாப்பதன் மூலம் சமூகத்தைப் பாதுகாப்போம்.






**Safe school safe community** – பாடசாலைகளைப் பாதுகாப்பதன் மூலம் சமூகத்தைப் பாதுகாப்போம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பகுதி நான்கு

## ஒபர் (சிலோன்) நிறுவனம் முன்னெடுக்கும் முயற்சிகள்

(OfERR) ஒபர் என்றால் என்ன? 'ஈழ ஏதிலியர் மறுவாழ்வுக் கழகம்.' என்பதன் சுருக்கமான ஆங்கிலப் பதம்தான் 'ஒபர்' ஆகும். இலங்கை அகதிகளுக்காக, அகதியாகச் சென்ற மக்கள், அவர்களின் நல்வாழ்க்கையை அமைத்துக் கொடுக்கும் நோக்கில் இந்தியாவில் தந்தை செல்வாவின் மகன் திரு. சா. வே. செ.சந்திரகாசன் அவர்களால் தொடங்கப் பெற்றது. அதனது சேவை எண்ணிலடங்காதன. சிறப்பாக இலங்கை அகதிகளை ஒன்றுதிரட்டி அவர்களது சிறார்களுக்குக் 'கல்வி' வசதியினைப் பெற்றுக் கொள்ளவும், அகதி முகாம்களில் வசதிகளை ஏற்படுத்தியும் சேவைசெய்கிறது. அரசியலை விடுத்து மக்களுக்கு அடிப்படை வசதிகளைப் பெற்றுக் கொடுத்து, அவர்ளின் துன்பியலைப் போக்கவேண்டும் என்பதற்காகவேதான் 'ஈழ ஏதிலியர் மறுவாழ்வுக் கழகம்' தோற்றம் பெற்றது.

இலங்கையில் இனவன்செயல்கள் தலைவிரித்தாடியதால், மக்கள் அகதிகளாக சொந்த இடங்களைவிட்டு இடம்பெயர்ந்தார்கள். இந்தியாவில் இலங்கையிலிருந்து அகதிகளாகச் சென்றவர்களுக்காகத் ஒபர் தன்னை அர்ப்பணித்துச் சேவைசெய்கிறது. ஒபரில் பணிபுரிவோர்கள் அனைவரும் இலங்கையர்கள்தான் என்பது மகிழ்ச்சிக்குரிய விடயமாகும். ஆனால் இந்திய அறிஞர்களதும், அன்புடை நெஞ்சங்களினதும் ஒத்துழைப்பும் ஒத்தாசையும் கிடைத்தவண்ணம் இருக்கிறது. தமிழக அரசின் ஒத்துழைப்புப் பலவழிகளில் கிடைக்கிறது. பல்வேறுபட்ட அரசசார்பற்ற சர்வதேச நிறுவனங்கள் முன்னோடிவந்து உதவுகரம் நீட்டுகின்றன.



இலங்கையில் சமாதான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்ட போது தமிழ் நாட்டில் தஞ்சம் புகுந்திருந்த இலங்கை மக்கள் தமது சொந்த இடங்களுக்குத் திரும்பத் தொடங்கினர். அவர்களது நலனில் கரிசனை கொண்ட ஒபர் நிறுவனம் இலங்கையிலும் ஒபர்(சிலோன்) எனும் பெயரில் தனது பணியைத் தொடங்கியது. மன்னாரில் முதற்பணிமனையைத் திறந்து செயற்பட்டது. இன்று மன்னார், வவுனியா, மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய நான்கு மாவட்டங்களில் அளப்பரிய சேவைகளை ஆற்றி வருகிறது.

ஒபர்(சிலோன்) இலங்கையில் செல்வி. சி. சூரியகுமாரி அவர்களது அரிய முயற்சியினால் தோற்றம் பெற்றது. பிறருக்கு உதவுவதிலும், பிறரை உயர்த்தி விடுவதிலும் ஆர்வம் கொண்டு உழைப்பவர். அதில் மனநிறைவும், அமைதியும் காண்பவர். படிக்கின்ற காலத்திலேயே மகாத்மா காந்தியின் கொள்கையால் ஈர்க்கப்பட்டு அந்த வழியில் நின்று நாட்டு மக்களுக்கு நல்லனவற்றை நல்கும் என்ற தீர்க்க தரிசனத்தினால் தந்தை செல்வாவின் வழிநின்று உழைத்தவர். உழைப்பவர். மகாத்மா காந்திக்கு இந்திய மக்களைப் பற்றியும் அந்நியரின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிடியில் சிக்கித் தத்தளிக்கும் தமது நாட்டு மக்களது வாழ்க்கை பற்றியும், சுதந்திர வாழ்வு பற்றியும் சிந்திக்க எவ்வாறு தென்னா பிரிக்கா வழிகாட்டியதோ அவ்வாறே சூரியா அவர்களுக்கும் இலங்கையின் இனக்கலவரத்தால் பாதிப்புக்குள்ளாகி, அகதிகளாக இந்தியாவிலும், இலங்கையிலும், பின்தங்கிய பிரதேசங்களில் வாழும் தமிழ்பேசும் மக்களதும், மற்றும் தீண்டப்படாதவர்கள் என்று ஒதுக்கப்பட்ட மக்களது வாழ்க்கை முறைகளும், அவர்கள் படும் துன்பியலும் ஒபர்(சிலோன்) தத்துவத்துக்கு உதவியது எனக்கூறலாம்.

நலிவுற்ற மக்களுக்குக் கைகொடுத்து உதவி, அவர்கள் இழந்த வாழ்க்கை முறைமையை மீட்டெடுத்துக் கொடுக்கும் முயற்சியில் ஒபர்(சிலோன்) உழைக்கிறது. ஒபர்(சிலோன்) சாதி, இன மத, அரசியலுக்கப்பால் நின்று சகோதரத்துவத்தை உறுதியாகக் கொண்டு உழைக்கிறது. ஒரு சமூகம் உயர்வடைய வேண்டுமானால் அச்சமூகம் கல்வியில் சிறந்து விளங்கவேண்டும். கல்வியின் தரத்தை உயர்த்துவதன் மூலம் சமூகத்தை உயர்த்த முடியும் என்ற உயர்வான கருத்தை தாய் நிறுவனமான ஒபர் கொண்டுள்ளது. அதனை ஒபர்(சிலோன்) நிறுவனம் பாடசாலைப் பாதுகாப்பில் அதிகம் நாட்டம் கொண்டுள்ளது. கல்விதான் மனிதனைக் காக்கவல்லது. வையத்துள் வாழ்வாங்கு வாழ வழிசெய்கிறது. நல்ல கல்வி அறிவுடைய சமூகத்தை உலகம் போற்றுகிறது. கல்வியை இளஞ்சமூகத்துக்கு வழங்கவேண்டியதன் அவசியத்தை ஒபர் உணர்ந்துள்ளது. அதனாலேயே இந்தியாவிலுள்ள இலங்கை நலன்புரி நிலையங்களில் உள்ள இலங்கைப் பிள்ளைகளின் கல்வியில் நாட்டங்கொண்டு உழைக்கிறது.

அந்த உழைப்பினால் இன்று 2500 பட்டதாரிகள் உருவாகியுள்ளார்கள். அந்தப் பெருமை தாய்நிறுவனமான ஒபர் நிறுவனத்துக்குச் சொந்தமானதாகும். எனினும் சேய் நிறுவனமான ஒபர்(சிலோன்) நிறுவனத்துக்கும் பெருமை சேர்ப்பதாகும். இலங்கையிலும் இழந்த கல்வியை மீளப்பெறும் வகையில் பல திட்டங்களை வகுத்துச் செயற்படுத்துகிறது.

நாட்டின் பிரச்சினைகளினால் இடம்பெயர்ந்து இந்தியா சென்ற மக்களின் பிள்ளைகளுக்கு இந்தியாவில் கல்வியைத் தொடர்வதற்கு வசதிகள் செய்ததோடு அமையாது, இலங்கையில் இருந்து சிறந்த ஆசிரியர்களைத் தேர்ந்தெடுத்து, அவர்களை இந்தியாவுக்கு அழைத்துச் சென்று கற்பித்தலில் ஈடுபடுத்தி, இலங்கை அரசின் அனுமதியோடு, இலங்கை உயர்ஸ்த்தானிகராலயத்தின் உதவியோடு கல்வி பொது தராதரப் பத்திரப் பரீட்சையை நடத்திய பெருமை ஒபர் நிறுவனத்தைச் சார்ந்ததாகும்.

சமாதான உடன்படிக்கை கைசாத்திட்டபோது தங்கள் சொந்த இடங்களுக்குத் திரும்பியபோது அவர்களது அடிப்படை வசதிகளைச் செய்து கொடுப்பதற்காக வவுனியா, மன்னார், திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களில் ஒபர் (சிலோன்) நிறுவனம் தனது சேவையைத் தொடங்கியது. 2004 டிசம்பர் 26ல் சுனாமியெனும் கடற்பேரலை அனர்த்தத்தைப் புகுத்திப் பல்லாயிரக்கணக்கான சொத்துக்களையும், உயிர்களையும் காவு கொண்டது. இலங்கையில் வடக்கு கிழக்கு மாகாணம் பேரழிவைக் கண்டது. பெருந்துயரில் சிக்கிய மக்களுக்கு உதவுமுகமாக ஒபர்(சிலோன்) தனது சேவையை விரிவாக்கியுள்ளது.

ஒபர்(சிலோன்) நிறுவனம் தனது செயற்திட்டங்கள் அனைத்திலும் அனர்த்தத்தில் இருந்து விடுபடும் வகையிலேயே திட்டங்களைச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயற்படுத்தி வருவதையும், அனைத்துத் திட்டங்களிலும் அனர்த்தத்தில் இருந்து விடுதலை பெறுவதையே தனது முன்னுரிமையாகக் கொண்டிருப்பதையும் அவதானிக்கலாம். இம்மாவட்டங்களில் வாழும் சகல இனமக்களுக்கும் பாதிப்பின் அடிப்படையில், அரசாங்க அதிபரின் அனுமதியுடன் பிரதேச செயலாளர்களதும், கிராம சேவையாளர்களினதும் பரிந்துரைகளின் அடிப்படையில் உரிய சேவைகளை அளித்து வருகிறது.

ஒபர்(சிலோன்) நிறுவனம் பின்வருவனவற்றில் தன்னை ஈடுபடுத்திச் சேவைகளை வழங்கி வருகிறது.

- Relief - உடனடி நிவாரணம்.
- Rehabilitation - மறுவாழ்வு புனருத்தாரணம்.
- Resettlement. - மீள்குடியேற்றம்
- Reconstruction - புனர்நிர்மாணம்.
- Development - அபிவிருத்தி
- Preparedness - தயார்நிலை

ஒபர்(சிலோன்) நிறுவனத்தின் தொண்டர்களாக மூவின மக்களும் தங்களது சேவைகளைச் செய்கிறார்கள். உந்து சக்தியாக கிறிஸ்ரியன் எயிட்ஸும், ஏனைய சர்வதேச நிறுவனங்களும் உதவுகின்றன.

ஒபர்(சிலோன்) நிறுவனம் தனது சேவையை திருகோணமலை மாவட்டத்திலுள்ள பின்வரும் 07 பிரதேச செயலாளர் பிரவுகளில் உள்ள பின்தங்கிய கிராமங்களில் ஆற்றி வருகிறது.

- குச்சவெளி
- பட்டினமும் சூழலும்
- பன்குளம்( மொறவெவ)
- தம்பலகாமம்
- கந்தளாய்
- மூதூர்
- ஈச்சிலம்பற்று

ஒபர்(சிலோன்) நிறுவனம் பின்வரும் அலகுகளில் தனது சேவையைச் சிறப்பாக ஆற்றி வருகிறது

- கல்வி
- அனர்த்த முகாமைத்துவம்
- சுகாதாரமும் சுகவாழ்வும்
- குடிநீரும், மலசலகூடமும்.
- எச்ஐவி /எயிட்ஸ்
- வாழ்வாதாரம்
- சமூக வலுவூட்டல்
- வீட்டுத்திட்டம் (நிரந்தரம் /தற்காலிகம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வி

கல்விக்காக அரும்பெரும் சேவையாற்றும் ஒபர் (சிலோன்) நிறுவனம் 56 கிராமங்களில் உள்ள வறுமைக் கோட்டுக்குக்கீழ் 'வறுமையிலும் வறுமையில்' வாழும் சிறார்களுக்குப் பல்வேறு வழிகளில் உதவி செய்து வருகிறது. கற்றல் சாதனங்கள் வழங்கியும், பாதணிகள் வழங்கியும், மேலதிக வகுப்புக்களை நடத்திக் கல்விப் பணியில் ஈடுபட்டும் வருகிறது. இவ்வகையில் 2008ம் ஆண்டு 12,997 சிறார்கள் பயனடைந்துள்ளனர். 2008ம் ஆண்டு முதல் க.பொ.த.(சா/த) பரீட்சைக்காக 17 நிலையங்களில் மேலதிக வகுப்புக்களை நடத்தியதால் 524 மாணவர்கள் பயனடைந்துள்ளார்கள். 2010ல் க.பொ.த.(சா/த) பரீட்சை எடுக்கவிருக்கும் மிகப்பின் தங்கிய 07 கிராமப்பாடசாலைகளைத் தேர்ந்தெடுத்து மேலதிக வகுப்புக்களை நடாத்தி வருகிறது.

அனர்த்த முகாமைத்துவம்

அனர்த்தங்களில் இருந்து விடுபடும் நோக்கத்தைக் கருத்தில் கொண்டு தனது சேவையை பின்வரும் பிரதேச செயலாளர் பிரிவுகளில் முன்னெடுத்துச் செயற்படுகிறது.

- குச்சவெளி
- மூதூர்
- ஈச்சிலம்பற்று
- பன்குளம் (மொறவெவ)

இதுவரை 8898 பயனாளிகள் பயனடைந்துள்ளனர்.

சுகாதாராமும் சுகவாழ்வும்

இதுவரை 13,999 பயனாளிகள் பின்வரும் பிரதேசச் செயலாளர் பிரிவுகளில் பயனடைந்துள்ளனர்.

- குச்சவெளி
- பட்டினமும் சூழலும்
- பன்குளம்( மொறவெவ)
- தம்பலகாமம்
- கந்தளாய்
- மூதூர்
- ஈச்சிலம்பற்று

குடிநீரும், மலசலகூடமும்.

இதுவரை 10,796 பயனாளிகள் பின்வரும் பிரதேசச் செயலாளர் பிரிவுகளில் பயனடைந்துள்ளனர்.

- குச்சவெளி
- பட்டினமும் சூழலும்
- பன்குளம்( மொறவெவ)
- தம்பலகாமம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- கந்தளாய்
- மூதூர்
- ஈச்சிலம்பற்று

## எச்ஐவி /எயிட்ஸ் (HIV/AIDS)

இதுவரை 2472 பயனாளிகள் பின்வரும் பிரதேசச் செயலாளர் பிரிவுகளில் பயனடைந்துள்ளனர்.

- குச்சவெளி
- பட்டினமும் சூழலும்
- பன்குளம்( மொறவெவ)
- தம்பலகாமம்
- கந்தளாய்
- மூதூர்
- ஈச்சிலம்பற்று

## வாழ்வாதாரம்

இதுவரை 1740 பயனாளிகள் பின்வரும் பிரதேசச் செயலாளர் பிரிவுகளில் பயனடைந்துள்ளனர்.

- குச்சவெளி
- பன்குளம்( மொறவெவ)
- மூதூர்
- ஈச்சிலம்பற்று

## சமூக வலுவூட்டல்

இதுவரை 772 பயனாளிகள் பின்வரும் பிரதேசச் செயலாளர் பிரிவுகளில் பயனடைந்துள்ளனர்.

- குச்சவெளி
- பன்குளம்( மொறவெவ)
- தம்பலகாமம்
- மூதூர்
- ஈச்சிலம்பற்று

## வீட்டுத்திட்டம் (நிரந்தரம் /தற்காலிகம்)

இதுவரை 1825 பயனாளிகள் பின்வரும் பிரதேசச் செயலாளர் பிரிவுகளில் பயனடைந்துள்ளனர்.

- பன்குளம்( மொறவெவ)
- மூதூர்
- ஈச்சிலம்பற்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதுவரை 2008 ம் ஆண்டு 43,575 பயனாளிகள் ஒபர் (சிலோன்) நிறுவனத்தினால் பயனடைந்துள்ளனர். இது உண்மையிலேயே ஒபர்(சிலோன்) நிறுவனத்தின் சாதனையாகும்.

பாடசாலைப் பாதுகாப்பு

பாடசாலைகளே அதிக உயிர்களையும், பௌதிக வளங்களையும் இழந்துள்ளதை அனர்த்த வரலாறுகள் காட்டுகின்றன. இலகுவில் பாதிப்புக்குள்ளாவதும் பாடசாலைகளே. எந்தவொரு ஆபத்துக்கள் வந்தாலும், மக்கள் பாதுகாப்புக்காக நாடுவது பாடசாலைகளைத்தான். எனவேதான் ஐக்கியநாடுகள் சபையின் கல்வி விஞ்ஞானக் கலாசார நிறுவனமான UNESCO வுடன் ISDR (International strategy for disaster reduction) அமையமும் இணைந்து 2006 2007 காலப்பகுதியைப் 'பாடசாலைகளைப் பாதுகாத்தல்' எனும் சிந்தனையை உலகக் கல்வி நிறுவனங்களிடையே தோற்றுவித்துள்ளன. சர்வதேச அனர்த்தக் குறைப்பு பாடசாலைகளைப் பாதுகாக்கும் கரிசனையில் அனர்த்த முகாமைத்துவக் கலைத்திட்டங்களையும், அவசரநிலைக் கல்விச் செயற்திட்ட ஏற்பாடுகளை முன்மொழிந்துள்ளது.

நமது நாட்டிலும் இயற்கை அனர்த்தங்களின்போதும், செயற்கை அனர்த்தங்களின் போதும் பாடசாலைச் சமூகந்தான் அதிகம் பாதிக்கப்படுகிறது. வடக்குக் கிழக்கில் போரினால் பாதிக்கப்பட்ட பள்ளி மாணவர்களின் எண்ணிக்கை எண்ணிலடங்காது. பாடசாலை மாணவர்களும், ஆசிரியர்களும், உயிரிழந்தனர். பாடசாலைகளும் அழிவுற்றன. அகதி முகாங்களாகப் பல பாடசாலைகள் இன்றும் உள்ளன. வன்னிநிலப்பரப்பில் விமானத்தாக்குதலாலும், எறிகணை வீச்சுக்களாலும் நித்தமும் செத்துக் கொண்டிருப்பது பாடசாலை மாணவர்களும், ஆசிரியர்களும். தாய்மார்களும்தான்.

பாடசாலைதான் அனைத்துச் செயற்பாடுகளுக்கும் அடித்தளமாகிறது. சமூகத்துக்குள் புகுவதற்கு நுழைவாயிலாக உள்ளது. மாணவர்கள் மிக இலகுவில் செய்திகளைச் சமூகத்துக்கு எடுத்துச் செல்பவர்கள். மாணவர்களைச் சமாதானத்தின் தூதுவர்களாக நாம் மாற்றவேண்டும். நல்ல எண்ணக்கருக்களை அவர்களது உள்ளங்களில் விதைக்க வேண்டும். அனர்த்தங்கள் பற்றிய விழிப்புணர்வுகளை பாடசாலை மட்டத்தில் ஏற்படுத்தி அவர்களைப் பங்காளிகளாக ஆக்கவேண்டும். செய்தி காவிகளாக விளங்கும் நமது மாணவர்களைச் செயல்வீரர்களாக்குவது நமது கைகளில்தான் உள்ளது. அனர்த்தங்களின் தோற்றங்கள், அவற்றினால் ஏற்படும் அல்லல்கள், அவலங்கள், உயிரிழப்புக்கள், சொத்திழப்புக்கள், இடப்பெயர்வுகள் போன்ற நெருக்கடி நிலைகளைப் புரிய வைக்கவேண்டும். நெருக்கடி நிலை தோன்றும் போது எவ்வாறு அவர்கள் செயற்பட வேண்டும் என்பதையிட்டுப் பயிற்சிகள் வழங்கவேண்டும். பாடசாலைகளுக்கு அரசும், அரசசார்பற்ற நிறுவனங்களும் வேண்டிய வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டும்.

கல்வி அமைச்சினதும், மாகாண, வலயக் கல்விப் பணிப்பாளர்களது அனுமதியுடனும். இத்தகைய எண்ணக் கருவைச் செயலில் காட்டி பாடசாலை மாணவர்களது உள்ளங்களில் பதியச்செய்து அனர்த்தங்களின் போது அவர்களது உயிர், உடமைகளைப் பாதுகாக்க ஒபர்(சிலோன்) நிறுவனம் 2007 முதல் தன்னை அர்ப்பணிப்போடு ஈடுபடுத்திப் பாடசாலை பாதுகாப்புச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயற்திட்டத்தை வகுத்து முன்னெடுத்துச் செல்கிறது. பாடசாலைகளிலும் கிராமங்களிலும் விழிப்புணர்வுகளையும் பயிற்சிகளையும் வழங்கி வருகிறது. திருகோணமலை மாவட்டத்தில் குச்சவெளி பட்டிணமும் சூழலும் மூதூர், ஈச்சழம்பற்று ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளிலுள்ள பாடசாலைகளுள் சிலவற்றை தேர்ந்தெடுது பாடசாலை பாதுகாப்புச் செயற்பாடுகளில் பயிற்சிகளை வழங்கி வருகிறது. பாடசாலைகளில் பாடசாலை பாதுகாப்பு மன்றங்களையும் செயலணிகளையும் உருவாக்கி அதனூடாக பின்வருவனவற்றை முன்னெடுத்து வருகிறது.

செயலணிகள்:

- முன்னெச்சரிக்னைச் செயலணி
- தேடிப் பாதுகாத்து அப்புறப்படுத்தும செயலணி.
- அவசர மதிப்பீட்டு, நிவாரணம் வழங்கும் செயலணி
- சுகாதாரம், முதலுதவி, நீர்வழங்கல் செயலணி
- சுயஉதவியும், பாதுகாப்பும் செயலணி.

அவசரகாலக் கல்வி. மாணவர் மன்றச் செயலணி.

இழந்த கல்வியை மீட்டெடுக்கும் பணியில் ஈடுபட்டு பின்தங்கிய பாடசாலை மாணவர்களுக்கு மேலதிக வகுப்புக்களை நடத்தியும். முன்னோடிப் பரீட்சைகள் வைத்தும் கல்வியில் மேம்படடைய உழைக்கிறது. முன்பள்ளிக் கல்வியில் நாட்டங்கொண்டு. முன்பள்ளிகளை அமைத்து, முன்பள்ளி ஆசிரியர்களுக்குப் பயிற்சிகளை வழங்கி, அவர்களுக்குரிய கொடுப்பனவுகளையும் வழங்கி வருகிறது. முன்பள்ளிச் சிறார்களுக்குச் சீருடையும், போசாக்கு உணவும் வழங்கி வளப்படுத்துகிறது.

ஆசிரியர் பற்றாக் குறை ஓபர்(சிலோன்) நிறுவனம் சேவைசெய்யும் மாவட்டங்களில் பெரியதொரு பிரச்சினையாக உள்ளது. இடம்பெயர்ந்து மீளக்குடியேறிய மக்களது வாழ்க்கையில் மறு மலர்ச்சியைக் காணவேண்டுமாயின் அவர்களது பிள்ளைகளுக்கு சிறந்ததொரு எதிர்காலத்தை அமைத்துக் கொடுக்கவேண்டும். அதற்குக் கல்விதான் சிறந்ததொரு சாதனமாகும். ஆசிரியர் பற்றாக்குறையினைப் போக்குவதற்காக வலயக்கல்விப் பணிப்பாளர்களது அனுமதியுடன் தகுதியான தொண்டர்களுக்குப் பயிற்சி வழங்கி அவர்களுக்குக் கொடுப்பனவு வழங்கி பாடசாலைகளில் கல்விச் சேவைசெய்வதற்கு உதவுகிறது.

மீள்குடியேற்றப் பிரதேசங்களில் தற்காலிகக் கட்டிடங்களைக் கட்டியும், தளபாட வசதிகள், குடிநீர் வசதிகள், மலசலகூடங்கள் அமைத்தும் கல்விச் சேவையை ஆற்றி வருகிறது. பாடசாலைகளின் பௌதீக வளத்தை மேம்படுத்துமுகமாகக் கட்டிடங்களைப் புனருத்தாரணம் செய்தும், புதிய கட்டிடங்களைக் கட்டியும் சேவை செய்கிறது.

இவற்றைவிடவும் வீட்டுத்திட்டம், வாழ்வாதாரம், கட்டுமானப்பணிகள், குடிநீர் மருத்துவ, சுகாதார மலசலகூட வசதிகள், போன்ற பல சேவைகளைப் புரிந்து வருகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்நூலாசிரியர்.........



திரு. சண்முகம் அருளானந்தம் அவர்கள், திருகோணமலை மாவட்டத்தின் ஆலங்கேணியைப் பிறப்பிடமாகக் கொண்டவர். வடக்கு கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சில் கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றினார். அவரின் காலத்தில் மாகாணமட்ட தமிழ்மொழித் தினத்தைச் சிறப்பாக நடாத்தி சுவைத்தேன், பார்த்தேன், மலைத்தேன் எனப்பல சிறப்பு விழாமலர்களை வெளியிட்டார். தமிழ்மொழித்தினப் போட்டிகளில் அகில இலங்கை மட்டத்தில் முதல் மூன்று இடங்களில் வெற்றி பெற்ற வடக்கு கிழக்கு மாகாணச் சிறார்கள் அனைவருக்கும் வங்கிகளில் சேமிப்புக் கணக்குகளைத் தொடங்கி பணப்பரிசுகளை வழங்கி ஊக்கப்படுத்தினார்.

ஓய்வுபெற்ற இவர் பல அரசசார்பற்ற நிறுவனங்களில் கடமையாற்றி இன்று ஓபர்(சிலோன்) நிறுவனத்தில் கல்வி, அனர்த்தமுகாமைத்துவ ஆலோசகராகச் சேவைசெய்கிறார். ஓபர்(சிலோன்) நிறுவனத்தின் தலைவி செல்வி.எஸ்.சூரியகுமாரி அவர்களது சிறந்த வழிகாட்டலில் நிறுவனம் அனைத்துச் செயற்திட்டங்களிலும் அனர்த்தத்தில் இருந்து விடுபடும் வகையில் செயற்படுத்தி வருவதையும், அனர்த்தத்தில் இருந்து விடுதலை பெறுவதையே தனது முன்னுரிமையாகக் கொண்டிருப்பதையும் அவதானிக்கலாம். நாடறிந்த எழுத்தாளரும், பலநூல்களுக்குப் பரிசுகளும், கலாபூஷண விருதும் பெற்ற ஒருவர் ஓபர்(சிலோன்) நிறுவனத்தில் சேவைசெய்வது எங்களுக்கெல்லாம் பெருமையாகும். சிறுவர்களுக்காகப் பல நூல்களை எழுதியுள்ள இவர் இதுவரை சுமார் இருபத்தெட்டு நூல்களை எழுதியுள்ளார்.

இந்தநூல் அனர்த்தம் பற்றிய செய்திகளையும், வருமுன் காக்கும் திட்டங்களையும் விபரிக்கின்றது. அறிவு, திறன். மனப்பாங்கை வளர்க்கும் நோக்கில் எழுதப்பட்டுள்ளது. தமிழ்கூறும் நல்லுலகம் இவரது நூல்களை வாங்கிப் படித்துப் பயன்பெற வேண்டும். இன்னும் பலநூல்களை எழுதி வெளியிட வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

த.பாலகங்காதரன்
நிர்வாக அலுவலர்
ஓபர்(சிலோன்)
திருகோணமலை

ISBN : 978-955-98211-9-9

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

...ERS (PVT) LTD. TEL : 2439401, 4997221